விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை (27.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜெனிவா தீர்மானத்தால் அச்சப்பட எதுவுமில்லை!

## அமைச்சர் பீரிஸ் விளக்கம்



(கொழும்பு), ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்ட போதிலும் கூட இலங்கை அச்சப்படுவதற்கு எதுவும் இல்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லப்படாததனால் இலங்கை மீது ஐ.நா சபையினால் தடைகள் எதனையும் விதிக்க முடியாது எனவும் அமைச்சர் பீரிஸ் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டமான் இராஜினாமா?



இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் பொதுச் செயலாளரும் கால் நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தனது அமைச்சு பதவியிலிருந்து இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். (24ஆம் பக்கழ் பார்க்க)

# எங்களின் அனுமதி இன்றி எதுவும் செய்துவிட முடியாது

## ஐ.நாவுக்கு அமைச்சர் வீராப்பு



ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால் இலங்கையின் அனுமதி இல்லாமல் இவ்விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் எதனையும் செய்துவிட முடியாது என மனித உரிமைகள் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவரும் அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா கூட்டத் தொடருக்குச் சென்றிருந்த தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய அமைச்சர் மகிந்த சமரசிங்க கொழும்பு திரும்பிய பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சம்மதமின்றி தொழில்நுட்ப ஆலோசனைகள் உட்பட எந்தவிதமான உதவிகளையும் மனித உரிமைகள் ஆணையாளரினால் வழங்கமுடியாது எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார். (24ஆம் பக்கம் பார்க்க)

## 384 முன்னாள் போராளிகள் வியாழனன்று விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் 384 முன்னாள் உறுப்பினர்களை சமூகமயப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இவர்கள் சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

விடுதலை செய்யப்படவுள்ளவர்களில் 67 பேர் முன்னாள் போராளிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான வைபவம் கொழும்பு இராமகிருஸ்ணமிஷன் (23ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. சா/த பரீட்சை பெறுபேறு வெளியானது

### வேம்படியில் 18 பேர் '9 ஏ' சித்தி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.இதில் யாழ்.மாவட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அதிகூடிய 9ஏகளைப் பெற்றுள்ளது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் தோற்றிய 14 பேரும், ஆங்கில மொழி மூலம் தோற்றியோரில் 4 பேரும் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரியில் 15 பேரும், கொக்குவில் இந்து, சாவகச்சேரி இந்து ஆகிய பாடசாலைகளில் தலா 3 பேரும் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர். (எ-1)

# ஜெனிவாத் தோல்விக்கு இந்தியாவே காரணம்!

## சமாதானத்தை ஏற்க இலங்கை மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் அனுசரணையுடன் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் வரைவை இலங்கை அரசுக்கு சார்பான முறையில் தாம் மாற்றியமைத்ததாக இந்தியா உரிமை கோரியிருப்பதை கொழும்பு திட்டவட்டமாக மறுத்திருக்கிறது.

அத்துடன், ஜெனிவாவில் தமக்கு ஏற்பட்ட தோல்விக்கு இந்தியாதான் காரணம் எனவும் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஜெனிவா தீர்மானத்தையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் உருவாகியுள்ள முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள இராஜதந்திர முயற்சிகள் அனைத்தையும் திட்டவட்டமாக நிராகரிப்பதாக இலங்கையின் இந்தச் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற விசாரணை முன்னேற்றகரமான நிலையில்!

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கைப் போரின் இறுதிக் கால கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அரசினால் அமைக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றத்துக்கு காலவரையறை எதுவும் வழங்கப்படவில்லை என இராணுவம் தெரிவித்திருக்கிறது.

போரின் இறுதிக் காலப் பகுதியில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவ அத்துமீறல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்திருந்தது.

இதன்படி, (24ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் தாக்குதலிலேயே வில்பத்தில் விமானம் விழுந்து நொருங்கியது

### விசாரணைகளில் கண்டறிவு

(கொழும்பு)

2000ஆம் ஆண்டு பாதுகாப்பு படை உத்தியோகத்தர்கள் உட்பட 40 பேருடன் ஏ.என்.-26 ரக விமானமொன்று வில்பத்து காட்டில் வீழ்ந்தமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலே காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக வீழ்ந்ததாக அப்போது நம்பப்பட்டது. எனினும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவர் இவ்விமானத்தை சுட்டுவீழ்த்தியதாக ஒப்புக் கொண்டதையடுத்து இவ் விமான அனர்த்தம் (23ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ள முள்ளிவாய்க்காலில் கைதான ஆசிரியரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

விடுதலைப் புலிகள் என்ற அமைப்போடு தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம், குறித்த நபரின் சுயவிருப்பின்படி வழங்கப்படவில்லை எனவும் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க பதிவு செய்யப்படவில்லை எனவும் கூறப்பட்டு யாழ்.மேல்நீதிமன்றத்தால் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானாற்கிரிநொச்சியினைச்சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையும் கணித பாட ஆசிரியருமான சீவரத்தினம் பாலதயாகரன் (வயது-42) என்பவர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி வெள்ள முள்ளிவாய்க்காலில் பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினரால் பிடிக்கப்பட்டு 20 மாதங்களாக பூசா முகாமில் வைக்கப்பட்டு யாழ்.மேல்நீதிமன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு நேற்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் குறித்த நபருக்கெதிராக இருந்த ஒரேயொரு சான்றான குறித்தவரினால் கொழும்பு பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் அளித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை ஒரு சான்றாக மன்றில் சமர்ப்பித்த போது குறித்த நபர் சார்பில் ஆஜராகி சட்டத்தரணி றெமீடியஸ், இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இவரினால் விரும்பி சுதந்திரமாக அளிக்கவில்லை என்றும் முக்கியமாக குறித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முன்னால் அல்லாது வேறு பொலிஸ் அத்தியட்சகருக்கு முன் இவர் மீது பலாத்காரம் செய்யப்பட்டே விருப்பத்திற்கு மாறாக கையொப்பமிடப்பட்டது எனவும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

விசாரணையின் பின்னர் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயேச்சையாக வழங்கப்படவில்லை எனவும் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க பதிவு செய்யப்படவில்லை என்றும் ஆகவே இதனை ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறப்பட்டு யாழ். மேல்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் அரச சட்டத்தரணி ஆஜராகவில்லை என்பதாலும் குறித்த நபருக்கு எதிராக வேறு குற்றச்சான்றுகள் இருக்கின்றனவா என்பதனை ஆராய்வதற்காக வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-4)

## வாகனம் விபத்து 6 பேர் படுகாயம்

யாழ்.அரச அதிபரின் பாதுகாப்புக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினரின் வாகனம் சங்குவேலி பகுதியில் விபத்தில் சிக்கியதில் ஆறு படையினர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.சங்குவேலிப் பகுதியில் அரச அதிபர் இமெல்டா சுகுமாரின் வாகனத்திற்குப் பின்னால் சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினரின் வாகனம் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மரம் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தின் போது வாகனத்தில் இருந்த அதிரடிப் படையினர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எம்.கமகே (வயது -50), எம்.குணதிலக (வயது -26), எம்.சமிந்த (வயது -28), ஆர்.டி.கே.நாமல (வயது -25), எ.எம்.பி.எஸ்.குலசேகர (வயது -25), எம்.சந்தான (வயது-29) ஆகிய படையினரே படுகாயமடைந்தவர்களாவர். (எ-6,11)

## சிறைக் கைதிகள் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்.சிறைச்சாலையில் கைதிகள் சிலரின் மீது சிறைக்காவலர்கள் தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்பட்டது. சிறைக்கைதி ஒருவருக்கு, வெளியிலிருந்து கொண்டுவரப்படும் உணவுப்பொருட்கள் எவையும் வழங்கக் கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததாகவும் எனினும் அவருக்கு உணவு பொதி எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அது தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில்பிரஸ்தாபகைதியுடன் இணைந்து சிலர் ரகளையில் ஈடுபட்டபோது அதனைத்தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6)

## காளை மாட்டை பெற விரும்புவோர் உரியவருடன் தொடர்பு கொள்ளலாம்

### அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக்காக வெட்டப்படவிருந்து பாதுகாக்கப்பட்ட காளை மாட்டை பெறவிரும்புவோர் உரியவருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி அன்று திருநெல்வேலி கால்நடை பண்ணையில் ஏலத்திற் கொள்வனவு செய்யப்பட்ட காளை மாடு இறைச்சிக்காக வெட்டப்படவிருந்ததை அறிந்த பொது மக்கள், சமயப்பிரதிநிதிகள் மற்றும் கருணையுள்ளம் கொண்ட பலரினதும் வேண்டுகோளுக்கிணங்க, பொலிஸாரின் கட்டளையின் பிரகாரம் தற்போது அதனை வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இக்காளை மாடு வயது முதிர்ந்த காரணத்தினாலேயே அதனை உரிய சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக ஏலத்தில் விற்பனை செய்வதற்கு யாழ்.கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

இக்காளை மாட்டை இறைச்சிக்காக வெட்டாது தொடர்ந்து பாதுகாப்பதற்கு அக்கறையுடையோர் தனக்கு ஏற்பட்ட செலவினைச் செலுத்தி பொறுப்பேற்றுக்கொள்ளலாம் என அதனைக் கொள்வனவு செய்த உரிமையாளர் பொலிஸார் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

எனவே இக்காளைமாட்டினைக் கொள்வனவு செய்து பாதுகாப்பதற்கு விருப்புடையோர் உரியவருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துக் கொள்வதுடன், குறித்த மாட்டின் உயிர்பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தினையும் வழங்க வேண்டும் எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஏ)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## அதிபர்கள் கூட்டம் வியாழக்கிழமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கு நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும்,

இக் கூட்டம் நாளை மறுதினம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். (ந)

புதிய பிரிவு ஆரம்பம்
A/L - 2014
புவியியல் – N. BABU
♦ ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
♦ மாதாந்தம் பரீட்சைகள் நடைபெறும்
C.C.A சுன்னாகம்
DMI ஸ்ரான்லி வீதி - யாழ்.
பிற்ஸ்மன் மானிப்பாய்
கொலம்பஸ் கோப்பாய்
ஆட்ஸ் அக்கடமி புத்தூர்
(8024)

வேலைவாய்ப்பு
இலங்கையில் 17 வருடமாக முகாமைத்துவதுறையில் கனேடிய அனுசரணையுடன் இயங்கி கொண்டிருக்கும் இனோவெச் நிறுவனத்தின் வவுனியா கிளைக்கு பலதுறைகளில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு உண்டு.
தகைமை: O/L,A/L
தொடர்புகளுக்கு:0247900171,0770308484
0774122203
(7785)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவமணி (சமாதான நீதவான்)

(வர்த்தகர்- மாணிக்கம் பிறதேர்ஸ் மணி மாக்கட் கொழும்பு)



வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவமணி நேற்று 26.03.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரவதனா (நிர்மலா) வின் பாசமிகு கணவரும் விவேக்காவின் அன்புத் தந்தையும் காலம் சென்ற சிவசம்பு மற்றும் கனகம்மா (மண்டைதீவு) ஆகியோரின் மருமகனும் மாசிலாமணி (கனடா- முன்னாள் தலைவர் ப.நோ.கூ. சங்கம், வேலணை), நடனசிகாமணி (வேலணை), நடராஜாமணி (கா்லி), புஸ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினியார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காஞ்சனமாலா (கனடா), சிவகலை (வெள்ளவத்தை), ஞானசொரூபி, சுப்பிரமணியம் (கனடா), குகாநந்தி (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), விஜயன் (கனடா) மற்றும் மணி, மலர், தவநாயகி, உதயன், மோகன், உசா, கண்ணன், ஆனந்தி, பாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"கனகாபுரி"
6-ம் வட்டாரம், மண்டைதீவு.

தகவல்: சி. சந்திரவதனா (மனைவி) (க)

## விசேட அறிவித்தல்

எமது நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற சேவை முகவராக செயற்பட்டு வந்த கீழ்க் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் சேவை முகவர் உரிமையானது 20.01.2012 ஆம் திகதி முதல் இரத்து செய்யப்பட்டுள்ளதால் அந்நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுரேஷ் மோட்டர்ஸ் அன்ட் இன்ஜினியரிங்
(அதிகாரம் பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிச் சேவை முகவர் )
நுணாவில் மேற்கு,

(C-6178)

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02.

# இன்று ஒரு தகவல்

## பயனுள்ள வாழ்க்கை

ஒரு வசதி படைத்த குடும்பத்து இளைஞன். அவனுக்கு வாழ்க்கையிலே நிம்மதி இல்லை. வாழ்க்கையே வெறுத்துப்போய்விட்டது. என்ன செய்யலாமென யோசித்தான்.

ஒரு குருவைத்தேடிப் போனான். அதுவும் ஒரு ஜென்குரு. அவரிடம், தான் வந்த விபரத்தைக்கூறி ஏதாவது வழி சொல்லுங்கள் சுவாமி என்று கேட்டான்.

"சரி... அதற்கு முன்னர் உன்னைப் பற்றி சற்று சொல் பார்க்கலாம்... எத்தனை வகுப்பு படித்திருக்கிறாய்... என்ன தெரியும் உனக்கு?" என்று கேட்டார்.

"சுவாமி... நான் ஒழுங்காகப்படிக்கவில்லை... எதுவுமே தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். சதுரங்கம் விளையாடத் தெரியும். அவ்வளவுதான்" என்றார்.

குரு சற்று யோசனை செய்தார். அருகில் இருந்த சீடனை அழைத்தார். அவனிடம் ஒரு பெயரைச் சொல்லி "நீ உடனே போய் அந்த பிக்குவை அழைத்துக் கொண்டு இங்கே வா... வரும்போது ஒரு சதுரங்கப் பலகையும் அதிலே விளையாடுவதற்கு உரிய காய்களையும் எடுத்துக் கொண்டு வா. அப்படியே அனைவரையும் இங்கே வரச் சொல்" என்றார்.

சிறிது நேரத்திலே அனைவரும் வந்து சேர்ந்தார்கள். அங்கே சதுரங்கப் பலகை ஒன்று வைக்கப்பட்டது. அந்தப்பிக்குவும் வந்து சேர்ந்தார். குரு முன்னால் அடக்கமாக நின்றார். குரு அவரை அருகில் அழைத்து "சற்று நேரத்திற்கு சதுரங்கம் விளையாட வேண்டும்" என்றார்.

அந்தப் பிக்குவிற்கு சதுரங்கம் என்றால் என்ன என்பது தெரியாது... இருந்தாலும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

குரு சொன்னார், பிக்குவே! நீர் என்னுடைய சீடர். என் பேச்சை மறுக்காதவர். உம்முடைய அடக்கத்தையும் பணிவையும் நான் அறிவேன். எனக்காக உயிரையும் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறீர். இப்போது அதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

நீர் இந்த இளைஞனுடன் சதுரங்கம் விளையாட வேண்டும். தோற்றுப் போனால் வாளால் தலையை சீவிடுவேன். ஆனால் இறந்தால் உமக்கு சொர்க்கம் நிச்சயம். அதேவேளை நீங்கள் வெற்றி பெற்று, அந்த இளைஞன் தோற்றுப் போனால் இளைஞனின் தலையை சீவிடுவேன். சரி... இப்போது நீங்கள் ஆட ஆரம்பிக்கலாம். என்றார்.

ஆட்டம் ஆரம்பமானது. அந்தப்பிக்கு முகத்திலே சலனமே இல்லை... உயிர் துறப்பதைப் பற்றி கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இது குருவின் கட்டளை. ஏதோவொரு காயை நகர்த்திக் கொண்டிருந்தார்.

சுற்றியிருந்த சீடர்கள் முகத்திலே திகில், பயம், பாவம், பிக்குவின் நிலைமை இப்படி ஆகிவிட்டதே என்ற கவலை. குரு கையிலே வாள்... பளபளப்பாக தயாராக இருந்தது.

பிக்குவிற்கு சதுரங்கம் விளையாடுவது தெரியாது என்று இளைஞனுக்கு தெரிந்து விட்டது. அவனுக்கு உற்சாகம் வந்து விட்டது. சுறுசுறுப்பாக காய்களை நகர்த்த ஆரம்பித்தான். பிக்கு தோல்வியைத் தழுவ ஆரம்பித்தார். சுற்றியிருந்த சீடர்கள் முகத்திலே சொல்ல முடியாத வேதனை.

இளைஞன் முகத்திலே மகிழ்ச்சி. நிமிர்ந்து பார்த்தான், எதிரிலே இருந்த பிக்குவை. அவர் முகத்தைப் பார்த்ததும் இவனுக்கு மிகவும் பாவமாக இருந்தது.

அந்த முகத்திலேதான் எவ்வளவு சாந்தம். இனிமை தெரிகிறது. கண்களிலே கருணை. இவர் சாகத்தான் வேண்டுமா? இளைஞன் யோசிக்க ஆரம்பித்தான்.

நான் இறந்து போனால் யாருக்கும் எந்தவிதமான இழப்பும் கிடையாது. ஆனால் ஒரு துறவியும் அதுவும் கருணை மிக்க இந்த பிக்குவின் உயிர் பிரிந்தால் அது எவ்வளவு பெரிய இழப்பு? இதற்கு நாம் பெரிய காரணமாக இருப்பதா? இப்படியாக நினைத்துப் பார்த்தான் அந்த இளைஞன்.

உடனே கன்னாபின்னா என்று விளையாட ஆரம்பித்தான். தான் தோற்றுப் போகவேண்டும் என்பதற்காக...

ஆட்டத்தை கூர்ந்து கவனித்த குரு சதுரங்கப்பலகையை கவிழ்த்துத் தள்ளினார். காய்கள் எல்லாம் சிதறிப் போய் விட்டது. எல்லோரின் முகத்திலும் திகைப்பு குடி கொண்டது.

"யாருக்கும் வெற்றி தோல்வி இல்லையென்று அறிவிக்கிறேன்" என்றார் குரு. "தம்பி உன்னுடைய மன ஒருமைப்பாட்டைக் கவனித்தேன். முழுமையாக ஆட்டத்திலே மூழ்கிப் போனதையும் பார்த்தேன்" கடைசியிலே உயிர்த் தியாகம் செய்ய முடிவெடுத்து தாறுமாறாக விளையாட ஆரம்பித்தது ஆகியவற்றையும் கவனித்தேன்.

வாழ்க்கை என்பது என்ன என்பதும்... எந்த வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கை என்பதும் உனக்குப் புரிந்து விட்டது. இப்போது நீ அதைப் புரிந்து கொண்டாய். உனது மனம் பக்குவ நிலையை அடைந்து விட்டது. தியாகம் உன் இதயத்திலே குடி கொண்டது.

நீ இனிமேல் சிறிது காலம் இங்கே இருந்து விட்டு போகலாம். உன்னுடைய வாழ்வு பயனுள்ள வாழ்வாகும் என்றார் அந்த குரு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உள்ளூர் பேருந்து சேவை நேரங்களில் மாற்றம் அவசியம்

## பயணிகள் தெரிவிப்பு

யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் வடக்கு மாகாணத்தின் போக்குவரத்து சேவையானது பழைய நிலையிலே உள்ளது. உள்ளூர் சேவைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இதனால் பொதுமக்கள் தனியார் மற்றும் அரச பணியாளர்களும் பாரிய சிக்கலை எதிர்நோக்குகின்றார்கள். பேருந்து சேவை நிறுவனங்களோ தங்கள் சேவையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இலாப நோக்கத்திற்காக இயங்கும் பேருந்து சேவைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனால், உள்ளூர் மட்ட சேவைகளானது மாற்றமேற்படுத்தாத பழைய காலத்திற்குரிய மந்தமான சேவைகளையே வழங்குகின்றது.

உள்ளூர்சேவைகளாக காரைநகரிலிருந்து தனியார் பேருந்து அதிகாலை 4.40 மணிக்கும், மாதகலிலிருந்து 4.50 மணிக்கும் ஆரம்பமாகின்றன. இ.போ.சபை சேவைகள் 5.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. இச்சேவைகளை பயன்படுத்தும் ஒருபயணி காலைஆறு மணிக்கே பிரதான பஸ் நிலையத்தையடைய முடியும். அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை போக்குவரத்து சபையின் வெளியூர் பஸ் சேவைகள் அதிகாலை 4.15 மொனராகலைக்கும், 4.30 கண்டிக்கும் தனியார் போக்குவரத்து சேவைகள் வவுனியா, தியத்தலாவ கதிர்காமம் என ஆரம்பமாகி தொடர்ந்தும் சேவைகள் நடைபெறுகின்றது. இச்சேவைகளை பயன்படுத்த வேண்டுமாயின் தனியான பிரயாண (ஓட்டோ/மோட்டார் சைக்கிள்) ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டிய நிலையே பயணிகளுக்குள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலைகள் காலை 8மணிக்கும் அரச சேவை தனியார் கூட்டுறவு திணைக்களங்கள் காலை 8.30க்கும் ஆரம்பமாகின்றன. கணனி கைவிரல் பதித்தல் செயற்பாடுகள் மூலம் வரவுகள் உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் நெடுங்கேணி பிரதேசத்தில் கடமையாற்றும் பாடசாலை ஆசிரியர்கள், அரச செயலக பணியாளர்கள் எவ்வாறு இச் சேவை களை பயன்படுத்தி பயணம்செய்து உரிய நேரத்திற்கு வேலை நிலையத்தை சென்றடைய முடியும்? இதனால்தான் பின்தங்கிய பிரதேசத்தில் பணியாற்றாது இடமாற்றத்திற்கான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய நிலையும் இடமாற்றத்தினைவிரும்பாத நிலையும் காணப்படுகின்றது.

இரவில் யாழ்ப்பாணத்தின் உள்ளூர்சேவைகளில் தனியார் சேவைகள் இரவு 7.30 மணிக்கும், இ.போ.ச சேவைகள் 8மணிக்கும் நிறைவு பெறுகின்றன. அதிலும் இ.போ.சபையின்பேருந்துகள் காரைநகர் 782, காரைநகர் 786, இளவாலை 788 ஆகியன சரியாக இரவு 8 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்கின்றன.

மாலை 4.30 மணிக்கு அலுவலக கடமையை முடித்து வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்.பிரயாணம் செய்யும் அலுவலகர்கள், பொதுப்பயணிகள் 8 மணிக்கு பேருந்து நிலையத்தை அடையாவிடின் தனியான பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டிய அவல நிலையே காணப்படுகின்றது.

எனவே இப்பயணிகளின் நலன் கருதி குறிப்பிட்ட பேருந்து சேவைகளை மாற்றியமைத்து தருமாறு மக்கள் சம்பந் தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-7)

# இராசி பலன்

*27.03.2012*
*(பங்குனி 14, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*பஞ்சமி பின்னிரவு 6.06 மணிவரை*
*கார்த்திகை முன்னிரவு 10.39 மணிவரை*
*இராகுகாலம் 3.14- 4.44 மணிவரை*
*சுபநேரம் 10.44-12.14 மணிவரை*
*சித்தாமிர்தம், கார்த்திகை விரதம்*

**மேடம்** விடியும் பொழுது நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சயன சுகமுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**இடபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பணம் பற்றிய கவலை தீரும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** ஆறுமுகப்பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் பயணமொன்று இடம் பெறலாம்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்று நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் முன்னேற்றம் காணப்படும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கன்னி** திடீர் பயணங்களால் பலனுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உடல் உழைப்பால் உயர்வடைவீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தேவையற்ற பயணம் ஏற்படலாம்.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, போசன சுகமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவான நாள், பிறருக்கு உதவ முன்வருவீர்கள்.

**விருச்சிகம்** வாய்ப்புக்கள் வந்து சேரும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், பயணங்களால் நன்மையுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** சத்ரு ஜெயமுண்டு, செய் தொழிலில் மேன்மையடைவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், எடுத்த காரியம் கைகூடும், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், சுப செலவுக்ள் அதிகரிக்கும்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், கந்தன் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், பொருளாதார நிலை திருப்திதரும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 35 | 40 | 40 |
| தக்காளி | 15 | 30 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 15 | 10 | 30 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 30 | 20 | 35 |
| புடோல் | 25 | 60 | 30 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-55 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 70 |
| பயற்றங்காய் | 70 | 80 | 90 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200-250 | 300 | 200-350 |
| போஞ்சி | 40 | 70 | 60 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30 |
| வெங்காயப்பூ | - | 90 | - |

## பொதுஅறிவுப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சர சாலை பொதுநூலகத்தினால் நூலக மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் வாசகர்களுக்கான பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் நூலக எல்லைக்குட்பட்ட வாசகர்களைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## கள விஜயம்

(யாழ்ப்பாணம்)

இயற்கை ஊக்குவிப்பு கழக ஆசிரியர்களுக்கான பறவைகளை ஆய்வியல் செய்யும் கள விஜயம் இன்று செவ்வாய்க்கிழமை 7 மணிக்கு காக்கைதீவு, வாதரவத்தைவெளி, சரசாலைக்குருவிக்காடு, வல்லைவெளி மண்டைதீவு, ஆரியகுளம் ஆகிய பகுதிகளில் இடம்பெறும்.

இலங்கை களப்பறவையியல் குழுவின் நெறிப்படுத்தலுடன் சிறுவர் மகிழ்வகம், தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-4)

# இந்துமதத்தின் பெருமைபேசும் சிறுநூல்களும் வெளிவரவேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

இந்துமதத்தை இலகுவாக அறிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் சிறுசிறு புத்தகங்களை வெளியீடு செய்யவேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி வசந்தி அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் எழுதிய இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம்- சித்தாந்தம் கூறும் கடவுள் கொள்கை, பண்டிதர் த. சுப்பிரமணியம் எழுதிய சைவ புண்ணியகாலம் (மறுபதிப்பு) ஆகிய நூல்களின் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் மாலை அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பிரந்தியக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகில இலங்கை இந்துமாமன்றம் ஆலய வெளியீட்டகத்துடன் இணைந்து இந்த இரண்டு நூல்களையும் வெளியீடு செய்ய முன்வந்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறான நூல்களை வெளியீடு செய்யப்பலரும் பின்னடிக்கும் காலத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் முன்வந்து இந்த நூல்களை வெளியீடு செய்துள்ளது.

இந்துமதக் கொள்கைகளை நூல்களாக வெளியீடு செய்வதன்மூலம் மதத்தினை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

மேலும் இந்துமதம் தொடர்பாக வெளியிடப்படும் புத்தகங்கள் நீண்டபகுதியை உள்ளடக்கியதாகவுள்ளது.


கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட புத்தகங்களை மீள்பதிவு செய்வதோடு சிறுசிறு புத்தகங்களையும் வெளியிடவேண்டும்.

அத்தோடு வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இந்துமதத்தை இலகுவாகக் கற்பதற்கும் இந்தச் சிறுசிறு புத்தகங்கள் உதவியாக இருக்கும். இதுதவிர இவ்வாறான புத்தகங்களை இணையத்தளத்திலும் வெளியிடவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் இந்திய வதிவிட இராஜதந்திர பிரதிநிதி அ.ராஜமாணிக்கம், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் யாழ்.இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கலாநிதி சைவ ஞானபானு, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவரும் இந்து மாமன்ற வெளியீட்டுக்குழுத்தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி அ.சண்முகதாஸ் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-6)

யாழ்.செய்திகள்...





நயினை நாகபூசணி அம்மன் மஹா கும்பாபிஷேக மலர் நாகேஸ்வரி அருளமுதம் வெளியீட்டு விழா ஆலய கோபுரவாயில் முன்றலில் அறங்காவலர் சபைத் தலைவர் தியாகராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழக பேராசிரியர் விஜயலட்சுமி ராமசாமி நயப்புரையாற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான என். சண்முகலிங்கன் வெளியீட்டுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணுவில், உப்புமடம், கோண்டாவில், சுதுமலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்படடிருக்கும். (7)

# சுயதொழிலுக்கான 2 ஆம் கட்ட கொடுப்பனவுக்கு தெரிவானோர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுயதொழிலுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவை பெற்ற 27 பயனாளிகளுக்கான 2 ஆம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்குவதற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரம் வருமாறு,

க. சுபத்திரா(கைதடி தெற்கு), கி. கிருஷ்ணகரன் (கைதடி மத்தி), ச. பாலேஸ்வரி (கைதடி தெற்கு), ஜெ. கலைமகள் ( கைதடி நாவற்குழி), பொ. பரமேஸ்வரி(மறவன்புலோ), இ. சிவகுமார் (சங்கத்தானை), க. ரவிசங்கர் (கோவிற்குடியிருப்பு), தி. நவநாயகி (கோவிற்குடியிருப்பு), நி. சுபாசினி ( கோவிற்குடியிருப்பு), ச. சௌந்தினி ( கோவிற்குடியிருப்பு), செ. சந்திரசேனன் ( கொடிகாமம்), அ.ஜீவராணி (கல்வயல்), நா. சுந்தரலிங்கம் (நுணாவில் கிழக்கு), பா. லில்லி (நுணாவில் மத்தி), ஜீ. ஞானசோதி (நுணாவில் மேற்கு), இ.தங்கம்மா(நுணாவில் மேற்கு), க.சுரேஸ்குமார் (நுணாவில் மேற்கு), ம. மோகன் (மட்டுவில் தெற்கு), பி. உதயதர்சினி (மீசாலை வடக்கு), சி. கிருசா (கச்சாய் தெற்கு), சி. நாகமுத்து (தவசிக்குளம்), க.சரோஜாதேவி ( கொடிகாமம்), க. ஞானகுரு (கெற்பேலி), ஐ.நி. அன்றனிற்றா(மிருசுவில் தெற்கு), நா. நாகரஞ்சனி (மந்துவில் கிழக்கு), ந. சசிகலா (மந்துவில் கிழக்கு), து. மதிவதனி (மந்துவில் கிழக்கு)

மேற்குறித்த பயனாளிகள் தமது தேசிய அட்டையான அட்டை, குடும்ப அட்டை சகிதம் தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு வருகை தந்து தமக்குரிய காசோலையை பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

இப்பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, வியாபாரம் போன்ற தொழில் முயற்சிக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (அ-3-29)

# உலக நாடக தினவிழாவும் நாடக நூல் வெளியீடும்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உலக நாடக தின விழாவும் நாடக நூல் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பீடாதிபதி எஸ்.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமறை கலாமன்ற இயக்குநர் அருட் கலாநிதி என். மரியசேவியர் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன் போது த.இ.கமலநாதனின் எழுத்துரு நெறியாள்கையில் எனக்கும் வலிக்கும், நேசமும் வைத்தனையோ? என்னும் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

அத்துடன் ஆச்சி அச்சாப் பாட்டி என்னும் சிறுவர் நாடக நூலும் வெளியிடப்படவுள்ளது. இந்நூலுக்கான வெளியீட்டுரையை கலாநிதி க.கலாமணி வழங்கவுள்ளார்.

இந்நாடக நூலானது யாழ். தேசிய கல்வியற்கல்லூரியின் குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழாவில் ஆற்றுகை செய்யப்பட்ட ஏழு நாடகங்களின் தொகுப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. ( அ-7)

# நிறுத்தல் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சிறுவியாபார நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு இவ்வருடத்திற்குரிய முத்திரையிடும் பணிகள் 4 நாட்கள் நடைபெறவுள்ளன.

நகர சபைக்கட்டடத்தில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்பணிகள் இன்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் 30 ஆம்திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

மேற்படி உபகரணங்களுக்கு முத்திரையிட்டு எதிர்காலத்தில் இடம்பெறும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (அ-3-29)

# ஊடக கற்கைநெறியில் 100 வீத மாணவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிய பாடமாக அறிமுகம் செய்யப்பட்ட தொடர்பாடல் ஊடகக் கற்கைநெறியில் 100 வீதம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.2011 க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இந்தப் பெறுபேற்றின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2010 ஆம் ஆண்டில் புதிய பாடமாக அறிமுகம் செய்யப்பட்ட தொடர்பாடல் ஊடகக் கற்கை நெறியில் 15 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியிருந்தனர். இந்த 15 மாணவர்களும் இந்தப் பாடநெறியில் சித்தியடைந்துள்ளனர் எனவும் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டவுள்ள உயர்தரப்பிரிவிற்கு (கலைப்பிரிவில்) தொடர்பாடல் ஊடகக் கற்கை நெறி புதிய பாடப்புலமாக அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் கல்லூரி முதல்வர் அ.அகிலதாஸ் தெரிவித்துள்ளார். (அ-6)

# தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை வழங்கலாம் என்பதை ஜனாதிபதி தெரிவிக்க வேண்டும்

## பிரபா கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி நேற்று அரசியலுக்கு வரவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறியாதவரும் அல்ல. யுத்த காலத்தின் போது ஏனைய ஜனாதிபதிகள் வழங்கவிருந்த தீர்வுகளை அறிந்தவர். தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வுகள் என்பதை ஜனாதிபதியே அறிவிக்க வேண்டுமென கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கைலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு,

ஜெனீவா தீர்மானம் மூலமாக எதை சாதிக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. இத்தீர்மானத்தின் அழுத்தத்தின் மூலமாக இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் அதனால் இனப்பிரச்சினையை உடனடியாக தீர்த்து விடுவார்கள் என்றும் சில கனவுலக அரசியல்வாதிகள் அறிக்கை விடுத்து விளம்பரங்களை தேடிக் கொள்கிறார்கள். மறுபுறம் விமல் வீரசன்ச போன்ற அமைச்சர்கள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என கூறியும் அரசாங்கம் சர்வதேசத்திடம் அகப்பட்டுக் கொண்டதாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து மேலும் அரசாங்கத்திற்கு பெரும்பான்மையினரது ஆதரவை பெற முயற்சிக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழ் தேசிய கூட்டமைப்பினருடனோ அல்லது ஏனைய கட்சிகளுடன் பேசியோ கிடைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஜனாதிபதி நேற்று அரசியலுக்கு வந்தவரல்ல. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறியாதவரும் அல்ல. யுத்த காலத்தின் போது ஏனைய ஜனாதிபதிகள் வழங்கவிருந்த தீர்வுகளை அறிந்தவர். விடுதலைப்புலிகள் எதை எதிர்பார்த்தார்கள் என்பதையும் புரிந்தவர். யுத்தத்திற்கு பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் நன்கு தெரிந்தவர். தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வை வழங்கினால் ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் அவருக்கு தெரியும்.

ஆகவே, தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கக் கூடிய அதிகாரத்தை கொண்ட ஜனாதிபதி தீர்வு விடயத்தில் தனக்கு எதை வழங்கலாம் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். அவரது தீர்வுத்திட்டத்தில் திருப்தி இல்லாவிட்டால் அதன் பின்னர் பேச்சுவார்த்தையின் மூலம் பேசி முடிவெடுக்கலாம்.

அதைவிடுத்து தமிழ் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத் தியே தீர்வினை வழங்கலாம் எனக் கூறி அரசாங்கம் இழுத்தடிப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை. இன்று எமது அரசாங்கத்திற்கு எதிரான ஜெனீவா தீர்மானம் வருவதற்கு காரணம் யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கத்தின் அசமந்த போக்கே காரணமாகும்.

மீண்டும் சர்வதேசம் எமது நாட்டின் இறைமையில் தலையிடாமல் இருக்க வேண்டுமானால் அரசாங்கம் பேச்சு வார்த்தை என்ற நிலைப்பாட்டை தவிர்த்து இனப்பிரச்சினைக்கான தனது தீர்வை மக்க ளுக்கு தெரிவிக்க வேண்டும்.

(அ)


# புகைத்தல் தொடர்பில் புதிய திருத்தச் சட்டம்

(கொழும்பு)

போதைவஸ்து பாவனையினை கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச்சபை நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

இதற்கு அமைய அடுத்த மாதத்தில் பல திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டு சபையின் இயக்குநர் லேஷா டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய புகைத்தல் தொடர்பான சட்டங்களில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.தற்போதைய சட்டத்திற்கு அமைய பொது இடங்களில் புகைத்தல் தடை செய்யபட்டுள்ளது அத்துடன் புதிய சட்ட திருத்தத்திற்கு அமைய வீதியில் நடந்து செல்லும் போது கூட புகைத்தல் தடைசெய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)



பரந்தனில் இருந்து விசுவமடுவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததில் மரத்துடன் மோதி சேதமடைந்து இருப்பதை படத்தில் காணலாம்.

(படங்கள்:- வட்டக்கச்சி செய்தியாளர்)

# சீனாவுடன் நட்புறவை வலுப்படுத்துங்கள்

## தேசப்பற்றுள்ள தே.இ.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் மத்தியில் இந்தியா, அமெரிக்காவுக்கு எதிரான மனநிலையை உருவாக்கி சீனாவுடன் நட்புறவை வலுப்படுத்தி இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமர சேகர அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியுள்ளார். இது தொடர்பாக டாக்டர் குணதாச அமரசேகர மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நாவின் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்வதை கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இரண்டு படகுகளில் காலை வைத்துக் கொண்டு கொள்கைகளை முன்னெடுத்தமையே இன்றைய நிலைக்கு காரணமாகும்.

எனவே, இந்த நிலையிலிருந்து மீண்டும் புதிய கொள்கைகளை நிரந்தரமானதாக வகுக்க வேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் எமக்கு துரோகமிழைத்து விட்டன. எனவே, எமக்கு புதியதொரு வல்லரசின் பாதுகாப்பு அரவணைப்பு தேவை.

இதனால் அமெரிக்கா இந்தியாவுடனான தொடர்புகளை கைவிட்டு சீனாவுடனான உறவை வலுப்படுத்தி அந்நாட்டுக்கு எமது நாட்டுக்குள் இராணுவம் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுதந்திரமாக இடமளிக்கப்படவேண்டும்.

இதற்காக அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் எதிராக எமது மக்களின் மனநிலையை மாற்ற வேண்டும். அதன்போதே எமது முயற்சி முழுமையாக பலனளிக்கும். எமது நண்பனாக சீனாவை அரவணைத்துக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. (அ-2)





உங்கள் முன்னேற்றத்தின் ஊண்டுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

முறைப்பாடு மற்றும் முன்மொழிவுகளுக்கு மேலே உள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுங்கள்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்

www.nationstrust.com

Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

(சி-6160)

# சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் வந்தாலும்

# நாட்டின் இறைமையை அரசு விட்டுக்கொடுக்காது

## அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச ரீதியில் எத்தகைய அழுத்தங்கள் வந்தபோதும் நாட்டின் இறையாண்மையும் சுயா தீனத்தையும் காட்டிக்கொடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஒருபோதும் தயார் இல்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.**

தற்போதைய அரசு எல்லா நேரங்களிலும் டொலர்களை பார்க்கிலும் நாட்டின் இறைமையை கௌரவம் செய்ததாக கூறிய அமைச்சர்,

வெளிநாட்டு உதவியோ ஒப்பந்தங்கள் காரணமாகவோ அரசின் அக்கொள்கை நிறுத்தப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியிலும் உள்ளூர் சவால்கள் வரும் போது அதனை எதிர்கொள்ளும் அரசுக்குள்ள மாபெரும் சக்தியாக அமைவது மக்கள் பேதமின்றி அரசுடன் இருப்பதென்று அமைச்சர் கூறினார்.

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் நேற்று முன்தினம், நேற்று இன்று சந்திப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் சகல மக்கள் தொடர்பாக நன்கு சிந்தித்துப் பார்த்தே அனைத்தையும் செய்கின்றது. மக்கள் விருப்புக்கு வெளியில் எதனையும் அரசு செய்யவில்லை.

தற்போதைய அரசுக்கு சவால்கள் புதியதல்ல. ஜனாதிபதி பதவிக்கு வந்த முதல் சர்வதேச மட்டத்தில் இத்தகைய அழுத்தங்கள் வந்ததாகவும் அரசு சகல கட்டங்களிலும் அவற்றை வெற்றி கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக எந்த நோக்கில் பிரேரணை கொண்டு வந்ததென்பதை எண்ணிப் பார்க்க முடியாது. அழுத்தங்கள் இருந்த போதும் இலங்கையுடன் ஆதரவாக இருந்த நாடுகளுக்கு அரசு கௌரவம் தெரிவிக்கிறது.

இலங்கைக்கு எதிரான யோசனைக்கு இந்தியா ஆதரவளித்தமை தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர்.

இந்தப் பிரேரணை காரணமாக இந்தியா உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பெரும், நெருக்கடிக்கு உள்ளாகியதாகவும் குறிப்பிட்டார்.


இந்தியாவில் வரவு- செலவுத்திட்ட விவாதத்தில் கூட வரவு செலவுத்திட்டத்தை பார்க்கிலும் கூடுதலாக இலங்கைக்கு எதிராக பிரேரணை தொடர்பாகவே பேசப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு சிறிய நாடுகள் அரசை நிர்ப்பந்தித்தன. சர்வதேச பிரச்சினை தொடர்பான தீர்மானம் எடுப்பதிலும் கூட உள்ளூர் நிலைமை தொடர்பாக சிந்திப்பதுபொருத்தமானது என்றும் கூறினார்.

இந்தியாவை விட ஆசியாவின் ஏனைய நாடுகள் இலங்கையுடன் நின்றதால் இந்தியா பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

பலம்வாய்ந்த நாடுகள் சிறிய நாடுகளுக்கு கொடுக்கும் தேவையற்ற அழுத்தங்களுக்கு எதிராக செயற்படும் நாடு என்ற வகையில் இந்தியாவுக்கு சர்வதேச அங்கீகாரம் இதற்கு முன் இருந்தது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத்தை தோற்கடித்த அரசு நாட்டை முன்னேற்ற பெருமுயற்சி செய்கின்றது. அத்தகைய நேரத்தில் நாட்டிலிருந்து



பாய்ந்தோடிய பயங்கரவாதிகள் நாட்டுக்கு எதிராக அன்று முதல் சதிகளை மேற்கொண்டே வந்தனர்.

அன்று அவர்கள் ஆயுதங்களை பெறுவதற்கு செலவிட்ட நிதியை இன்று அத்தகைய சதிகளுக்காக செலவிடுகின்றனர். அரசில் குறைபாடு இருந்தால் அதனை நிறைவு செய்து எதிர்நோக்கப்படும் சவால்களை பலமாக முகம்கொடுக்க நாம் தயாராக உள்ளோம். இது பற்றி மக்கள் எந்த சந்தேகமும் கொள்ளக்கூடாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-7)

# கல்விப் பொதுத்தராதர (சா/த)

# முன்னணிப் பெறுபேறுகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

**2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடை பெற்ற கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை முடிபுகள் பரீட்சைத் திணைக் களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.**

**இதில் யாழ்.மாவட்ட பாடசாலைகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள முன்னணிப் பெறுபேறுகளின் விபரம் வருமாறு,**

**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**தமிழ்மொழிமூலம்**

ரா.தாட்சாயினி (9ஏ), தி.கஜீபா (9ஏ), ப.கோபிகா (9ஏ), ம.மயூரவாணி (9ஏ),ஜெ. ஜனனி (9ஏ),லோ. லக்ஷனா (9ஏ),க. சுபேகா (9ஏ),. கா.சௌஜா (9ஏ), அ.தனுஜா (9ஏ),தே. தேவிகா (9ஏ), ப.விசாகஜா(9ஏ), சோ.அபிராமி (9ஏ), செ.துவாரகா(9ஏ), த.வைஷ்ணவி(9ஏ)

**ஆங்கிலமொழிமூலம்**

இ.அனோஷா (9ஏ), ச.திலக்சி (9ஏ), ச.சாரங்கா (9ஏ), ஜெ.சர்மிஜா (9ஏ)

**தமிழ்மொழிமூலம்**

கு.டிலானி (8ஏபி), க. புவஸ்ரியா (8ஏபி),கி. கௌதமி (8ஏபி),ரா.ஜானகி (8ஏபி),தி. நர்மதா (8ஏபி), தி. பிரணவி (8ஏபி), சி.சகிலா (8ஏபி), ச.தர்சிகா (8ஏபி), அ.யதுஷ்னா (8ஏபி), சி.ஜனோஜா (8ஏபி), சி.லதாஜினி (8ஏபி), ச.கோகுலா (8ஏபி),ம.றஜீ (8ஏபி), பா.சோபனா (8ஏபி), த.தர்சிகா (8ஏபி),ஜ.திவ்யா (8ஏபி), ஸ்ரீ.விஷ்ணுப்பிரியா (8ஏபி), யோ.யோகஸ்ரெவானி (8ஏபி)

**ஆங்கிலமொழி மூலம்**

ச. பானுஷா (8ஏபி), கு.கீர்த்தனா (8ஏபி), ரா. நதியா (8ஏபி), பு.ரிசாந்தினி (8ஏபி), ஸ்ரீ.சரணிஜா (8ஏபி),உ.சரண்ஜா (8ஏபி), ஜெ.ஷைத்தகி (8ஏபி)

**தமிழ்மொழிமூலம்**

ஜ.விட்யாபோல் (8ஏசி), ஜெ. மேரிஆன் மினோவா (8ஏசி),அ.சரண்யா (8ஏசி), க. அபிவர்ஷி (8ஏசி), அ.பானுஷா (8ஏசி),பா. கௌசல்யா (8ஏசி), நி.மதுரிகா (8ஏசி), நா. சாம்பவி (8ஏசி), கி.ஷியானி (8ஏசி), ஸ்ரீ.வைஷ்ணவி (8ஏசி),வ. சங்கீதா (8ஏசி),

**ஆங்கிலமொழிமூலம்**

செ.காஞ்சனா (8ஏசி)

**தமிழ்மொழிமூலம்**

பி.தினுஷா (8ஏஎஸ்)

**தமிழ்மொழிமூலம்**

ரா.அஜந்தா (7ஏ 2பி), ர.சிந்துஜா (7ஏ 2பி), வ. ஸ்ரீதரா (7ஏ 2பி),கா.கீர்த்தனா (7ஏ 2பி), யோ. தர்சிகா (7ஏ 2பி), அ.டலக்ஷனா (7ஏ 2பி),கி.சங்கீதா (7ஏ 2பி),ர.துளசிகா (7ஏ 2பி), சி.அர்ச்சனா (7ஏ 2பி), த. கீதாஞ்சினி (7ஏ 2பி), ரா.திவாகரி (7ஏ 2பி)

**ஆங்கிலமொழிமூலம்**

யோ.கேமறனிற்றா (7ஏ 2பி), க. தரண்யா (7ஏ 2பி)

**தமிழ்மொழிமூலம்**

றொ. மேரி றொஷாந்தினி (7ஏபிசி ), பு.மௌலிகா (7ஏபிசி), த.பைரவி (7ஏபிசி) , கி.யதுஷா (7ஏபிசி), வ.உமையாள் (7ஏபிசி), ரா.நிதர்சனா (7ஏபிசி), தெ. கம்சனா (7ஏபிசி), ஞா.கௌதமி (7ஏபிசி), கி.விபுனா (7ஏபிசி)

**தமிழ்மொழிமூலம்**

ச.கஜேந்தினி (7ஏபிஎஸ்), சி.ஷாமினி (7ஏபிஎஸ்), க.துஷியந்தினி (7ஏபிஎஸ்)

**தமிழ்மொழிமூலம்**

ச.பிரகவி (7ஏ2சி), ம.சங்கவி (7ஏ2சி)

**யாழ். இந்துக் கல்லூரி**

ஜெ.ஆரூரன் (9ஏ), எம்.அனுஜன் (9ஏ),எஸ். கேதாரன் (9ஏ),ஜே.லோகபனன் (9ஏ), எஸ்.சஞ்ஜீவன் (9ஏ),எஸ்.சீதா பரபாணன் (9ஏ),எஸ், சிவசங்கர் (9ஏ),எம். துமிலன் (9ஏ),ஆர்.நிரோஜன் (9ஏ), ரி.யதுர்ஷன் (9ஏ), பி. பிரதீஸ் (9ஏ), எஸ்.அச்சுதன் (9ஏ),பி.குணவரன் (9ஏ),கே. கௌசிகாந்த் (9ஏ), பி.சங்கீர்த்தன் (9ஏ),

**யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி**

**தமிழ்மொழிமூலம்**

இ.சாலுஜா (9ஏ),லோ.வேணிகா (9ஏ), வி. தட்சாயினி (9ஏ),க.கிர்சிகா (8ஏபி), கு.மதுஷா (8ஏபி), ம.மிரோசன்(8ஏபி), பா.ஐங்கரன் (8ஏபி), ரா.மோகன்ராஜ் (8ஏஎஸ்), பி.சயந்தன் (8ஏஎஸ்), த. அனோஜா (8ஏஎஸ்), ம. கிறிஸ்ரியன் கஜானா (7ஏ2பி), வ.ரேணுகா (7ஏ2பி), த.தனுஷா (7ஏ2பி),தெ.தனூஜன்(7ஏ2பி), செ.லக்ஷிகா (7ஏபிசி), பி.பிரிந்தாயினி (7ஏபிசி), சி.தயாபரன் (7ஏபிசி),ர.நிவேதிகா (6ஏ 3பி), வி.வினோதினி (6ஏ 3பி), த.இளங்குமரன் (6ஏ 3பி), நா.பிரசாந் (6ஏ 3பி), செ.சுலக்சன் (6ஏ2பிசி), ந.சிவக்ரன் (6ஏ2பிசி), க.கஜானன் (6ஏ2பிசி), லி.சுபஜெனனி (6ஏ2பிசி),க.யஸ்மிதா (6ஏ2பிஎஸ்), க.பானுஜா (5ஏ4பி), ச.துசிந்தன் (5ஏ 3பிசி),சி.மாதங்கி (5ஏ3பிசி),எஸ்.கபோல்ராஜ் (5ஏ3பி எஸ்),கி.சயித்தன் (5ஏ2பி2சி) கு.தர்சன் (5ஏ2பி2சி),ச.சஜந்தன் (5ஏ2பி2சி), ஜே.வினுஷா (5ஏ2பி2சி), ச.குகப்பிரியன் (5ஏபி3சி),சி.இளவேந்தன் (5ஏ3சிஎஸ்), வி.செந்தூரன் (5ஏ2சி2எஸ்),சி.நிமலன் (5ஏ2சி2எஸ்)

**ஆங்கிலமொழிமூலம்**

சு.சிவானுஜன்(8ஏசி), ம.போதநிதி (7ஏபிசி), ச.கவினஜா (6ஏ2பி சி)

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**தமிழ் மொழி மூலம்**

பா.கௌசனா (9ஏ), ச.மதுசா(8ஏ பி), க. கிருஷிகா (8ஏ பி), இ. கயவந்தி (8ஏ பி), செ.நிர்ஷிகா (8ஏ பி), ஆ.மேர்சி ஞானரூபி (8ஏசி), செ. தர்சிகா (7ஏபி), ஜீ.சஜீவிதா (7ஏபிசி), இ.தட்சாயினி (7ஏபிசி), ஸ்ரீ.திரியம்பகா (6ஏ3பி), சி.துர்கா (6ஏ3பி), த.கம்சாரணி (6ஏ 2பிசி), பு.கிருசாந்தி (6ஏ2பிசி), வி.நிவேதினி (6ஏ2பிசி), சி.சிவப்பிரியா (6ஏ2பிசி), ச.திவ்யா (6ஏ3சி), சு. அம்பிகா (6ஏ2சிஎஸ்), ப.நிறஞ்சனா (6ஏபி2சி), இ.சிந்துஜா (5ஏ 4பி), மோ.லக்சனா (5ஏ.3பிசி), கு.சோபிகா (5ஏ3பிசி), அ.டிலோஜினி(5ஏ3பிசி)

**ஆங்கில மொழிமூலம்**

மு.ஆத்மிகா (9ஏ), க.ஜனனி (5ஏ2பிசி), வி.கஜானி (5ஏ3பிசி). இ.தாரிகா (5ஏ2பி2சி)

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ஞா.விதுசன் (9ஏ), உ.உமாசுதன் (9ஏ), பி.பிறேமிசா (9ஏ), ஸ்ரீ.கிரீடி (8ஏபி), பொ.கஸ்ரோ (8ஏபி), பா.அஜீபன் (8ஏபி), ஸ்ரீ.துளசிகரன் (8ஏபி), ர.ஆராதனா (8ஏபி), த.செந்தாளன் (8ஏசி), சி.சுஜீவன்(8ஏசி), சி.அனுராஜ் (8ஏசி), சு.சுகேனியா (7ஏபிசி), க.கனன் (7ஏபிசி), தி.ஆரணி (7ஏபிசி), பூ.பிரியா (7ஏபிஎஸ்), க.நிரஞ்சன் (7ஏபிஎஸ்), நா.கோதன்ஜா (6ஏ2பிசி), ந.சஜீத்தா (6ஏ2பிசி), கு.கபிலன் (6ஏபி2சி), ஜெ.ஜெயகீதன் (6ஏபி2சி), பா.தமிழினி (6ஏபி2சி), வே.திருஷா (6ஏபிசிஎஸ்), ப.அனோஜா (6ஏ3சி), தே.சுஜீவன் (6ஏ2பி), க.கோவர்த்தனன் (5ஏ3பிசி), யோ. கபீர்த்தனா (5ஏ3பிசி), சி.தயூரா (5ஏ3பிசி), வி.பாகீசன் (5ஏ3பிஎஸ்), க.மதுசூதனன் (5ஏ3பிஎஸ்), க.சிவானுஜன் (5ஏ2பி2சி), கா. திருக்குமரன் (5ஏ2பி2சி) , தே.தரணிகா (5ஏபி3சி), சி.ஜெய்னோதன் (5ஏ2பிசிஎஸ்), பா.சஜீஜன் (5ஏ2பிசிஎஸ்), அ.திபூஜன் (5ஏ2பிசி), சோ.கஜானி(5ஏ2பிசிஎஸ்), நோ.நிதர்சன் (5ஏ3பி) (தொடரும்)

# தெய்வீகத் தன்மையின் ஆறு சிறப்பு இயல்புகள்



ஆன்மீகம் 17


**3. வெற்றிச்செல்வம் (விஜய லக்ஷ்மி)**

மூன்றாவது வகைச் செல்வம் வெற்றி எனப்படும். சிலர் மிகப் பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்திருப்பார்கள். ஆனால், எந்த வேலையைச் செய்தாலும், அது தோல்வியடையும். அவர்கள் எதைச் செய்தாலும் கவிழ்ந்துவிடும். அது ஒரு சிறிய விடயமாக இருக்கலாம். ஆனாலும், வெற்றிகிட்டாது. "கடைக்குப்போய் கொஞ்சம் தயிர் வாங்கிவா" என்று சொல். அவன் எதிர்மறை பதிலோடுதான் திரும்பி வருவான். "என்னால் வாங்க முடியவில்லை. அங்கே தயிர் கிடைக்கவில்லை" மூன்றாவது வகைச் செல்வம் வெற்றிகரமாகச் செய்து வெற்றியடைதல்.

இந்தச் செல்வம் பெறுவதற்கு எதையும் "இது பயன்தராவிட்டால், என்ன செய்வது?" என்ற நினைவுடன் ஆரம்பிக்கதே. உனக்கு நீயே "வா முயற்சிசெய்து பார்க்கலாம். என்று நினை. என்ன செய்வது இது சரிப்படாது" என்று எதிர்மறையாகவே நினைத்தால், பிறகு அவர்கள் வாழ்க்கை முழுவதுமே வெற்றிகிடைக்காது. அவர்கள் திட்டமிடுவார்கள்- நினைப்பார்கள்- கவலைப்படுவார்கள். எதுவுமே நடக்காது. ஆகவே, அவர்கள் முழு வாழ்க்கையும் அப்படியே முடிந்துவிடும்- எதையும் சம்பாதிக்காமலேயே; இது வாழ்க்கையே மிகக் கடினம் என நினைப்பதால்.

**4.தைரியம்**

வாழ்க்கையை விளையாட்டாக, ஒரு ஆட்டமாக அல்லது போட்டியாகச் செய். முன்னேறிச்செல். புதிய சாதனைபடை. விளையாடி ஆரம்பிக்கொண்டிரு. விளையாட ஆரம்பிக்கும் முன்னரே "நான் வெற்றிபெறுவேனா? நான் தோற்றுப்போனால், என்ன செய்வது?" என்று யோசிக்காதே. நீ தோற்றுப்போனால்என்ன? மற்றொரு சமயம் நீ வெல்வாய். வா விளையாடு. விளையாட்டில் தவறுகள் செய்துவிட்டால், என்ன செய்வது என்ற பயம்- விளையாடவே பயம்- வாழ்க்கையில் எதையும் செய்யப் பயம்- ஒருவரிடம் தைரியமாகிய செல்வம் இல்லை.



தைரியம் நான்காவது வகைச் செல்வம்- தைரியமின்மையும், செல்வப் பற்றாக்குறையும் ஒன்று. ஒருவரிடம் நிறையப் பணம் இருக்கலாம். ஆனால், அவர்களிடம் தைரியம் இல்லை என்றால், வாழ்க்கையில் சுவாரசியம் இல்லை. முழுவாழ்க்கையுமே கடந்துபோகும். எதுவும் இருக்காது. இது எதற்கும் பிரயோசனமும் இல்லை. ஒரு சிலரிடம் பணம் இருக்காது. ஆனால், அவர்களின் தைரியத்தைப்பார். வேகத்தைப் பார்- இது அவர்கள் சிலவற்றில் செல்வந்தர்களாக இருப்பதைக் காட்டுகிறது.

**5. நட்புணர்வு**

ஐந்தாவது வகைச் செல்வமானது, நட்புணர்வாகும். அது ஒருமித்த உணர்வோடு அக்கறை எடுத்துக் கொள்ளும் தன்மையுடனிருத்தல். உன்னிடம் மற்றவகைச் செல்வங்கள் இருக்கலாம். ஆனால், உன்னிடம் ஒருமித்த உணர்வு இல்லையெனில், வேறு செல்வங்கள் இருந்தாலும் நீ இறுக்கி மூடப்பட்ட ரயில் பெட்டியில் இருப்பதுபோல் உணர்வாய். உன்னால் எல்லா சூழ்நிலைகளிலும் இருக்கமுடியவில்லையானால், அவற்றை அனுசரித்துப்போக இயலாத போது, நீ உன்னையே அந்நியனாக உணர்வாய்.

இதுதான் பல விருந்துகளில் நடக்கிறது. சில செல்வந்தர்கள் தங்கள் செல்வச்சிறப்பைக் காட்டிக் கொள்வதற்காக விருந்துக்குப் போகிறார்கள். ஆனால், அதில் பொருந்த முடியாமல் பெரிதும் அவதிப்படுகிறார்கள். இந்த உலகில் நடக்கும் விருந்துகளைச் சற்றே கவனி. விருந்து என்று சொல்லப் படுகிறன்றன. என்ன விருந்து? அங்கே சர்க்கரை பூசப்பட்ட துன்பங்களைப் பார்க்கிறாய். மனிதர்கள் மிகவும் இறுக்கமாக இருக்கிறார்கள். அவர்கள் இயல்பாக இல்லை. அவர்கள் இதயங்களால் சந்திப்பதில்லை. அவர்கள் தங்களுக்குள் கவசத்தோடு சந்திக்கிறார்கள். உண்மையில் அவை போர்க்களங்கள்போல் காட்சியளிக்கின்றன. விருந்துகளுக்கு எல்லாரும் கவசத்தோடு போகிறார்கள். போர்க்களத்துக்குப் போவதுபோல்- போட்டிக்களங்களுக்குப் போவது போல். அது செல்வமே அல்ல.

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

மேல்மட்ட குடும்பங்களில் எத்தனை பேர் மேசமான நிலையில்- வெறுப்பில்- சலிப்பில் இருக்கிறார்கள் தெரியுமா? இந்த மாதிரியான போலித்தனங்களை அவர்கள் குழந்தைகள் சந்திக்க நேருகையில் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த இறுக்கமான சூழ்நிலையை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமே ஹிப்பி அலைகள் இயக்கம்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

17

**சூரிய ஆதிக்கம்**

சூரிய ஆதிக்கமுள்ளவர் எவ்வளவு சிக்கலான விவாகாரங்களையும் ஆராய்ந்து அவைகளை விளக்கிக் கூறத்தக்க ஞானமும் இவர்கட்கு உண்டு. எல்லோரும் தங்களை விரும்பும்படியாக நடந்து கொள்வார்கள். வியாபாரத்தினால் ஏராளமாகப் பொருள் சம்பாதிப்பார்கள். தாராளபுத்தியை உடையவர்கள். பணத்தைச் சேர்த்து மீதம் பிடித்து வைப்பதில் நம்பிக்கையற்றவர்கள். இருந்தாலும், தங்கள் வருவாய்க்கு உட்பட்டே செலவு செய்வார்கள். பணத்தை அணாக் கணக்கில் சம்பாதித்து ஆயிரக் கணக்கில் எண்ணிப்பார்ப்பார்கள்.

**சக்தி**

சூரிய ஆதிக்கம் உள்ளவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை பல பேர் அறிய வெளியிட அஞ்ச மாட்டார்கள். தங்களின் உள்ளக் கருத்தை ஒளியாமல் சொல்பவர்கள் இவர்கள். மதப்பற்றுடையவர்களாயும் இருப்பார்கள். ஆனால், இவர்களிடம் பிடிவாதம் இருக்காது. தகுந்த காரணமின்றி எதையும் நம்பமாட்டார்கள். இவர்கள் சோதிடம், இரேகை முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாயிருப்பார்கள். இவர்கள் விடயங்களை ஆழ்ந்து யோசிக்க மாட்டார்கள். இவர்கள் புத்தியோடு அருட்சக்தி கலந்திருப்பதால், இவர்கள் தாங்கள் எவ்விதம் விடயங்களைத் தெளிவாகக் கூறுகிறோம் என்று விளக்கிக் கூற முடியாதவர்களாய் இருப்பார்கள். எப்போதும் சந்தோசத்துடனும் ஊக்கத்துடனும் இருப்பார்கள். எப்பொழுதும், பரிசுத்த மனத்துடனே இருப்பார்கள். விரோதியையும் வசப்படுத்தக் கூடியவர்கள்.இவர்கட்கு நிலையான நண்பர்கள் கிடையாது. நல்ல நண்பர்களை இவர்கள் நாடுவதும் கிடையாது. காலத்துக்கேற்ற நண்பர்களே இவர்களிடம் சிலகாலம் ஏற்கமாட்டார்கள். இவர்கள் சுயேச்சைவாதிகளாகவே இருப்பார்கள். சமத்துவக் கொள்கையை உடையவர்கள். இவர்கள் இத்தகையோர் என்பதைக்காட்ட இவர்கள் கையில் புத்திரேகை வளைவின்றி நீளமாய் அமைந்திருக்கும், அதாவது சந்திர மேட்டில் புத்திரேகை கீழ்நோக்கிச் சென்றிராது. இவர்களுக்கு இவர்கள் புத்தியே பலம்.

இவ்வளவு பெருமையாய் பேசப்படும் சூரிய ஆதிக்கம் உள்ளோருக்கு மனமொத்த வாழ்க்கைத்துணைவி அமைவது அபூர்வம். அதாவது விவாகத்தாலே இவர்கள் வாழ்க்கை பொதுவாகப் பின்னப்படுகிறது.

## ரேகைகளும் கிரகங்களும்

தங்கள் காரியமாகும்வரை சேர்ந்திருப்பார்கள். உலக யாத்திரை செய்வதில் இவர்கள் பிரியமுள்ளவர்கள். தங்களிடமுள்ள குற்றங்குறைகளை பிறர் எடுத்துக்கூறினால் அவைகளை ஒத்துக்கொள்வார்கள். பிறர் சொத்தை விரும்பமாட்டார்கள். பஞ்சேந்திரியங்கள் மூலம் இன்ப சுகங்களை மனதிருப்தியாக அனுபவிப்பார்கள்.

சூரிய ஆதிக்கம் உள்ளோர் மற்றவர்களுக்கு அடங்கியிருக்க மாட்டார்கள். அறிவுடையவர் களாதலால் அடிமைப்படமாட்டார்கள். மற்றவர்களின் ஆதரவையும் தேசாசாரமும் நவநாகரியமும் ததும்பிய நாடுகளுடன்கூட இவர்கள் பெரும்பாலும் விவாகத்தால் கஷ்டப்பட நேரிடுகிறது.


சூரிய ஆதிக்கத்தில் கெட்ட மனிதர்களுமுண்டு. இவர்கட்கு மோதிரவிரல் கோணலாயும் கெட்டியாயும் அமைந்திருக்கும். இவ்விரலின் மூன்றாம் அங்குலாஸ்தி மிகக்கடினமாயிருக்கும். நகம் சிறுத்திருக்கும். விரல்கள் வளையாது பொதுவாக இவர்களிடம் செல்வம் தங்காது. ஆடம்பரமும் வாய்வீச்சும் அதிகமாக இருக்கும். தற்பெருமையைச் சாமரத்தியமாய் எடுத்துப் பேசுவார்கள். பிரபலஸ்தராயிருக்கப் பிரியாசைப்படுவார்கள். ஆபத்து நேர்ந்த காலத்தில் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் பொல்லாதவர்களாவார்கள். தங்களுக்கு கிடைக்க வேண்டியதை மற்றவர்கள் தடைப்படுத்தி விட்டதாய் நினைப்பார்கள். பொதுவாகக் காரியத்தில் அபஜெயமும் வாழ்க்கையும் துரதிர்ஷ்டமும் உள்ளவர்கள். ஆனால்,



வெறுக்கத்தக்கவர்களன்று, சூரிய ஆதிக்கத்தில் நேர்மாறானவர்கள். நல்வழியொன்றானால், தீயவழியும் ஒன்றெனக்கருதவேண்டும்.

(தொடரும்)

# ஐ.நா. தீர்மானம் வெற்றி!



ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் இந்தியா உள்ளிட்ட 24 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியிருக்கிறது. தீர்மானத்தை தோற்கடிக்க இலங்கை அரசு எடுத்த சதிகார முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுவிட்டன.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும், இலங்கை மக்கள் அனைவருக்கும் சம உரிமை, நீதி, சமத்துவம், பொதுவுடைமை கிடைப்பதை உறுதி செய்ய சட்ட

# சிக்கப்போகும் இலங்கை அரசு...



ரீதியான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும், சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டது பற்றி ஆராயவும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகளையும், இனி எடுக்கப்போகும் நடவடிக்கைகளை பற்றி விரிவான அறிக்கை தாக்கல் செய்யவேண்டும், இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும், ஐ.நா மனித உரிமை கவுன்சில் வழங்க வேண்டும், அதனை இலங்கை அரசு ஏற்க வேண்டும். இதனை ஐ.நாவின் உரிமை கவுன்சில் குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என்று தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு தீர்மானத்தை கொண்டு வருவதற்கும் அது நிறைவேற்றப்பட்டதற்கும் ஐக்கிய அமெரிக்க அரசியல் செயற்பாட்டுக் குழு, கனேடியன் தமிழ் காங்கிரஸ், பிரிட்டிஸ் தமிழ் ஃபோரம், குளோபல் தமிழ் ஃபோரம் ஆகியவைகளின் பங்களிப்புகள் அதிகம்.

இது ஒரு புறமிருக்க மனித உரிமை கவுன்ஸில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 13 ஆபிரிக்க நாடுகளிடமும் 8 லத்தீன் அமெரிக்க நாடுகளிடமும் முழுமையான ஆதரவை பெறும் பொறுப்பை அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனிடம் ஒப்படைத்திருந்தது. அமெரிக்கா அரசு, ஹிலாரியின் முயற்சியில் பெரும்பான்மையான நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்க உறுதி தந்தன. இதில் இலத்தீன் அமெரிக்க நாடுகளான கியூபா, ஈக்வாடர் உள்ளிட்ட சில நாடுகள் ஆதரவு அளிக்க மறுத்ததுடன் மனித உரிமை மீறல் தொடர்பான தீர்மானம் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். இரட்டை நிலை கடைப்பிடிக்கக்கூடாது. தனி ஒரு நாட்டிற்கு எதிரான தீர்மானம் கொண்டு வரக்கூடாது. தீர்மானத்தை 6 மாதத்திற்கு தள்ளி வையுங்கள் என்று வலியுறுத்தின. ஆனால் ஹிலாரி அதற்கு வாய்ப்பில்லை என்று அந்த நாடுகளிடம் கூறிவிட்டார். அதேபோல தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க முன்வந்ததை தொடர்ந்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகிக்க முடிவு செய்திருந்த சில நாடுகள் தீர்மானத்தை ஆதரிப்பதாக உறுதி செய்தன. வீடியோ காட்சிகளும் ப'ல நாடுகளை இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வைத்திருக்கிறது.

இதற்கிடையே தீர்மானத்தை தோற்கடிக்க 70 பேர் கொண்ட குழுவை கடந்த 2 மாதங்களாக களத்தில் இறக்கியது இலங்கை அரசு. இந்தப்படை 47 நாடுகளுக்கும் விசிட் அடித்து ஆதரவை திரட்டியது. கடைசி நாள்வரை இந்த முயற்சியை கைவிட்டுவிடவில்லை இலங்கை. தீர்மானத்திற்கு



முதல்நாள் இரவு விருந்து ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இதில் கலந்து கொள்ள 47 நாட்டின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அனைத்து நாடுகளுக்கு அழைப்பு வைத்தும் இந்த விருந்தில் 7 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன. ஏற்கனவே 17 நாடுகளின் உறுதியான ஆதரவை பெற்று வைத்திருந்த இலங்கை விருந்துக்கு 7நாடுகள் மட்டும் வந்திருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தது.

அப்போதே தங்களுக்கு எதிரான தீர்மானம் வெற்றி பெற்றுவிடும் என கலக்கம் அடைந்தனர். இலங்கைக்கு ஆதரவாக சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், தாய்லாந்து உள்ளிட்ட ஆசிய நாடுகள் பெரிய அளவில் ஆதரவு செய்ததனால் சில நாடுகளின் ஆதரவைப் பெற முடிந்தது. இந்த கடைசிக்கட்ட முயற்சியின் விளைவாக 15 நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்தது.

இப்படிப்பட்ட நிலையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் 22 ஆம் திகதி பொதுவிவாதத்திற்கு விடப்பட்டு தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறியது. தீர்மானம் நிறைவேறியதில் புலம்பெயர் தமிழர்களிடமும் தமிழக தமிழர்களிடமும் சந்தோஷம் கரைபுரண்டோடியது. தீர்மானம் வெற்றி பெற்றிருப்பதைத் தொடர்ந்து சர்வதேச அளவில் என்ன மாற்றம் உருவாகும்? இலங்கையை தண்டித்துவிட முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழும் நிலையில் இது குறித்து 1987 இல் இலங்கைக்கு சென்ற இந்திய அமைதிப்படையினர் இராணுவ உளவுப்பிரிவு தலைவராக இருந்த ஹரிகரனிடம் கேட்டபோது "மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான கடுமையான வார்த்தைகளுடன் தீர்மானம் கொண்டுவந்தால் அது தோற்றுப் போகும். அதனால் தான் மென்மை

**நக்கீரன்**

யான வார்த்தைகள் தீர்மானத்தில் இடம்பெறும். அதன்படி தான் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஒரு முறை தீர்மானம் நிறைவேறிவிட்டால்... அடுத்த அமர்வுகளில் குற்றம் செய்துள்ள நாடும் போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்களும் தண்டனை பெறுவதற்கு வழி ஏற்படும். ஆனால் உடனடியாக மக்கள் எதிர்பார்க்கும் பொருளாதார தடையெல்லாம் கொண்டு வந்துவிட முடியாது. இலங்கையை எதிர்காலத்தில் தண்டிக்க முதல் படி உருவாகியிருக்கிறது. இந்த தீர்மானம் நிறைவேறாமல் போனால் இலங்கையின் செயற்பாடுகளை தடுக்கவே முடியாது" என்றார்.

சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியலறிவியல் துறையின் தலைமை பேராசிரியரும் தெற்காசிய பிராந்திய நாடுகளின் உறவுகள் குறித்த ஆய்வாளருமான ராமு மணிவண்ணனிடம் தொடர்பு கொண்டு பேசிய போது "கடந்த 3 வருடங்களாக தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையை ஆரம்பிக்க முடியாமல் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் திணறி வந்தன. இந்தியாவின் தலையீட்டினால் இந்த விசாரணைக்கு தடை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. தற்போது இந்தியாவின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேறியிருப்பதால் தெற்காசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீடுகள் அதிகரிக்கத் தொடங்கும்.

போர்க்குற்றங்கள் குறித்தும் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கான மறுவாழ்வு குறித்தும் சர்வதேச நாடுகள் முன்வைத்த பல முன்னெடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தாமல் இலங்கை அரசு ஏமாற்ற முடியாது.

போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்கள் யார்? என்பதை விசாரித்தே ஆகவேண்டும் இலங்கை அரசு. இது குறித்த அறிக்கையும் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் அடுத்த அமர்வுகளில் சமர்ப்பித்தாக வேண்டும். அந்த அறிக்கையில் உண்மை இல்லாது போனால் இலங்கையை தண்டிக்க அடுத்த கட்ட



பேராசிரியர் ராமு மணிவண்ணன்

நடவடிக்கை எடுக்க நேரிடும். அதே சமயம் இலங்கைக்கு எதிராக உறுதியான நிலையை காங்கிரஸ் எடுத்தாலோ அல்லது காங்கிரஸ் ஆட்சி மாறினாலோ தற்போது 'மூடி மறைக்கப்பட்டு வரும் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் பெரிய அளவில் வெடிக்கும். அப்போது போர்க்குற்றவாளிகளை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய சூழல்கள் உருவாகும். அந்த நிலை வரும் போது தான் ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கான நீதி கிடைக்கும். அப்போது அதனால் தற்போது நிறைவேறியுள்ள தீர்மானத்தின் மூலம் உடனடியாக எந்த பாதிப்பையும் இலங்கை சந்திக்காது" என்று சுட்டிக்காட்டினார்.

'ஒட்டுமொத்த தமிழர்களின் குரலுக்கு கிடைத்த முதல் வெற்றி இது.

**ஆர்.இளையச்செல்வன்**

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 82

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை



பீல்ட்மார்ஷல் ஜெனரல் ரோம்மல்

வடக்கு ஆபிரிக்காவிலும் மத்திய தரைக் கடலிலும்1942-1943-இல் நேச நாட்டுத் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள்.

*ஏல்-அலாய்மென் நடவடிக்கை*

*(1942 அக்டோபர் 23-நவம்பர் 4)*

1942 அக்டோபர் இறுதிவாக்கில் ஆபிரிக்கா எனும் ஜேர்மனிய இத்தாலிய டாங்கிப் படையின் யூனிட்டுகள் பீல்ட்மார்ஷல் ஜெனரல் ரோம்மலின் தலைமையின் கீழ் ஏல்-அலாய்மெனுக்கு தென் மேற்கே 60 கி.மீ நீள தற்காப்புக் எல்லைக் கோட்டை உருவாக்கியிருந்தன. இதன் வடகோடி மத்திய தரைக் கடலையும் தென்கோடி செல்லக் கடினமான கட்டார் பள்ளத்தையும் தொட்டுக் கொண்டிருந்தன. தற்காப்பு அங்கு மிங்குமனதாக இருந்தது. ஆதார நிலையங்களும் எதிர்ப்பு மையங் களும் இதன் அடிப்படையாக விளங்கின. இராணுவ பாதுகாப்பு நிலைகள் முக்கிய மற்றும் இரண் டாவது மண்டலங்கள் இதில் அடங் கியிருந்தன. முன்னணி எல்லைக்கு அருகே கண்ணிவெடிகள் வைக்கப் பட்டிருந்தன. முள்வேலிகள் போடப் பட்டிருந்தன. தயார்படுத்தப்பட்ட தற்காப்பின் மொத்த ஆழம் 15-20 கி.மீ.ஆக இருந்தாலும் துருப்புகள் பிரதான மண்டலத்தில் மட்டுமே இருந்தன.


ரோம்மலிடம் 4 ஜெர்மனிய,8 இத்தாலிய டிவிஷன்கள் இருந்தன. இவற்றில் சுமாராக 80ஆயிரம் ஆட்கள் இருந்தன. 540 டாங்கிகளும் 1219 பீரங்கிகளும் 350 விமானங் களும் இருந்தன.



பாலைவனப் பரப்பில் ஜெர்மனிய-இத் தாலிய படைத் தலைமை தனது சேம படை களில் பாதியை இரண்டு டாங்கி டிவிஷன்களை- இப்போர்முனையின் தென் பிரிவில் கொண்டுவந்து குவித்தது.

எகிப்து பிரதேசத்தில் நேச நாடுகளின் துருப்புகள் அனைத் தையும் ஒன்றினைத்து நின்ற 8-வது பிரிட்டிஷ் படையில் (தளபதி ஜெனரல் மொன்கமேரி) 10 டிவிஷன் களும் 4 தனி பிரிகேடு களும் அடங்கியிருந்தன. இவற்றில் மொத்த மாக 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர்கள் இருந்தனர். 1440 டாங்கி களும் 2311 பீரங்கிகளும் 1500 விமானங்களும் இருந்தன. எனவே 8-வது படை ஆட்களில் 2.8 மடங்கும் டாங்கிகளில் 2.6 மடங்கும் பீரங்கிகளில் 9.1 மடங்கும் விமானங்களில் 4.2 மடங் கும் ஜெர்மனிய-இத்தாலியத் துருப்பு களை விஞ்சிநின்றது. இத்தகைய தொரு மேன்மை தாக்குதல் நடவடிக் கைகளை வெற்றிகரமாக நடாத்த நேச நாடுகளுக்கு அனுகூலமான சூழ்நிலை களைத் தோற்றுவித்தது.

பாலை நிலப்பள்ளத்தை தொட் டுக்கொண்டிருக்கும் இடது பக்க வாட்டில் எதிரியின் சக்திகளைக் கட்டிப்போட்டு ஏல்-அலாய்மெனுக்கு தென்மேற்கேயுள்ள பிரதேசத்தில் இருந்து, சதி- ஹமீத் திசையில் வலப்புற கடல்பகுதிமீது, பிரதான தாக்குதலை தொடுப்பது தற்காப்பை பிளந்து ஜெர்மனிய-இத்தாலிய துருப்புகளின் கடற்பகுதி படைத் திரட்டை மத்திய தரைக்கடல் கரை யோரமாக தள்ளி ஒழித்துகட்டுவது என்று திட்டமிடப்பட்டது.



ஏல்-அலாய்மெனுக்கு தென்மேற்கேயுள்ள பிரதேசத்தில் இருந்து, சதி- ஹமீத் திசை யில் வலப்புற கடல்பகுதி மீது, பிரதான தாக்குதலை தொடுக்கும் துருப்புகள்

நடவடிக்கையைத் தயார்படுத்தி வரும்போது திடீரென இதை நடத்து வதன்மீது பிரிட்டிஷ் படைத் தலைமை விசேட கவனம் செலுத்தியது. இந்நோக்கத்தோடு இது உருமாற்றம் மற்றும் எதிரிக்குத் தவறான தகவல் களைத் தருவது சம்பந்தமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இவற்றின் சாரம் இதுதான்:

பாலைவனப் பரப்பில் தாக்குதலுக் கான துருப்புகளின் தயாரிப்பை மூடிமறைப்பது கடினம் என்பதை கவனத்தில் கொண்ட நேச நாடுகளின் படைத் தலைமை பிரதான தாக்கு தலின் திசை மற்றும் தாக்குதல் தொடங்கும் நேரம் சம்பந்தமாக எதிரியைக் குழப்பத்தில் ஆழ்த்துவதன் மீது தனது முக்கியக் கவனத்தை செலுத்தியது. இந்நோக்கத்தோடு பின்னணியில், இரண்டாம் பட்சமான திசையில் 8-வது படையின் இடது பக்கவாட்டில் டாங்கி துருப்புகள் குவிக்கப்படுவதைப்போன்று பாவனை செய்யப்பட்டது. எரிபொருள் கிடங்கு களின் மாதிரிகள், குழாய்கள், மற்ற பொய்யான அமைப்புகள் எழுப்பப் பட்டன. இவ்வாறு வேஷம் போட்டது, தனது நோக்கத்தை நிறைவேற்றியது. ஜெர்மனிய -இத்தாலிய படைத் தலைமை தனது சேம படைகளில் பாதியை இரண்டு டாங்கி டிவிஷன் களை- இப்போர்முனையின் தென் பிரிவில் கொண்டுவந்து குவித்தது.

அக்டோபர் 20 முதல் 23 வரை பிரிட்டிஷ் விமானங்கள் இத்தாலிய-ஜெர்மனிய துருப்புகள் குவிக்கப் பட்டிருந்த பிரதேசங்கள் மீதும் விமானத் தளங்கள்மீதும் குண்டு களை வீசி தீவிரப் பூர்வாங்க விமானப் படைத் தாக்குதலை நிறை வேற்றியது.

அக்டோபர் 23 ஆம் திகதி இரவு 9 மணி 40 நிமிடத்திற்கு பூர்வாங்க பீரங்கிப் படைத் தாக்குதல் தொடங் கியது. ஒரு கி.மீ.போர்முனையில் 50 பீரங்கிகள் குவிக்கப்பட்டிருந்தன. இந்தத் தாக்குதல் 20 நிமிடம் நீடித்தது. இதன் பயன் அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை. எதிரியின் பீரங்கிகள் ஒடுக்கப்படவில்லை.

பூர்வாங்கப் பீரங்கிப்படை தாக்கு தலுக்குப்பின் நேச நாடுகளின் 30-வது



பிரிட்டிஷ் படைத்தளபதி ஜெனரல் மொன்கமேரி

கோர்பஸின் காலாட்படை டிவிஷன் கள் இடையறா பீரங்கிக் குண்டு வீச்சின் ஆதரவோடுகூட தாக்குதலில் இறங்கின. இரவு நேரத்தில் போது மான அளவு திசையமைவுகள் இல் லாத பாலைவனப் பிரதேசங்களில் சரியான திசையில் முன்செல்வதற் காக பிரிகேடுகளைப் பிரிக்கும் இடை வெளிகள் வழியே விமான எதிர்ப்பு பீரங்கிகளைக் கொண்டு பீறிட்டுக் கொண்டுசெல்லும் புகைத் தடம் ஏற்படுத்தப்பட்டது.

இது தவிர ஸ்பாட்லைட்டுகளால் ஒளிர்விக்கப்படும் நகரும் கோபுரங் கள் திசையமைவுகளாகப் பயன்படுத் தப்பட்டன. கண்ணிவெடி வயல் களின் ஊடேயான வழிகள் எரியும் எண்ணையுடன் கூடிய குவளை களால் அடையாளம் இடப்பட்டி ருந்தன. அடுத்த நாள் காலை வாக்கில் நேச நாட்டுத் துருப்புகளால் எதிரியின் தற்காப்பினுள் ஓரளவு தான் புகமுடிந்தது. மேற்கொண்டு இந்தப்பிளவு தற்காப்பை மெதுவாக அரித்துச் செல்வதாக மாறியது.

எனவே, அக்டோபர் 24- லேயே 8-வது படையின் தளபதி ஜெனரல் மொண்ட்கமேரி, திட்டத்தின் படி வெற்றியைத் தொடருவதற்காக வைக்கப்பட்டிருந்த தனது இரண்டா வது படை வரிசையை (10-வது கோர்பஸ்) சமரில் ஈடுபடுத்தினர். ஆனால், இதுவும் எதிர்பார்த்த பயன்களைத் தரவில்லை. அடுத்த மூன்று நாட்களில் 10-வது, 30-வது கோர்பஸ்களின் படைப்பிரிவுகள் 3-5 கி.மீ. ஆழத்திற்கு மட்டுமே முன் னேறின. மேலும் தெற்குப் பக்க வாட்டில் பிரிட்டிஷ் படைகள் கவனத்தை திருப்பும் தாக்குதலில் மட்டுமே ஈடுபட்டுள்ளன என்பதை உணர்ந்து கொண்ட ஜெர்மனிய-இத்தாலிய படைத் தலைமை அங்கிருந்து நேச நாட்டுத் துருப்பு களின் பிரதான தாக்குதல் திசைக்கு தனது டாங்கிப் படைப்பிரிவுகளை மாற்றியது.

(தொடரும்)

# தமிழர்கள் சுயமரியாதையுடன்வாழவே ஜெனீவா பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)

இலங்கை வாழ் தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும் உரிமைகளோடும் வாழ்வதற்கே ஜெனீவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

எனவே, சர்வதேசத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல் நம்பிக்கையோடு அரசாங்கம் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கி அதிகாரப் பரவலாக்கலும் வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்த வேண்டுமென்றே அமெரிக்கா ஜெனீவாவில் பிரேரணையைக் கொண்டு வந்தது.

அதனை தார்மீகக் கடமையுடன் இந்தியா ஆதரித்தது. தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் உரிமைகளோடு வாழ வேண்டும் என்பதே நோக்கமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கத்திற்குள்ளிருக்கும் பேரினவாத அடிப்படைவாத சக்திகள் சர்வதேசத்திற்கு எதிராக குரோதத்தன்மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் இதனை நடைமுறைப்படுத்துவதை தடுக்கவும் முயற்சிக்கின்றன.

இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தையும் பயன்படுத்தி காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்க வேண்டும்.

பெரும்பான்மை பலம் கொண்ட இந்த அரசாங்கத்தால் இதனை நிறைவேற்ற முடியாவிட்டால் வேறெந்த அரசாங்கத்தாலும் அது நிறைவேறாது.

சர்வதேசத்தை பகையாளிகளாக நோக்காது பங்காளிகளாகக் கருதி செயற்பட்டு சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்று நாட்டையும் மக்களையும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல அரசாங்கம் அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டும். (2-7)

# வடக்கு- கிழக்கு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி அபிவிருத்தியில் இணைப்பு

(வவுனியா)

இங்கு வாழும் இளைஞர்களின் திறன்களை வளர்ப்பதற்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கு இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழும் இளைஞர்களுக்கும் தொழிற் பயிற்சி வழங்கி அவர்களையும் இந்த நாட்டின் அபிவிருத்தியில் இணைப்பதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும் என இளைஞர் விவகார திறன்விருத்தி பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் புதிய கட்டடம் வவுனியா பூங்கா வீதியில் திறந்து வைக்கப்பட்ட போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

நோர்வே நாட்டின் அனுசரணையில் இளைஞர் விவகார திறன் விருத்தி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் கனேடிய உலக பல்கலைக்கழகத்தினால் இக் கட்டடமானது வடக்கின் மாற்றம் என்ற திட்டத்தின் மூலம் அமைக்கப் பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் வழிகாட்டலில் இடம்பெறும் இப் பயிற்சியில் அனைத்து இளைஞர்களும் பங்கு கொண்டு ஒரு தாய் நாட்டுப்பிள்ளைகளாக இந் நாட்டை வளர்ப்போம் என்றார். (2-7)

# ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைகள் குறித்து ஐ.நாவுக்கு அறிவிக்க அரசு ஏற்பாடு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற முறைமை தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை எதிர்வரும் காலங்களில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இவ்வாறான செயற்றிட்டம் முன்வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட மற்றும் தொடர்ந்து எடுக்கப்படவுள்ள விபரங்கள் உள்ளிட்ட விரிவான செயற்றிட்டத்தை விரைந்து முன்னெடுக்குமாறும் சர்வதேச சட்டவிதிகள் மீறப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து கவனம் செலுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை கோருதல் என்று அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த திட்டவரைபை மனித உரிமைப் பேரவைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டிருந்ததாகவும் அதன்படி எதிர்காலத்தில் இந்த செயற்பாட்டுத் திட்டம் முன்வைக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அது குறித்து எதிர்வரும் காலங்களில் ஆராயப்படும் என்றும் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் அதனை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் தெரியவருகின்றது. (2-7)

# நாட்டிற்கு ஆதரவான அல்லது எதிரான நாடுகள் என எதையும் வேறுபடுத்தமாட்டோம்

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் எமக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் நமது நாட்டுக்கு ஆதரவான நாடுகள் என்றும் நமது நாட் டுக்கு எதிராக வாக்களித்த நாடுகள் எமக்கு எதிரான நாடுகள் என்றதுமான கண்ணோட்டத்துடன் நாம் ஒருபோதும் பிரித்துப் பார்க்க மாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகில் மிக பிரபலமான நாடுகளினால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணையை மனித உரிமைப் பேரவையில் 47 அங்கத்துவ நாடுகளில் 23 நாடுகள் நிராகிரித்துள்ளன.

நேரடியாக 15 நாடுகளும் மறைமுகமாக 8 நாடுகளும் இவ்வாறு நிராகரித்துள்ளன.

கடந்த ஆண்டில் சிரியா நாட்டுக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட 4 பிரேரணைகள் ஐக்கிய நாடுகளின் 193 நாடுகளுக்குள் நடைபெற்று வாக்கெடுப்பின் போது அப்பிரேரணைக்காக 193 வாக்குகளில் 8 வாக்குகள் மட்டுமே அந்நாட்டுக்கு ஆதரவாக கிடைத்தன.

அதனால் இச்சந்தர்ப்பத்தில் எமக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் நமது நாட்டுக்கு ஆதரவான நாடுகள் என்றும் நமது நாட்டுக்கு எதிராக வாக்களித்த நாடுகள் எமக்கு எதிரான நாடுகள் என்ற கண்ணோட்டத்துடன் நாம் ஒருபோதும் பிரித்துப் பார்க்க மாட்டோம் என அதில் குறிப்பிட்டுள்ளார். (2-7)

# மேர்வின் உரை குறித்து பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

பொதுமக்கள் அமைச்சர் மேர்வின் சில்வா உரையின் உள்ளடக்கங்கள் குறித்து விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

துரோகி என தான் குறிப்பிட்ட ஊடகவியலாளர் ஒருவரின் கை, கால்களை உடைப்பேன் என அண்மையில் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் பொத்தல ஜயந்தவை நாட்டை விட்டு துரத்தியமைக்கும் தானே பொறுப்பு என அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக தமிழ் மிரரின் சகோதர ஆங்கில இதழான டெய்லி மிரருக்கு பொலிஸ் பேச்சாளர் கூறுகையில், அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்துக்கள் குறித்து பொலிஸாரால் விசாரிக்கப்படுவதாக கூறினார்.

இந்த கருத்தின் நோக்கம் தெளிவில்லாத நிலையில் நான்கு விடயங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இத்தகைய கருத்தை கூறிய நபர் மனநிலை ஸ்திரமற்றவரா அல்லது உண்மையிலேயே இந்த நடவடிக்கையை தான் மேற்கொண்டதால் அவர் இதை தெரிவித்தாரா அல்லது மற்றொரு நபரை பாதுகாப்பதற்காக இப்படி கூறினாரா அல்லது பிரசித்தமடைவதற்காக் இத்தகைய கருத்தை கூறினாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

அமைச்சரால் குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளர் சில வருடங்களுக்கு முன்னர் அத்துருகிரியவில் வைத்து தாக்கப்பட்டதாகவும் இது தொடர்பாக தகவல்கள் திரட்டப்படுவதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை அமைச்சரின் கூற்று குறித்து விசாரணை நடத்த கோரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் ஆனால், இந்த உரையின் உள்ளடக்கம் காரணமாக பொலிஸார் தானாக விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் கூறினார். (2-7)

# பொருளாதார வளர்ச்சி 8.3 வீதத்தால் உயர்ந்தது

கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.3 % என குடிசன மதிப்பீட்டுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் 2010 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 வீதமாக காணப்பட்டதென குடிசன மதிப்பீட்டுதிணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப ரீதியில் 10.3 வீத வளர்ச்சியும் சேவை ரீதியில் 8.6 வீத வளர்ச்சியும் பதிவாகியுள்ளது.

விவசாயத் துறையில் 1.5 வீத வளர்ச்சியே 2011 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. (2-7)


சின்மயா மிஷன்- யாழ்ப்பாணம்



வழங்கும்

திருமந்திரம்

(ஆன்மீகச் சொற்பொழிவு)



வெற்றிக்கு வழிகாட்டும், மன அமைதியை ஏற்படுத்தும், ஆனந்தத்தை அள்ளித்தரும், ஆன்மீகக் கருத்துக்களை இனிய தமிழில் பகிர்ந்து கொள்ள

சங்கம் வளர்த்த மதுரையில் இருந்து வருகை தருகிறார்

சுவாமி

சிவயோகானந்தா

காலம்:-28.03.2012 முதல் 31.03.2012 வரை

மாலை 5.30மணிமுதல் 6.30 மணிவரை

இடம்:-நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

அன்புடன் அழைக்கின்றோம்! அனுமதி இலவசம்

சின்மயா மிஷன்-09,செட்டித்தெரு ஒழுங்கை ,நல்லூர்,யாழ்ப்பாணம்

தொ.பே.:0776491828, மின்னஞ்சல்:jagrat@chinmayalanka.org




# அம்புலி மாமா கதைகள்

## மானிடப்பிறப்பு



பிரம்மதத்தன் காசியை ஆண்டபோது போதிசத்வர் மகதநாட்டில் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்து மகத மன்னனின் மாளிகையில் பணியாளராக இருந்து வந்தார். மகத நாட்டிற்கும் அங்கத நாட்டிற்கும் மத்தியில் சம்பாநதி ஓடியது. அந்த நதியின் கீழ் நாகலோகம் இருந்தது.

அந்த லோகத்தை சம்பேயன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். மகத நாடும் அங்கதநாடும் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டேயிருந்தன. ஒரு முறை இரண்டு நாட்டிற்கும் இடையில் நடந்த போரில் மகதமன்னன் தோற்றுத் தன் குதிரைமீது ஏறி ஓடிப் போனான். அவன் சம்பாநதியை அடைந்ததும் தன் குதிரையோடு ஆற்றில் விழுந்தான்.

ஆனால் அவன் நீரில் மூழ்கிச் சாகாமல் தன் குதிரையோடு நாக லோகம் போய்ச் சேர்ந்தான். மகத மன்னனை நாகலோக மன்னனாக சம்பேயன் வரவேற்றான். அவனை நன்கு உபசரித்து நலங்கள் பற்றி விசாரிக்கவே மகதமன்னனும் தன் நிலை பற்றிக் கூறினான். இதைக் கேட்ட நாக மன்னனும் கவலைப்படாதீர்கள் நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். அங்கத மன்னனைப் போரில் தோற்கடித்து உங்கள் நாட்டை உங்களுக்கு மீட்டுத் தருகிறேன் என்றான். அவன் சொன்னபடியே மகத மன்னனுக்கு உதவி புரிந்தான்.

போரில் அங்கத மன்னன் மடியவே அவனது நாட்டிற்கும் மகத மன்னன் அரசனானான். அந்த நிகழ்ச்சிக்குப் பின் நாகமன்னன் மகதமன்னனின் ஆருயிர் தோழனாக ஆனான். மகதமன்னன் வருடத்தில் ஒருநாள் தன் பரிவாரங்களோடு சம்பா நதிக் கரைக்குச் செல்வான்.

அன்றே நாகமன்னன் ஆற்றிலிருந்து தன் சுற்றுப்பரிவாரங்களோடு வெளிவந்து மகதமன்னன் அளிக்கும் பரிசுகளை ஏற்றுக்கொள்வான். மகத மன்னனின் பரிவாரத்தில் ஒரு பணியாளராக இருந்த போதிசத்வர் நாக மன்னனின் வைபவத்தை கண்ணாரக்கண்டார். அதனால் அவர் இறக்கும்போது அவன் நினைவாகவேயிருந்தார். அவர் இறந்த 7 நாட்களில் நாகமன்னனும் இறக்கவே போதிசத்வரே அடுத்த நாகமன்னனாகப் பிறந்தார். ஆனால் அவரது உடல் மனித உடலாக இல்லாமல் பாம்பாகவேயிருந்தது. இது அவரது மனதை உறுத்தியது.

அவர் தற்கொலை செய்து கொள்ளலாமா என தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த போதுதான் சுமனா என்ற அழகிய நாகக்கன்னிகை தன் தோழிகளோடு வந்து அவரை வணங்கினாள். அவளைக் கண்டதும் அவர் தனது தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தைவிட்டுவிட்டு அவளை மணந்துகொண்டு நாகலோகத்தை நன்கு ஆண்டு வந்தார். ஆனால் சிறிது நாட்களுக்குப்பின் அவர் மனம் விரதங்கள், உபவாசங்கள், நிஷ்டை போன்றவற்றில் ஈடுபட்டு புண்ணியமடைய விரும்பியது. எனவே தன்



நாகலோகத்தைவிட்டு அவர் பூவுலகிற்குப் போக தீர்மானித்துக் கொண்டார். அவர் நாகலோகத்திலிருந்து பூவுலகிற்கு வந்து ஒரு ஒற்றையடிப் பாதையோரமாக இருந்த எறும்புப்புற்றைச் சுற்றிப் படுத்துக்கொண்டு என்னை கருடனோ பாம்பாட்டியோ பிடிக்கக் கூடாதா என நினைத்தார்.

ஆனால் அவ்விதம் நடப்பதற்கு மாறாக அவ்வழியே வந்தவர்கள் அந்தப் பாம்பை ஒரு தேவதையாகக் கருதி வணங்கி வரலானார்கள். அங்கு அதற்கு ஒரு கோயிலையும் கட்டி வேளா வேளைக்கு அதற்குப் பூசை செய்ய ஏற்பாடுகளையும் செய்தனர். மக்கள் அங்கு வந்து தீராத நோய்கள் தீரவேண்டும் என்றும் தமக்குப் பிள்ளை பிறக்கவேண்டும் என்றும் தாங்கள் நினைத்த காரியங்கள் நல்லபடியாக நடக்கவேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தனர்.


நாகமன்னன் அங்கே உபவாசம் இருந்துவிட்டு மாதத்தில் ஒருநாள் கிருஷ்ணபட்ச அட்டமிநாளன்று நாக லோகம் சென்று வரலானார். அவ்வாறு நாகமன்னர் நாகலோகத்திற்கு வந்திருந்த போது அவனது மனைவியான சுமனா ஒருநாள் தன் கணவரிடம் நீங்கள் எப்போதும் பூவுலகத்திலேயே இருக்கிறீர்களே உங்களுக்கு ஏதாவது ஆபத்து அங்கு நேர்ந்தால் அதை நான் எவ்வாறு அறிவது என்று கேட்டாள்.

நாகமன்னனும் அவளை ஒரு குளத்திற்குக்கூட்டிக்கொண்டுபோய் நான் காயப்பட்டால் இதன்நீர் கலங்கிவிடும். என்னைக் கருடபட்சி கவர்ந்து சென்றால் இது உறைந்து கட்டியாகிவிடும். என்னைப் பாம்பாட்டியோ மந்திரவாதியோ பிடித்துவிட்டால் இதன் நீர் இரத்தம்போல் சிவப்பாக ஆகிவிடும் என்றான்.

சில நாட்களாகின. தட்சசீலத்தில் வசீகர மந்திரங்கரைளக் கற்ற பிராமண வாலிபன் ஒருவன் நாகமன்னனின் கோயில் இருந்த இடத்திற்கு வந்தான். புற்றைச் சுற்றிக்கொண்டு படுத்திருந்த நாகமன்னனைக்கண்டு பாம்மை வசீகரிக்கும் மந்திரத்தை உச்சரித்து அதனைப்பிடித்து தன்னிடமிருந்த ஒரு பெட்டிக்குள் அடைத்து எடுத்துக் கொண்டான்.

அவன் பல ஊர்களுக்குப் போய் அந்தப் பாம்மை ஆடவைத்து வேடிக்கை காட்டிப் பணம் சம்பாதித்தவாறே காசி நகரை அடைந்தான். அவன் பாம்பிற்கு ஆகாரமே கொடுக்காததால் அது பட்டினி கிடந்தது. இப்படி ஒருமாத காலம் இருந்தது. அந்தவாலிபன் அவ்வப்போது தவளைகளைப் பிடித்து வந்து அதன்முன் வைத்து வரலானாள். ஆனால் அப்பாம்பு அவற்றைப் பார்க்கக்கூடவில்லை.

அந்தவாலிபனோ பல இடங்களில் அந்தப்பாம்மை வித்தைகாட்டி வந்தான். அந்தப்பாம்பும் நன்றாக ஆடி பார்ப்பவர்களை மகிழ வைத்துவந்தது. இதனால் அந்தப் பாம்மைப் பற்றி எல்லோரும் புகழ்ந்து பேசலானார்கள். அந்தப் பாம்பின் வித்தையைப் பற்றி காசிமன்னனின் காதிலும் விழுந்தது. அதனால் ஒருநாள் அந்த வாலிபனை அழைத்து பாம்மை ஆடவைத்து வேடிக்கை காட்டச்சொன்னான்.



இதேசமயம் நாகலேகத்தில் சுமனா தனது கணவர் திரும்பிவராதது கண்டு அவன் காட்டிய குளத்தைப்பார்க்கப் போனாள். அங்கு சென்றதும் அக்குளத்தின் நீர் சிவப்பாக மாறியிருப்பது கண்டு தன் கணவரை யாரோ பிடித்துவிட்டார்கள் என்று அவள் தெரிந்து கொண்டு பூவுலகிற்குப் போய் தேடலானாள். அவளுக்கும் காசி நகரிலுள்ள பாம்பு பற்றி தெரியவரவே அங்கு அவள் சென்றாள்.

அவள் காசி மன்னனின் அரண்மனையை அடைந்தபோது பிராமண வாலிபன் தான் பிடித்துவந்த பாம்மை மன்னன் முன் ஆடவைத்து வித்தைகாட்டிக்கொண்டிருந்தான். அந்தப்பாம்பு தன் மனைவியைக் கண்டதும் மிகவும் வெட்கப்பட்டு பாம்புப் பெட்டிக்குள் போய் புகுந்து



கொண்டது.

சுமனா மானிடப் பெண் போலாகி காசி மன்னனைக் கண்டு அவனிடம் அரசே என் கணவரை என்னிடம் சேர்ப்பிக்கவேண்டும் என வேண்டினாள். இதே சமயம் பாம்பும் பெட்டியிலிருந்து வந்து அரசன் முன் ஒரு அழகான வாலிபனாகி நின்றது.

காசி மன்னனும் அந்த நாக தம்பதியைக் கண்டு மகிழ்ந்து அவர்களை ஒரு வார காலத்திற்குக் தன் விருந்தினர்களாக இருக்கச் செய்தான். பின்னர் அவன் தன் பரிவாரங்களோடு அவர்களுடன் நாக லோகத்திற்குச் சென்றான்.

நாகலோக வைபவங்களைக் கண்டு காசி மன்னன் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. அவன் நாக மன்னிடம் இங்கு இவ்வளவு சுக போகங்களும் வைபவங்களும் இருந்தும் தாங்கள் பாம்பாகிப் புற்றைச் சுற்றிக் கொண்டு படுத்திருந்த காரணம் என்னவோ எனக் கேட்டான்.

நாகமன்னனும் இவ்வளவு சுகம் இங்கேயிருந்தாலும் பூலோகத்தில் இருந்தால்தான் மறுபிறப்பு அடையாமல் இருப்பதற்கான வழிகாண முடியும். அதற்காகவே நான் அங்கே அவ்வாறு இருந்தோன் என்றான். அதைக்கேட்ட காசிமன்னன் மிகவும் பரவசப்ப்ட்டான். போதிசத்வரான அந்த நாகமன்னரை வணங்கி அவர் கொடுத்த பரிசுகளை ஏற்றுக் காசிக்குத் திரும்பி வந்தான்.



வட்டக்கச்சி சில்வாவீதி தூயமணி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த திறனாய்வுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போட்டியில் பங்குபற்றுவதற்கு தயார் நிலையில் சிறார்கள் நிற்பதையும் விநோத உடை நிகழ்வினையும் வெற்றியீட்டிய முன்பள்ளி சிறார் ஒருவருக்கு ஆசிரியை பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-வட்டக்கச்சி செய்தியாளர்)

# கிளி.மாவட்டத்தின் சில பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் மூன்று கிராமங்களில் இதுவரை முழுமையாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இரண்டு கிராமங்களின் சில பகுதிகள் கண்ணிவெடி அகற்றப்பட்டு பகுதியளவில் விடுவிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி முகமாலை, இத்தாவில், வேம்படுகேணி ஆகிய கிராமங்கள் பகுதியளவில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் நலன்புரி நிலையங்களில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த ஒருவரும் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வடமாகாணத்திற்காக தமிழ், சிங்கள புத்தாண்டு தேசிய நிகழ்வு இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தேசியமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கிராமிய விளையாட்டுக்கள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-7)

# ஜெனீவா சென்ற அரசசார்பற்ற பிரதிநிதிகளை விசாரிக்க வேண்டும்

## அமைச்சர் விமல்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஜெனீவா சென்ற பாக்கியசோதி சரவணமுத்து உட்பட அரச சார்பற்ற பிரதிநிதிகளின் வங்கிக் கணக்குகளை சோதனை செய்வதற்கும் அவர்களை விசாரணை செய்வதற்கும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச வேண்டுகோள் விடுத்தார்.

இவர்களுக்கு விடுதலைப்புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களா அல்லது அமெரிக்காவா பணம் வழங்குகிறது என்பதனையும் ஆராயவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அமைச்சர் விமல்வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜெனீவாவில் அமெரிக்கா இலங்கைக்கு. எதிராக பிரேரணை கொண்டுவந்தபோது அங்கிருந்து கொண்டு நாட்டுக்கு எதிராக செயற்பட்ட பாக்கியசோதி சரவணமுத்து, சுனீலா அபயரட்ன, சுனந்த தேசப்பிரிய, நிமல்கா பெர்னாண்டோ, வெலியன ஆகியோர் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

ஜெனீவாவுக்குச் செல்வதற்கும் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் தூங்குவதற்கும் சுகபோகம் அனுபவிப்பதற்கும் இவர்களுக்கு யார் பணம் வழங்கினார்கள். புலம்பெயர் தமிழ் புலி ஆதரவாளர்களா அல்லது அமெரிக்காவா என்பதை ஆராயவேண்டும்.

இவர்களது வங்கிக் கணக்குகள் அனைத்தும் சோதனை செய்யப்படவேண்டும். மத்திய வங்கி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (2-7)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## பசுஞ்சோலையின் நுழைவாயிலே பாலைநிலம்



பாலைநிலம் ஒரு பயிற்சி பாசறை, மனிதம் பக்குவப்படும் இடம் பாலைவனம். மனிதர்கள் பெரிய மனிதர்களாக உருவாகுவது இந்த பாலை நிலங்களில்தான். நசரேத்தூர் இயேசு பிற்காலத்தில் விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடும் கிறிஸ்துவாக உயர்ந்ததில் பாலைநிலத்திற்கு பெரும் பங்கு உண்டு. திருச்சபையை மிகக் கொடுமையாக துன்புறுத்தி ஒழிக்க முயன்ற சவுல், பிற்காலத்தில் புனித பவுலாக பெரும் திருத்தூதராக உயர்ந்ததில் அரேபியா பாலைநிலத்தின் பங்களிப்பு மிகப் பெரிது. ஐந்து அப்பங்கள் ஐயாயிரமாக பெருகிய இடம் ஒரு பாலைநிலம். பாலைநிலச் சூழல், அங்கிருந்தவர்களை பக்குவப்படுத்தியது. பகிர்ந்து கொள்ள வைத்தது. பசியைப் போக்கியது. சேமிக்கவும் உதவியது.

பாலைநிலம் பசுஞ்சோலையின் நுழைவாயில். பாலைநிலம் என்னும் பாசறையில் பயிற்சி பெற்றவர்கள் இனி எந்த நிலத்திற்குச் சென்றாலும் செழிப்போடு வாழ்ந்து விடுவார்கள். எந்த இழப்பையும் எந்த துன்பத்தையும் தாங்கும் வலிமையை உடலிலும் உள்ளத்திலும் அவர்கள் பெற்று விடுகின்றார்கள்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

இஸ்ராயேல் நாடு அதற்கு ஒரு சான்று. கடந்த காலங்களில் அவர்கள் அனுபவிக்காத துன்பமா! வேதனையா! விரக்தியா! மோசேயின் தலைமையில் 40 ஆண்டுகள் பாலைநிலத்தில் அவர்கள் பெற்ற பாலைநில அனுபவம் அன்று அவர்களை பாலும் தேனும் பொழியும் நாட்டுக்கு வழி நடத்திச் சென்றது.

பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலும் இன்றைய இஸ்ராயேல் சந்ததியினர் சவாலாக சாதனையாக வாழ்ந்து வருகின்றனர் என்றால் அதற்கு காரணம் அன்றைய இஸ்ராயேலரின் பாலைவன பயிற்சி. இந்தப் பாலைநிலத்தை தேடி சகாராவுக்கோ, தார்பாலைவனத்திற்கோ, அரேபிய நாடுகளுக்கோ செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எங்களைச் சுற்றிலும் நாங்களோகவே உருவாக்கிக் கொள்ளலாம்.

அல்லது வாழ்வில் சில சமயங்களில் பாலைநில அனுபவம் எங்களைத் தேடியும் வரலாம். பாலைநிலம் ஒரு பயிற்சிப் பாசறை, பாலைநிலம் பசுஞ்சோலையின் நுழைவாயில், பாலைநிலம் பாதுகாப்பான இடம் என்பதை புரிந்து கொண்டு வாழ முயன்றால் வான தூதர்கள் எங்களுக்கு பணிவிடைபுரிவார்கள்.

# மலேசியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சட்டவிரோத மதுசாரம் சிக்கியது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 3 கோடி ரூபாய் பெறுமதியான மதுசாரம் கலால் திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றுப்பட்டிருப்பதுடன் அதன் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் திணைக்களப் பேச்சாளர் எஸ்.பி.பிரபாத் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொல்கலன்களில் அடைக்கப்பட்ட நிலையிலேயே மேற்படி 13 ஆயிரம் லீற்றர் மதுசாரமும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மலேசியாவிலிருந்து இலங்கைக்கு கப்பல் மூலமாக சட்டவிரோதமான முறையில் இம் மதுசாரம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை அதன் உரிமையாளர் இரண்டு கொள்கலன் லொறிகளில் பியகமவில் இருந்து மல்வானை நோக்கி எடுத்துச் செல்கையிலேயே தாம் மடக்கிப் பிடித்ததாகவும் இதனையடுத்து அதன் ஊரிமையாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

துறைமுகத்தில் இரசாயனத் திரவியமொன்றை இறக்குமதி செய்வதாக போலி ஆவணங்களை சமர்ப்பித்தே அதன் உரிமையாளர் மேற்படி மதுசாரத்தை இறக்குமதி செய்துள்ளார்.

மதுசார இறக்குமதியின்போது அரசாங்கத்துக்கு செலுத்தப்பட வேண்டிய வரி முறைப்படி செலுத்தப்படாத குற்றசாட்டிற்காகவே அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கலால் திணைக்களத்தின் பேச்சாளர் கூறினார். கைது செய்யப்பட்டிருக்கும் உரிமையாளர் பிரபல தொழில் நிறுவனத்தின் பணிப்பாளராவார்.

கலால் திணைக்களம் பொலிஸ் போதைவஸ்து தடுப்பு பிரிவினருடன் இணைந்தே மேற்படி சுற்றி வளைப்பை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)


# ஜனாதிபதிக்கெதிராக கோவையில் நூதனமான போராட்டம்

இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்ற நிலையில் கோவையில் நூதன போராட்டம் நடைபெற்றுள்ளது.

அனுமன் சோன அமைப்பை சேர்ந்த 50 பேர் அதன் நிறுவன தலைவர் ஸ்ரீதர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தோஷ் ஆகியோர் தலைமையில் கோவை பேரூரில் உள்ள படித்துறைக்கு வந்தனர்.

அங்கு மாவட்ட துணை செயலர் தேவ கோவிந்தராஜ் தலைமையில் ஏழு பேர் மொட்டை அடித்தனர்.

தமிழர்கள் விரோத போக்கை கொடுங்கோலன் மாற்ற வேண்டும். ஈழத்தில் செய்த படுகொலைக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். ஈழத்தில் கோவில்களை இடித்த கொடுங்கோலன் ஒழிய வேண்டும் என அவர்கள் கோஷமிட்டனர். (2-7)



பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடமாகாண ஆளுநரின் விசேட நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மாணவி ஒருவருக்கு காசோலை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த எதிர்க்கட்சிகளின் உதவி அரசிற்கு தேவையில்லை

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகளின் உதவி அவசியமற்றது என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்போ அல்லது எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்போ அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு சர்வதேச சமூகம் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு முன்னதாகவே நடைமுறைச் சாத்தியமுடைய அனைத்து பரிந்துரைகளையும் அமுல்படுத்துவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே அரசாங்கம் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக சில அரசியல் கட்சிகள் செய்து வரும் பிரசாரம் அடிப்படையற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில பரிந்துரைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் இது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சகல விடயங்களையும் அரசாங்கம் அமுல்படுத்தாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நடைமுறைச் சாத்தியப்பாடுடையதுமான பரிந்துரைகள் மட்டுமே அமுல்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ பதிலளிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (2-7)

## அனைத்து நாடாளுமன்ற குழு அமர்வுகளிலும் இலங்கைக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அனைத்து நாடாளுமன்ற குழு அமர்வுகளிலும் இலங்கைக்கு சவால் விடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரையில் உகண்டாவின் கம்பலா நகரில் அனைத்து நாடாளுமன்ற குழு அமர்வுகள் நடைபெறவுள்ளது. இந்த அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகளினால் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன நாடாளுமன்றில் தாக்குதல் நடத்தியமை, ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மற்றும் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜெனீவா அமர்வுகளில் கிடைக்கப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு அனைத்து நாடாளுமன்ற குழு அமர்வுகளை வெற்றிகரமாக எதிர்நோக்கத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்த அமர்வுகளில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2-7)

## மேர்வின் கருத்து கண்டனத்திற்குரியது

### ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்து கண்டனத்திற்குரிய என வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறான கருத்துக்களை அனுமதிக்க முடியாது என-அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் கை, கால்களை உடைக்கப் போவதாக அமைச்சர் அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

எந்த சந்தர்ப்பத்திலும் வன்முறைகளுக்கு இடமளிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரியாக சிந்திக்கும் எவரும் இவ்வாறான கருத்துக்களை அனுமதிக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் தனிப்பட்ட ஒரு நபரின் கருத்துக்களை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக சர்வதேச ஊடகங்கள் திரிபுபடுத்தக்கூடாது என அவர் கோரியுள்ளார். மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (2-7)

## 2012.03 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1513*-நாடுகாண் பயணி ஜுவான் பொன்ஸ் டி லெயோன் வட அமெரிக்காவைக் (புளோரிடா) கண்ணுற்றார்.

★ *1625*-முதலாம் சார்ல்ஸ் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து மன்னராக முடி சூடினார். அத்துடன் பிரான்ஸ் மன்னனாகவும் தன்னை அறிவித்தார்.

★ *1854*-கிரிமியாப் போர்: ஐக்கிய இராச்சியம்,ரஷ்யா மீது போரை அறிவித்தது.

★ *1890*-கென்டக்கியில் லூயிஸ்வில் என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 76 பேர் உயிரிழந்தனர்.

★ *1918*-மல்தோவா, பெசராபியா ஆகியன ருமேனியாவுடன் இணைந்தன.

★ *1941*-இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் அச்சு அணி ஆதரவு அரசாங்கம் யூகொஸ்லாவிய வான்படையினரால் கவிழ்க்கப்பட்டது.

★ *1958*-நிக்கிட்டா குருஷேவ் சோவியத் பிரதமர் ஆனார்.

★ *1964*-அமெரிக்க சரித்திரத்தில் அதி சக்தி வாய்ந்த 9.2 ரிக்டர் நிலநடுக்கம் அலாஸ்காவில் இடம்பெற்றதில் 125 பேர் உயிரிழந்தனர். அன்கரேஜ் என்ற நகரத்தின் பெரும் பகுதி சேதமுற்றது.

★ *1968*-விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் சோவியத் ஒன்றியத்தின் யூரிககாரின் விமான விபத்தொன்றில் உயிரிழந்தார்.

★ *1969*-நாசாவின் மரைனர் 7என்ற ஆளில்லா தானியங்கி விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.

★ *1970*-கொன்கோர்ட் விமானம் தனது முதலாவது சுப்பர்சொனிக் பயணத்தை மேற்கொண்டது.

★ *1977*- இரண்டு பயணிகள் விமானங்கள் கனாறி தீவுகளில் மோதிக் கொண்டதில் 583 பயணிகள் உயிரிழந்தனர்.

★ *1980*-நோர்வேயின் எண்ணெய்த் தாங்கி ஒன்று வட கடலில் விபத்துக்குள்ளாகியதில் 123 பேர் உயிரிழந்தனர்.

★ *1993*-ஜியாங் செமின் மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதியானார்.

★ *1994*-அலபாமாவில் சூறாவளி தாக்கியதில் 20 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ *1845*-வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1923)

★ *1847*-ஒட்டோ வல்லாச், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1931)

★ *1901*-எய்சாக்கு சாட்டோ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியப் பிரதமர் (இ.1975)

★ *1942*-ஜோன் சல்ஸ்டன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய அறிவியலாளர்


★ *1886*-லுட்விக் மீஸ் வான்டெர் ரோ, ஜேர்மனிய கட்டடக் கலைஞர் (இ.1969)

### இறப்புக்கள்

★ *1898*-சர் சையது அகமது கான், இந்திய அறிஞர் (பி.1817)

★ *1967*-யாரோஸ்லாவ் ஹெய்ரோவ்ஸ்கி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1890)

★ *1968*-யூரி ககாரின், விண்வெளிவீரர் (பி.1934)



★ **1892-யாழ்நூல் எழுதிய சுவாமி விபுலாநந்தரின் பிறந்த தினம்(இ.1947)**

# அதிசய உலகம்...



## 78 வயதிலும் குறிதவறாமல் துப்பாக்கி சுடும் மூதாட்டி

சந்திரா தோமார் என்ற மூதாட்டி 78 வயதிலும் குறிதவறாமல் துப்பாக்கி சுடும் வீராங்கனையாக உலா வருகிறார்.

இவர் உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஜோரி கிராமத்தைச் சேர்ந்த இதுவரை 25 தேசியப் போட்டிகளில் பங்குபெற்று வெற்றிவாகை சூடிய இவருக்கு ஆறுகுழந்தைகளும் 15 பேரக் குழந்தைகளும் உள்ளனர்.




நரைத்த முடியுடன் வயதான தோற்றத்தில் காட்சியளிக்கும் இவர் துப்பாக்கி சுடும் போட்டியில் டில்லி பொலிஸ் அதிகாரியை வென் றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வாரந் தோறும் தனது பேத்தியின் பயிற்சிக்காக துணைக்கு சென்ற மூதாட்டியின் துப்பாக்கி சுடும் ஆசையையும் திறமையையும் கவனித்த பயிற்சியாளர் பரூக்பாதான் இவருக்கு ஊக்கமளித்தார்.

திறமைக்கு வயது ஒரு தடையல்ல என் பதை நிரூபிக்கும் வகையில் தனது முயற்சியில் பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்று தொடர்ந்து பரிசுகளையும் பதக்கங்களையும் வென்று வருகிறார்.

குறி பார்க்கும் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் தண்ணீர் போத்தலில் கற்களை எறிந்து பயிற்சி பெறுகிறார். இவரது மகள் சீமாவும் துப்பாக்கி சுடுவதில் மிகவும் திறமையானவர். ரைஃபிள்& பிஸ்டல் உலக கிண்ணப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை சீமா பெற்றுள்ளார்.

பாட்டி சந்திரா, தாய் சீமா மற்றும் பேத்தி என மூவரும் ஒரு குடும்பத்தில் பாரம்பரியமாக துப்பாக்கி சுடும் திறமையையில் ஜொலிக்கிறார்கள். சந்திராபாட்டி ஒரு தேசியப் பொக்கிஷம் என்கிறார் அவரது பயிற்சியாளர் பாரூக்.

## மரம் ஏறி இறங்கும் அபூர்வ கரடி



இந்த மனிதனுக்கும் கரடிக்கும் இடையிலான புரிந்துணர்வைப் பாருங்கள். காட்டில் உள்ள மரமொன்றில் ஏணியை வைத்து ஒருவர் மேலே ஏறுகின்றார். சிறிது நேரத்தில் அங்கு வந்த கரடி ஒன்று அந்த ஏணியின் மீது இருக்கின்றது.

ஏணியின் முக்கால்வாசித் தூரம் வந்த கரடியிடம் மேலே உள்ள மனிதன் Hey, what you doing there? என்று அதாவது அங்கே என்ன செய்கின்றாய் என்று ஆங்கிலத்தில் கேட்கின்றார்.

அவர் கேட்டதை புரிந்து கொண்ட கரடி ஏணியில் இருந்து கீழே இறங்கத் தொடங்குகின்றது.


இறங்கிய கரடி தன்பாட்டில் வேகமாக காட்டுக்குள் ஓடிப் போகின்றது.

பெரியவர்களின் சொல்லை மதிக்காத மனிதர்களும் உள்ளனர். அவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தக் கரடியின் செயற்பாடு அமையும். இச்சம்பவம் யூரியூப்பிலும் வெளியிடப் பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஒரு காட்சிபடமாக .

## ஆழ்கடல் ஆபத்தின் போது உதவும் ரோபோ கண்டுபிடிப்பு

ஆழ்கடலில் ஆபத்தில் சிக்குபவர்களுக்கு உடனடியாக உதவும் பொருட்டு ஜெல்லி மீனை அடிப்படையாக கொண்டு ஐதரசன் வாயுமூலம்இயங்கும்ரோபோ தயாரிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் வேர் ஜீனியா டெக் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு பயன்பாட்டுக்கு ரோபோக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக ஆழ்கடல் குறித்து ஆராய்ச்சி செய்தவர்கள் ஆபத்தில் சிக்கி வருகின்றனர். அவர்களுக்கு உதவும் வகையில் நவீன ரோபோ ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது.



ஜெல்லி மீனை அடிப்படையாக கொண்டு ஐதரசன் வாயு மூலம் இயங்கும் புதிய ரோபோவை உருவாக்கி இருக்கிறோம். இது கடலில் மிக வேகமாக ஜெல்லி மீனை போலவே இயங்கும். ஆழ்கடல் பகுதிக்கு விரைவாகவும் எளிதாகவும் செல்லக்கூடியது. இதற்கு ரோபோ ஜெல்லி என்று பெயரிட்டுள்ளோம்.

கடலில் ஆழத்தில் ஆபத்தில் உள்ளவர்களை உடனடியாக காப்பாற்றும் வகையில் ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட ஆய்வு மற்றும் பரிசோதனையில் எதிர்பார்த்த வெற்றி கிட்டி உள்ளது.தேவைக்கேற்ப இதில் மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## மூன்று நாட்கள் மட்டுமே பூக்கும் விநோத பூ



பூக்களைப் பிடிக்காதவர்கள் இந்த உலகத்தில் அரிது. எல்லோருக்குமே பூக்களை பிடிக்கும். அதன் நறுமணத்தால் தான் பூக்களை பெரும்பாலானவர்களுக்குப் பிடிக்கின்றது.

ஆனால் நீங்கள் இப்போது பார்க்கும் பூவை நேரில் போய் நீங்கள் பார்த்தால் நிச்சயம் உங்களுக்கு பிடிக்காமல் போகலாம்.

ஆம். நீங்கள் இங்கே பார்க்கும் பூவின் மணமானது இறந்து போன விலங்கு ஒன்றின் உடல் அழுகும் போது வரும் மணத்துக்கு ஒப்பாக இருக்குமாம். பூ இனங்களில் உள்ள பெரிய இன பூக்களில் இதுவும் ஒன்று. Corpse Flower, Amorpho phallus titanum என்ற பெயர்களில் அழைக்கப்படும் இந்தப் பூ வருடத்திற்கு மூன்று முறை மட்டுமே பூக்கின்றது என்பது இதன் விசேட அம்சமாகும்.

ஜேர்மனியில் Kile என்ற இடத்தில் உள்ள தாவரவியல் பூங்கா ஒன்றில் தான் மேற்படி பூவானது தற்போது மலர்ந்துள்ளது. ஆனால் இந்தப் பூவைப் பார்க்கப் போகும் பார்வையாளர்கள்தான் பெரும் சவாலை எதிர்நோக்கப் போகின்றார்கள் .

மூன்று நாட்கள் மட்டுமே பூக்கும் விநோத பூ என்பதால் இதனைப் பார்க்க பார்வையாளர்கள் குறித்த பூங்காவில் பெருமளவில் கூடி வருகின்றார்கள்.

## சக்கர நாற்காலிக்கு ஈடான புதிய சாதனம்

சக்கரநற்காலிகளைப்பயன் படுத்தும் அளவிற்கு உடல் ஊனமுற்றவர்களுக் கென்று டெக் ரொபாட்டிக் மொபலைசேஷன்டிவைஸ் என்ற புதிய வகை சாதனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சக்கர நாற்காலி களில் உட்கார்ந்த நிலையில் தான் பயணம் செய்ய முடியும்.

ஆனால் இந்த அரிய வகை சாதனத்தில் சக்கர நாற்காலியைப் போன்று அமர்ந்த நிலையில் இல்லாமல் நின்று பயணிக்கக் கூடிய வசதியைத் தருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த சிறப்பு சாதனம் ஊனமுற்றவர்களுக்கு உடல் அளவில் வசதியாக இருப்



பது போன்று மனதளவில் மகிழ்ச்சியையும் அளிக்குமாம்.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 1: நீரிழிவு நோயாளிகளுக்கு வேறு என்னென்ன வியாதிகள் வரக் கூடும்?**

**பதில் :** ஏனைய நோயாளிகளுடன் ஒப்பிடும் போது நீரிழிவு நோயாளிகளுக்கு பின்வரும் வியாதிகள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்.

1. மாரடைப்பு
2. பக்கவாதம் Stroke
3. முடக்குவாதம்
4. தொற்று
5. கண்களில் புரை மற்றும் பார்வைக் கோளாறு
6. சிறுநீரகங்கள் செயல் இழப்பதன் காரணமாக டயாலிஸிஸ் செய்தல் அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தல்
7. பாலியல் பிரச்சினைகள்
8. நரம்புக்கோளாறு

**கேள்வி 2: தங்களுக்கு இதயநோய் இருக்கிறதா என்று நீரிழிவு நோயாளிகள் தங்களைப் பரிசோதித்துக் கொள்வது அவசியமா?**

**பதில் :** நீரிழிவு நோயாளிகள் தங்களுக்கு இதயநோய் இருக்கிறதா என்று பரிசோதித்து கொள்வது மிகமிக அவசியமாகும். காரணம் மற்றவர்களைவிட அவர்களுக்கு இதயத்திற்குச் செல்லும் இரத்த நாளங்களில் அடைப்பு அல்லது மாரடைப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நான்கு மடங்கு அதிகமாகும். இதில் கொடுமை என்னவென்றால் 30-40 வயதுக்காரர்களுக்குக் கூட மாரடைப்பு வந்துவிடும். அதில் பெரும்பாலோருக்கு கடுமையான நெஞ்சுவலி கூட வருவதில்லை.(ஓசையின்றி வரும் மாரடைப்பு).

பல சமயங்களில் நீரிழிவு நோயாளிகள் வேறு ஏதேனும் காரணங்களுக்காக தங்களைப் பரிசோதித்துக் கொள்ளும் போது தங்கள் ஈ.சி.ஜி.இயல்பு நிலையில் இல்லை என்பது தெரியவரும்.ஆனால், அதுவரை அவர்கள் அதை அறிந்திருக்கக்கூட மாட்டார்கள்.

இதனை தடுப்பதற்கு அதிக உடல் எடையுள்ள ஒவ்வொருவரும் உயர் இரத்த அழுத்தமுள்ள ஒவ்வொருவரும் பரம்பரையாக இதய நோய் உள்ளவர்களின் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரும் 35 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் ஈ.சி.ஜி. பரிசோதனை கட்டாயம் செய்துகொள்ள வேண்டும். உங்கள் மருத்துவர் உங்களை டி.எம்.டி. TMT பரிசோதனை செய்து கொள்ளச் சொன்னார் என்றால் உடனே செய்து கொள்ளுங்கள். இப்பரிசோதனையின் மூலமும் உங்கள் இதயத்தின் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள முடியும். உரிய நேரத்தில் செய்யப்படும் சரியான சிகிச்சையினால் இதய நோய்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

**கேள்வி 3: நீரிழிவு நோயாளிகளுக்கு சரும நோய்கள் உண்டாகும் வாய்ப்பு எப்பொழுது வரும்?**

**பதில் :** நீரிழிவுநோயாளிகளுக்கு சரும நோய்கள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். காரணம் அவர்களின் இரத்தத்தில் சீனியின் அளவும் அஸிட்டோன் Acetone அளவும் மிக அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக அவர்களின் வியர்வையில் குளுக்கோஸ் மற்றும் அஸிட்டொன் நாற்றம் அடிக்கிறது. இது நோய்க் கிருமிகளை விரைவாக கவர்ந்து சரும நோய்களை உண்டாக்குகிறது. இதன் காரணமாகவே அவர்களுக்கு தொற்று நோய்கள் அதிகம் வருகின்றன.

நீரிழிவு நோயாளிகள் நமைச்சல் மற்றும் அரிப்பினாலும் பாதிக்கப்படுகின்றனர். காரணம் நீரிழிவு கலந்த சிறுநீர்துளிகள் ஆண்/பெண் பிறப்புறுப்பு பகுதியில் விரைந்து பற்றிக் கொள்கின்றன என்பது தான். இதன் காரணமாகவே அவர்கள் அப்பகுதியில் நமைச்சல் மற்றும் அரிப்பு உண்டாவதாக கூறுகின்றனர்.

நீரிழிவு நோயின் காரணமாக அவர்கள் உடலில் நெகிழ்வுத் தன்மை குறைந்து விடுகிறது. கை, கால் மற்றும் வாய்ப் பகுதிகளிலுள்ள இழைமங்களில் கரோட்டின் படியத் தொடங்குகிறது. அதனால் சருமம் வெளிர்கிறது. பளபளப்பு குறைகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு சருமத்தில் பூஞ்சைக் காளான் தொற்று வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

**கேள்வி 4 : நீரிழிவு நோயாளிகளுக்கு கண்கள் ஏன் மோசமாக பாதிக்கப்படுகின்றன?**

**பதில் :** க்ண்களில் உண்டாகும் பாதிப்பு ஒரு மோசமான வியாதியாகும். இது விழி யின் பின்புறத் திரையை (retina) மோசமாக பாதிக்கிறது. உலகில் பார்வை குறைவினால் அதிகமானவர்கள் பாதிக்கப்படுவதற்கு நீரிழிவு நோயும் ஒரு முக்கிய காரணமாகும். நீரிழிவு நோயின் காரணமாக விழிகளிலு ள்ள இரத்த நாளங்களில் வீக்கம் உண்டா கிறது. இது விழியின் பின்புறத் திரையில் பல்வேறு பாதிப்புகளை உண்டாக்குகிறது.

சில சமயம் கண்களில் குருதிசேர்க்கையும் உண்டாகும். கண்களில் புதிய இரத்த நாளங்கள் உருவாவதினால் கிட்டப்பார்வை உண்டாகிறது. அல்லது கண் தெரியாமல் போகிறது. இதுதவிர நீரிழிவு நோயினால் உண்டாகும் பார்வைக் கோளாறுகளுக்கு ஆற்றல் மிகு மருத்துவ சிகிச்சை இல்லை என்பதும் மறக்க முடியாத உண்மையாகும். எனினும் அவை வராமல் தடுப்பதற்கு சில சாத்தியக் கூறுகள் உள்ளன. அதாவது நீரிழிவு நோயாளிக்ள் அவ்வப் போது தங்கள் இரத்தத்தை பரிசோதித்து சீனீயின் அளவு உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் கண்பாதிப்புகள் வராமல் தடுக்கலாம்.

01

**கேள்வி 5: நீரிழிவு நோய்க்கும் பல் வியாதிகளுக்கும் சம்பந்தமுண்டா?**

**பதில்:** சாதாரண மனிதர்களுடன் ஒப்பிடுகையில் நீரிழிவு நோயாளிகளுக்கு பல் மற்றும் ஈறுகளில் அதிக பிரச்சினைகள் உண்டாகும். சிலர் தங்களுக்கு சுவை தெரியவில்லை என்பர். சிலர் தங்கள் வாயில் துர்நாற்றம் வீசுகிறது என்பர். இது தவிர ஈறுகளில் வீக்கம், வலி உண்டாகும். பற்களில் இருந்து இரத்தம் வழியும். பற்கள் விரைவில் விழுந்து விடவும் கூடும். இவைகளே அவர்கள் சந்திக்கும் முக்கிய பல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாகும்.

டாக்டர்.A.K.ஜிங்கான்

நீரிழிவு நோயாளிகள் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

1. உணவு உண்ட பின் மென்மையான பற்தூரிகை கொண்டு உங்கள் பற்களை துலக்குங்கள்.

2. இனிப்புகள் மற்றும் குளிர்பானங்களை தவிர்த்து விடுங்கள்.

3. விரல்களினால் ஈறுகளை அழுத்திக் கொடுங்கள். மெல்லிய நூல் கொண்டு பற்களின் இடைவெளிகளை சுத்தம் செய்யவும்.

4. உங்கள் பல் மருத்துவரிடம் அவ்வப் போது ஆலோசனை பெறுங்கள் .

5. புகைபிடிக்கும், மது அருந்தும் நீரிழிவு நோயாளிகளுக்கு பல் பிரச்சினைகள் அதிகம் உண்டாகும். புகையிலை மற்றும் மதுவை தவிர்த்து விடுங்கள்.

6. செயற்கை பல் பயன்படுத்துபவர்கள் அவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதில் ஏதேனும் பாதிப்புக்கள் இருக்கின்றனவா என்று அவ்வப்போது பார்த்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)




# நோயின்றி வாழ

**ஆயிரத்து 200 ஆண்டுகள் இனி மனி தன் உயிர் வாழலாம் என்கிறார்களே ஜீன் புரட்சியாளர்கள்.அதைப் பற்றி உங்கள் கருத்து ?**

நானும் ஜீன்களைப்பற்றி வந்து எல்லா விடயங்களையும் பத்திரிகைகளில் படித்தேன். ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது.

ஜீன்கள் நமது உடம்புக்குள் பலவிதமான மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பது உண்மை தான். இப்போது புதிதாக கண்டுபிடித்து சொல்லியிருக்கும் தகவல்கள் அத்தனையுமே இன்னமும் நிரூபிக்கப் படாத கருத்துக்கள் ஆகும். அதாவது நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு மாதிரி. வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது தீர்ப்பு இப்படி இருக்கும் அப்படி இருக்கும் என்று சொல்வது ஓர் அனுமானமாகத் தான் இருக்க முடியும். அது எப்படி தீர்ப்பாகும். எனவே, ஜீன்களைப் பற்றிய முழுமையான கண்டு பிடிப்பு விஞ்ஞான ரீதியாக மக்களிடத்தே நிரூபிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டியதுதான்.

**அதிநவீன விஞ்ஞான உயர் தொழில்நுட்ப வளர்ச்சி உலக உருண்டையையே ஒரு சின்னக் கிராமமாக்கி விட்டது. மொத்தத் தில் உலகம் சுருங்கி விட்டது. இத்தகைய சூழலில் விஞ்ஞான வளர்ச்சி வளர்ந்திருக் கும் அதே விகிதத்தில் மனிதர்களுக்கு வரக் கூடிய நோய்களின் எண்ணிக்கையும் பன் மடங்கு உயர்ந்திருப்பதற்கு என்ன காரணம்?**

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி உலகத்தை சுருக்கி விட்டது. தேடிக் கண்டுபிடித்து கண்ணயர்ந்து சோர்ந்து சுற்றித் திருந்து ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது மாறி நமது உள்ளங்கையிலேயே வந்து உலகம் உட்காரும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. இந்தி விஞ்ஞான யுகத்தில் நாமும் வாழ்கிறோமே என்ற மகிழ்வும் பெருமையும் நம் நெஞ்சத்தில் உள்ளது.இத்தைகய விஞ்ஞான வளர்ச்சி விகிதம் உயர்ந்திருக்கும் நேரத்தில் நோய்களின் எண்ணிக்கை , நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடைய எதிர்பார்ப்பும்.

ஆனால் , மாறாக நோய்களின் எண்ணிக்கை , நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கு மிக முக்கிய காரணம் விஞ்ஞானம் ஏராளமான வசதிகளை நமக்கு செய்து தந்து வாழ்க்கையை எழுமைப்படுத்தி விட்டது. இத்தகைய சூழலில் வசதியையும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு இனிமையாக வாழ வேண்டிய மனிதன் அதற்கு மாறாக எப்போதும் மன உளைச்சலுடனும் ஒருவித பரபரப்புடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

நம்முடைய முன்னோர்கள் எந்த விஞ்ஞான வசதிகளையும் அனுபவிக்கவில்லை. ஆனால், அவர்கள் சுகாதாரமான காற்றை சுவாசித்தார்கள். சுத்தமான தண்ணீரை குடித்தார்கள். சத்தான உணவுகளை உண்டார்கள். அதன் காரணமாக விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

இன்று அசுத்தமான காற்றை சுவாசித்து சுத்தமில்லாத தண்ணீரைக் குடித்து சத்தற்ற உணவுகளை உண்டு ஏராளமான விஞ்ஞான வளர்ச்சியுடன் ஆரோக்கியமற்று வாழ்கி றோம். இது மட்டுமல்ல வாழ்வியல் ரீதியான நடைமுறைகளும் வெகு வேகமாக மாறிக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

மேல் நாட்டு கலாசார பாதிப்பென்பது உடுத்துகின்ற உடையையும் வசிக்கின்ற வீட்டையும் பழங்கவழங்களையும் மட்டும் பாதிக்கவில்லை. சாப்பிடுகின்ற உணவுப் பொருட்களையும் பாதித்து விட்டது. சாப்பிடும் முறையையும் பாதித்து விட்டது.

நின்று நிதானித்து ஆறஅமர உணவருந்திய காலமெல்லாம் போய்விட்டது. பல விடயங்களை பல பழக்கவழங்களை நாம் தொலைத்து விட்டோம். அவ்வாறு தொலைந்து போன விடயங்களோடு , பழக்க வழங்கங்களோடு ஆரோக்கியமும் சேர்ந்து தொலைந்து விட்டது.

**நோயாளிகளின் எண்ணிக்கையும் நோய்களின் எண்ணிக்கையும் பெருகியதற்கு காரணத்தை சொன்னீர்கள். இந் நிலைமாற அல்லது நோயின்றி வாழ உங்கள் ஆலோசனை என்ன?**

01



மனிதன் தன் னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்வது ஆரோக்கியத்துக்கான முதல் படியாகும். இந்த கட்டுப்பாட்டில் மனக் கட்டுப்பாடு , உணவுக் கட்டுப்பாடு, பழக்கவழக்க கட்டுப்பாடு என்பன அடங்கும். மதுப் பழக்கம்,புகையிலைப் பழக்கம் இல்லாதவர்கள் இப்பழக்கம் உள்ளவர்களை விட ஒரு நாளாவது கூடுதலாக வாழ முடியும் என்பதே மறுக்கமுடியாத உண்மை.

டாக்டர்.சி.நடேசன்,MD.,
சென்னை-17.

அடுத்து பசியோடு சாப்பிடச் செல்ல வேண்டும். கொஞ்சம் பசி இருக்கும் போதே எழுந்து விட வேண்டும். புரியும் படியாக சொல்ல வேண்டும் எனில் பசி வந்து சாப்பிட வேண்டும். இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் போதே சாப்பாட்டில் இருந்து எழுந்து விட வேண்டும். நீண்ட நாள் வாழ்ந்த முன்னோர்களின் உணவு தத்துவம் இதுதான்.

அடுத்து நொறுக்குத் தீனியை கட்டாயமாக தவிர்க்க வேண்டும். ஒபேசிற்றி என்கின்ற உடல் பருமனானவர்களுக்கு இருக்கின்ற கெட்ட பழக்கங்களில் ஒன்று நொறுக்கித் தீனி சாப்பிடுவதாகும். நொறுக்குச் தீனிப் பழக்கம் உடல் பருமனை உண்டாக்கி அதன் வழியாக நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் போன்ற பாதிப்புக்களை ஏற்படுத்தும். எப்போதும் அதிக சாப்பாடு என்பதே ஆரோக்கியக் கேடுதான். உணவில் உப்பு, காரம், புளிப்பு மூன்றும் மிகக் குறைவாக இருப்பதே நல்லது.

(தொடரும்)

# யாழ் நகரில் சர்வதேச தரத்தில் நொதேர்ண் சென்றல் மருத்துவமனை

## NORTHERN CENTRAL HOSPITAL

இம்மருத்துவமனையானது, மார்ச் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை, 342, பலாலிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. வட பகுதிக் கலாசாரச் சூழலில் நவீன மய மருத்துவ சேவைகளை மக்கள் பெறக்கூடிய வாய்ப்பு முதன் முதலாக இம்மருத்துவமனை மூலமாக உருவாகியுள்ளது. இம் மருத்துவமனை கீழ்வரும் பின்னணியில் உருவாக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் முதலாவதாக அமைக்கப்பட்ட தனியார் வைத்திய சாலையான சென்றல் நேர்சிங் ஹோம் வட பிராந்திய மக்களுக்கு சுகாதார நலத்தீர்வுகளை வழங்கியது. எனினும் யுத்தகாலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக இந்த நேர்சிங் ஹோமினைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை நிலவியதால் 1996 ஆம் ஆண்டுடன் மூடப்பட்டது.

பின்னர் இந்த நேர்சிங் ஹோமானது, 2000 ஆம் ஆண்டு மீளத்திறக்கப்பட்டது. இதன் விஸ்தரிப்பின் ஒரு கட்டமாக கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நவீன சர்வதேச ரீதியிலான Northern Central Hospital நிர்மாணிப்புதற்கான ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.


இம் மருத்துவமனையின் ஸ்தாபகராக எஸ்.பி.சாமியும் பணிப்பாளராக பி.கேசவராஜாவும் திகழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நவீன மருத்துவ சிகிச்சை வசதிகள் கொண்ட மருத்துவமனை ஒன்று இல்லாத காரணத்தால் மக்கள் தமது நேரத்தையும் பணத்தையும் செலவழித்து கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள உயர்தர மருத்துவ மனைகளை நாடவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால், தற்போது மருத்துவமனையின் உருவாக்கம் யாழ் மக்களுக்கான சிறந்த வரப்பிரசாதம் ஆகும்.

இம் மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் உள்ளன. அத்துடன் அதி தீவிர சிகிச்சை பிரிவுடன் (I.C.U) நேர்சிங் ஹோமில் ஒன்றுமாக இரு சத்திர சிகிச்சை கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து அடிப்படை சத்திர சிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. கதிரியக்கப் பிரிவு (X-Ray) அல்ட்ரா சவுண்ட் (Ultra Sound) சிடி ஸ்கான் மற்றும் MRI வசதிகள் உட்பட 13 சனலிங் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் போதிய சாதன வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

60 தாதிமார் பயிற்சி பெற்றுள்ளனர். ஏற்கனவே நேர்சிங் ஹோமில் 40 தாதிமார்பணி புரிந்துவருகின்றனர். அத்துடன் பிஸியோ தெரப்பிஸ்டுகள் மருந்தாளர்கள் ஆகியோர் மிகவும் தேர்ச்சியுடன் கூடிய பயிற்சியை பெற்று தமது சேவையை வழங்க காத்திருக்கின்றனர்.




எந்த சாதனையைப் புரிவதாக இருந்தாலும் சவால்களைச் சமாளித்தே நாம் அதனை அடைய வேண்டும். இதற்கிணங்க நிர்வாக குழுவினர், பல தடைகளைத் தாண்டியே மக்களுக்கான தம் அரிய சேவையின் மைல் கல்லை அடைந்துள்ளனர்.

31வருடங்களுக்கும் மேலாக நேர்சிங் ஹோம் ஒன்றினை நடத்திய அனுபவம் அதன் மூலம் பெற்ற வெற்றி என்பன தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வைத்தியசாலை மூலம் யாழ் மக்களுக்கு நவீனமயமான மருத்துவ சேவைகளை சிறப்பாக வழங்க வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே எல்லாவித நோய்களுக்குமான மருத்துவ சிகிச்சை நிபுணர்களை எவ்வித சிரமமுமின்றி இவ் வைத்திய சாலையில் அணுகமுடியும். எதிர்கால விஸ்தரிப்புத்திட்டங் களுக்கிணங்க கிளிநொச்சி வவுனியா மன்னார் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் பிராந்திய நிலையங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிரதேசங்களைச்சேர்ந்த மக்கள் நொதேர்ண் சென்றல் ஹொஸ் பிற்றலின் சேவையை நேரடியாகப் பெற முடியும். அத்துடன் நடமாடும் சேவைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டது. மேலும் அம்பியூலன்ஸ் சேவைகளும் வழங்கப்படவுள்ளன.

எனவே, வடமாகாண மக்கள் மிகவும் பழகிய கலாசாரம் நிறைந்த சூழலில் நம்பிக்கையுடன் கூடிய மருத்துவ சேவைகளை அனுபவிக்கக் கூடிய மிகச்சிறந்த வாய்ப்பினை நொதேர்ண் சென்றல் வைத்திய சாலை நேற்று முன்தினம் முதல் வழங்கத் தொடங்கியுள்ளது, வட பகுதி மக்களுக்கு இச்சேவை ஒரு வரப்பிரசாதமாகும்.

# முள்ளி வாய்க்கால் நினைவிடத்தை முடக்கும் முயற்சியா ?




நடராஜன்மீது வழக்குப் போடுவதற்குக் காரணம் பழிவாங்கும் நடவடிக்கையா அல்லது தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை முடக்கும் முயற்சியா? என்று பொங்குகிறார்கள் தமிழ் இன உணர்வாளர்கள். காரணம், முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை மையமாகக் கொண்டு அடுத்தடுத்து நடராஜன்மீது வழக்குகள் தொடரப்படுவதுதான்.

தஞ்சாவூர் விளார்சாலையில் பழ நெடுமாறன் தலைமையில் உலகத் தமிழர் பேரமைப்பு அறக்கட்டளையினர், முள்ளிவாய்க்கால் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்காகவும் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்த முத்துக்குமார் உள்ளிட்ட 19 தாய்த் தமிழர்களுக்காகவும் நினைவகம் கட்டிவருகின்றனர். முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்த மே 18 ஆம் திகதி நினைவகத்தைத் திறப்பதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன.

இந்த நிலையில் நடராஜன்மீது திட்டமிட்டு வழக்குகள் பாய்ச்சப்படுவதாக குற்றம் சாட்டுகிறார் தஞ்சாவூரைச் சேர்ந்த தமிழ் உணர்வாளரும் வழக்கறிஞருமான நல்லதுரை.

அறக்கட்டளையின் சார்பாக உலகத் தமிழர்களின் நன்கொடைகளால் நினைவகம் அமைக்கப்படுகிறது. விளார் பஞ்சாயத்திலும் நெடுஞ்சாலைத் துறையிடமும் முறையாக அனுமதி வாங்கியுள்ளோம். நடராஜர் உள்ளிட்டோர்மீது நினைவகத்தின் அருகே கட்டுமானப் பொருட்களைச் சேகரித்து வைக்கப்



பட்டிருந்த இடத்தை அபகரித்ததாக முதல் வழக்கு போடப்பட்டது. ஆனால், அந்த இடம் முறையாக குத்தகை ஒப்பந்தம் போட்டுத்தான் பயன்படுத்தப்பட்டது. பல கட்ட முயற்சிகளுக்குப்பிறகு இந்த வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நீர்த்துப்போகச் செய்யப்பட்டது. அடுத்த நான்குமணி நேரத்துக்குள் நடராஜன்மீது நினைவகத்தின் மறுபக்கமுள்ள இடத்தை அபகரித்ததாக வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

வின்சன்ற் ஆல்பர்ட் என்பவரின் மனைவி லில்லியன் ஏஞ்சலுக்குச் சொந்தமான 3 ஆயிரத்து 315 சதுர அடி இடத்தை முறையான பத்திரப்பதிவுடன் அதிகபட்சத் தொகை கொடுத்து அறக்கட்டளை வாங்கியது. அந்த இடத்துக்கு பக்கத்து கடைகளை இடித்து விட்டதாக வழக்குத் தொடர்ந்தார்கள். உண்மையில் மேம்பாலம் கட்டுவதற்காக தேசிய நெடுஞ்சாலைத்துறையினர்தான் பல வருடங்களுக்குமுன் அந்தக் கடைகளை இடித்தனர். அதுபோலவே நினைவகம் அமைக்



நடராஜன்

கும் இடத்தில் வாய்க்கால் இருந்தது என்றும் சொல்கிறார்கள். வாய்க்கால் போகும் பாதையில் அரசு அனுமதியோடு ஒரு கல்லூரி, பல வீட்டு மனைகள் உள்ளன. இதற்கு எப்படி அனுமதி கொடுக்கப்பட்டது? இப்படி நினை வகத்தின் கட்டுமானப்பணிகளைத் தடுத்துநிறுத்தும் வகையிலேயே அதிகாரிகள் திட்டமிட்டு செயற்படுகின்றனர். தமிழ் இன

ஜூனியர் விகடன்

எதிர்ப்பாளர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து நினைவகம் கட்ட முதலமைச்சர், ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஈழத் தமிழர்களுக்காக நினைவகம் அமைப்பதிலும் இத்தனை சோதனைகளா?

# பௌத்த குருமார் படுகொலைக்கு கத்தோலிக்க பேரவை கண்டனம்

(கொழும்பு)

கோட்டே ரஜ மஹா விகாரையின் விஹாராதிபதிகளான வண.பிட்டிகல ஜினசிறி தேரோ, வண.பொரலஸ்கமுவ குணரத்ன தேரோ ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தனது ஆழ்ந்த அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையின் ஆயர்கள், ரஜ மஹா விகாரையின் பிரதம விஹாராதிபதிக்கும் சாசன சேவக மண்டலத்திற்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

நாட்டில் வன்முறைகள் அதிகரித்துவரும் ஒரு சூழ்நிலையில் இப்பாதகச் செயலை இன்னுமொரு துயரம் தோய்ந்த சம்பவமாகவே நாம் பார்க்கின்றோம். இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை உடனடியாக வேரோடழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தையும் பாதுகாப்புப் படையினரையும் நாம் வலியுறுத்தி வேண்டுகின்றோம் என்றும் கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-7)

# பேருந்து-லொறி மோதி விபத்து ஒருவர் பலி; 17 பேர் காயம்

(கொழும்பு)

காவத்தை அம்பலாம் வத்தை பிரதேசத்தில் தனியார் பேருந்துடன் டிப்பர் லொறியொன்று மோதியதினால் ஒருவர் பலியாகியுள்ளார். 17 பேர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. எம்பிலிப்பிட்டியிலிருந்து இரத்தினபுரி நோக்கிச் சென்ற தனியார் பேருந்து காவத்தை பகுதியிலிருந்துவந்த லொறியுடன் மோதுண்டுள்ளது. இவ்விபத்தைத் தெடர்ந்து பஸ் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு லொறியுடன் மோதி சேதமுற்றுள்ளது.

டிப்பர் லொறி அம்பலாம் வத்தை நகரில் வீடொன்றில் மோதியுள்ளது. இதனால் வீடும் சேதமாகியுள்ளது. காவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-7)

# மக்களுக்கான அறிவுறுத்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்படாத பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தமது விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் சி. சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர்வு செய்ய அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக வதியும்குடும்பங்களையே பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

மூன்று போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 20 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த்தவறின் மூன்று மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

*************

29 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன் றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 5 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (அ-3)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ புகைப்படப் பிடிப்பாளரான சுதத் சில்வாவின் புகைப்பட கண்காட்சி கோட்டே ஆனந்த சாஸ்திராலயா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. குறித்த கண்காட்சியை ஜனாதிபதி பார்வையிட்டதைப் படத்தில் காணலாம்.

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(29.02.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. கபீப் பாங்க் லிமிடெட்
10. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
17. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
19. பப்ளிக் பாங்க் பேர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
6. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
7. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
8. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
10. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
11. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
12. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
13. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
14. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
15. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
17. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
22. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
27. திவச பினான்ஸ் லிமிடெட்
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் பிஎல்சி
31. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
33. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
34. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
35. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
36. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
37. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
38. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
39. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
40. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் கண்காணிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களும் மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.
- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வக்யில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(அ/577)

# அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை

## கனேடிய எம்.பி.க்கள் மனோவிடம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

போரினால் தமிழ்மக்கள் எதிர்கொண்ட பாரிய அழிவுகளுக்கு அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருடன் சர்வதேச சமூகமும் தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்ட விடயத்தை' வலியுறுத்தியுள்ளார்.

இச்சந்திப்புத் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு,

போரினால் தமிழ்மக்கள் எதிர்கொண்ட பாரிய அழிவுகளுக்கு அரசாங்கம், விடுதலைப்புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருடன் சர்வதேச சமூகமும் தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். இது தொடர்பில் ஏற்கனவே ஐ.நா. சபை மீது சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஐ.நா.செயலாளரின் அறிக்கையும்கூட குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்ச்சியாக தமிழ்மக்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் பாத்திரத்தை சர்வதேச சமூகம் வகிக்கவேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் தேசிய இனப்பிரச்சினைக்கான அதிகாரப்பரவலாக்கல் தீர்வு, மனித உரிமைகள் தொடர்பில் பொறுப்புக்கூறல் ஆகியவை சம்பந்தமாக இதுவரையிலும் வெறும் வாக்குறுதிகள் மாத்திரமே தமிழ்மக்களுக்குக் கிடைத்துள்ளன. தற்சமயம் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலமாக சர்வதேசமும் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த வாக்குறுதி ஒரு செய்தி மாத்திரமே. இந்தச் செய்தி துன்பப்படும் தமிழ்மக்களுக்கு எதிர்காலத்தில் நல்லவிளைவுகளைக் கொண்டு வரவேண்டும். அதுவரையில் அதை வெறும் செய்தியாக மாத்திரமே நாம் கருதுவோம். அதில் கனடா பாரிய பங்கை வகிக்க வேண்டும்.

அரசாங்கம் தேசிய் இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு தெரிவுக்குழு அமைத்து அதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைக் கலந்து கொள்ள அழைக்கின்றது. ஆனால் இதுவரையில் கூட்டமைப்பு இதில் கலந்துகொள்ளவில்லை.

கடந்தகால ஆவணங்களை அடிப்படையாகக்கொண்டு அடிப்படை விடயங்கள் தொடர்பில் ஒரு இணக்கப்பாடு ஏற்படவேண்டும். மீண்டும் பேச்சுவார்த்தை என்று முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது. இதுதான் இன்றைய கட்டம். இந்தக் கட்டத்தை தாண்டிய பிறகே அரசாங்கத்துடன் தமிழ்த் தலைமை பேசவேண்டும் என்பதே எமது கருத்தாகும். இதுவே தமிழ்மக்களின் கருத்து எனவும் நாம் நம்புகின்றோம்.

எமது கருத்துக்களுக்குப் பதில் வழங்கிய கனேடியப்பாராளுமன்ற உறுப்பினர்கள்,

போர்க்குற்றம் தொடர்பில் நாம் அரசு, புலிகள் ஆகிய இருசாராரையும் கவனத்தில் எடுத்துள்ளோம். குறிப்பாக வன்னிப்போரின் இறுதி நாட்களில் ஆயுதம் தாங்காத அப்பாவிமக்கள் கொல்லப்பட்டுள்ளது தொடர்பில் நாம் எந்தவித விட்டுக்கொடுப்பிற்கும் தயாரில்லை.

அதேபோல் ஆயுதம் இல்லாமல் சரணடைந்தவர்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம். இவை விசாரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் நாம் ஒரு ஜனநாயக நாடு. மனித உரிமை தொடர்பில் உயரிய அளவுகோல்கள் எம்மிடம் உள்ளன. எவரும் இதை மீறுவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இலங்கை தொடர்பில் நாம் தொடர்ந்து அவதானம் செலுத்துவோம் எனத் தெரிவித்தார்கள். (அ)

# சிறுமிகள் மூவர் மாயம்; ஹற்றனில் பதற்றம்

ஹற்றன் நகருக்கு அண்மையிலுள்ள தொப்பி தோட்டத்தை சேர்ந்த 3 சிறுமிக்ள் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து காணாமல் போயுள்ளதாக இச்சிறுமிகளின் பெற்றோர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 9, 12, 14 வயதுகளையுடைய சிறுமிகளே காணாமல் போயுள்ளதாகவும் பெற்றோர்களும் ஏனையோரும் இச்சிறுமிகளை பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக தேடிய போதிலும் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லையென இச்சிறுமிகளின் பெற்றோர் தெரிவித்தனர். இது தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-7)

# வடமாகாணத்தில் திராட்சை உற்பத்தி தரத்தை மேம்படுத்த வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் திராட்சை உற்பத்தியை மேம்படுத்தி அவ் உற்பத்தியை தரமானதாக மாற்றியமைக்க பாரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு அமைய சுவை கூடிய புதிய வ்கை நான்காயிரம் திராட்சை கன்றுகள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அவற்றில் சுமார் ஆயிரத்து 800 கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது வடபகுதியில் திராட்சை தோட்டங்கள் வைத்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கே இப்புதிய வகை திராட்சை கன்றுகள் விநியோகிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் திராட்சை பழ உற்பத்தியை மேம்படுத்தி தரமானதாக மாற்றியுமைக்கும் வகையில் அரச-தனியார் துறையினரின் பங்களிப்புக்களின் மூலம் இந்த பாரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் சில திராட்சை வகைகளில் புளிப்புத்தன்மை காணப்படுவதால் இனிப்பு சுவை கூடிய புதிய வகை திராட்சை கன்றுகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் அடுத்த ஆண்டு திராட்சை உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். (2-7)

# ஜெனீவா தீர்மானம் தமிழர்கள் அரசியல் தீர்வை வென்றெடுக்க ஆரம்பபடியாகும்

## அரியநேந்திரன் எம்.பி தெரிவிப்பு

**(கொழும்பு) சர்வதேசம் கவனிக்கும் ஒரு விடயமாக தமிழரின் பிரச்சினை சென்றிருக்கின்றது என்பது மாத்திரமே தற்போதைய நிலையில் முக்கிய விடயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜெனீவாவில் கடந்த 22 ஆம் திகதி தமிழர் பிரச்சினை அரங்கேறியிருக்கின்றது. 24 நாடுகள் எங்களது பிரச்சினைக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றது. இதில் இருந்து அரசாங்கம் எள்ளளவும் விலக முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனினும் இதில் பல சந்தேகங்கள் இருக்கின்றன. இந்த பிரேரணையின் போது இந்தியா இரட்டை தன்மையான இராஜதந்திரத்தை கடைப்பிடித்திருக்கின்றது என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.


இந்தியாவுக்கு ஒரு அழுத்தம் இருந்தது. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்க வேண்டிய கடமை இந்தியாவிற்கிருந்தது. இந்த இடத்தில் தான் இந்தியா தனது இராஜதந்திரத்தை கடைப்பிடித்துள்ளது.

எனினும் வழமையான இரண்டு பேரையும் திருப்திப்படுத்துகின்ற வேலையை இந்தியா செய்திருக்கின்றது. சர்வதேசத்தில் கவனிக்கும் ஒரு விடயமாக தமிழரின் பிரச்சினை சென்றிருக்கின்றது என்பது மாத்திரமே தற்போதைய நிலையில் முக்கிய விடயமாகும்.

ஜெனீவாவில் இலங்கைப் பிரச்சினை சென்றிருப்பதன் நோக்கம் எதிர்வரும் காலத்தில் அமெரிக்கா இதில் எதனை வகுத்து வைத்திருக்கிறது என்பதற்குப் பலரும் பல விளக்கங்களை கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்குத் தண்டனை வழங்குங்கள் என்றோ, முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட இரண்டரை இலட்சம் மக்கள் பற்றிக் கேட்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தான் அமெரிக்கா கேட்டிருக்கிறது. அதாவது உங்களது அரசாங்கத்தால் நீங்களே நியமித்த குழு வழங்கிய சிபார்சுகளை நடைமுறைப்படுத்துங்கள் என்று தான் கூறப்பட்டிருக்கிறது.


ஆகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களுக்கான உரிமையை, சுதந்திர



வாழ்வை பெற்றுக்கொடுப்பதற்காக அதன் பங்களிப்பை எந்தெந்த வழியில் முறையில் செய்ய வேண்டுமோ அந்த முறையில் செய்திருக்கின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு நிரந்த அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கு இந்த ஜெனீவா தீர்மரனம் ஒரு ஆரம்பப்படியாக அமைந்துள்ளதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2-7)

# போஸ்கோ நிறுவன திட்டத்தை நிறைவேற்றுவேன்; தென்கொரிய ஜனாதிபதிக்கு மன்மோகன் உறுதியளிப்பு



**(சியோல்)**

**இருதரப்பு அரசியல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தவும் வர்த்தகத்தை இரட்டிப்பாக்கவும் இந்தியாவும் தென்கொரியாவும் முடிவெடுத்துள்ளன.**

**அதேநேரம் ஒடிசா மாநிலத்தில் தற்போது கடும் எதிர்ப்புக்குள்ளாகியிருக்கும் போஸ்கோ நிறுவன திட்டத்தை நிறைவேற்றுவதாகவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.**

தென்கொரியத் தலைவர் சியோலில் இரு நாட்கள் நடைபெற்ற சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன் சிங் சியோல் சென்றார். அங்கு தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பாக்கை சந்தித்து பேசினார்.

அப்போது கடந்த இரு ஆண்டுகளில் இரு தரப்பு வர்த்தகம், 65 சதவீதம் அதிகரித்துள்ளதை சுட்டிக் காட்டினார்.

இதையடுத்து 2015 க்குள் 40 பில்லியன் டொலர் அளவிற்கு வர்த்தகத்தை அதிகரிக்க இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். மேலும் இரு தரப்பிலான அரசியல் பாதுகாப்பு ஒத்துழைப்பையும் விரிவுபடுத்த வேண்டும் என முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து பின்னர் பேசிய பிரதமர் கூறியதாவது,

இந்தியாவில் எல்.ஜி. ஹுண்டாய், சாம்சங் போன்ற நிறுவனங்கள் ஏற்கனவே புகழ்பெற்றுள்ளன. இன்னும் சிறு மற்றும் நடுத்தர கொரிய நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை இந்தியாவில் ஆரம்பிக்க வேண்டும். அணுசக்தி உற்பத்திக்கான பொருட்களை வழங்குவோர் குழு ஏவுகணைத் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு நிர்வாகம், அவுஸ்திரேலியா குழுமம், வாசெனார் ஒப்பந்தம் ஆகிய சர்வதேச அமைப்புக்களில் இந்தியா சேர்க்கப்பட வேண்டும் என்ற எங்களின் கோரிக்கைக்கு தென்கொரியா ஆதரவளிக்க வேண்டும் என பிரதமர் தெரிவித்தார்.

இரு தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில், ஒடிசா மாநிலத்தில் பொஸ்கொ நிறுவனத்திட்டத்தை செயற்படுத்துவோரின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நேட்டோ வாகனங்களை அனுமதித்தால் பாக்.எம்.பி.க்களை கொலை செய்வோம்

## தலிபான்கள் மிரட்டல்

நேட்டோ வாகனங்களை அனுமதித்தால் பாகிஸ்தான் எம்.பிக்களை கொலை செய்வோம் என தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். அமெரிக்க உளவுத்துறை ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்திய ஏவுகணை தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகளுக்கு தேவையான எரிபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் பாகிஸ்தான் வழியாக வாகனங்கள் மூலம் எடுத்து செல்லப்படுகின்றன.

தற்போது அந்த வழியாக அவற்றைக்கொண்டு செல்ல பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. இந்த நிலையில் தற்போது அமெரிக்காவுடனான உறவை பாகிஸ்தான் மீண்டும் புதுப்பித்துள்ளது.

நேட்டோ படைகளுக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு மீண்டும் வழிவிட்டால் அரசு கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். மேலும் அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்படும் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த தகவலை தெக்ரிக் இ தலிபான் அமைப்பின் செய்தி தொடர்பாளர் இஷானுல்லா இஷான் தெரிவித்துள்ளார். (அ-2)

# மிரட்டல்களால் எதையும் சாதிக்கமுடியாது; வடகொரியாவுக்கு பராக் ஒபாமா எச்சரிக்கை



சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டிற்காக தென்கொரியாவிற்கு சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, மிரட்டல்களால் எதையும் சாதிக்க முடியாது என வடகொரியாவை எச்சரித்துள்ளார்.

தென்கொரியத் தலைநகர் சியோலில் இருநாட்கள் நடைபெற்ற சர்வதேச அணு சக்தி பாதுகாப்பு நடைபெற்றது. இதில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன ஜனாதிபதி ஹு ஜிண்டாவோ, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட 53 நாடுகளின் தலைவர்கள் சியோலுக்கு சென்றுள்ளனர்.

சியோல் சென்ற ஒபாமா முன்னதாக தென்கொரியா, வடகொரியா, இடையிலான இராணுவம் புகக்கூடாத பகுதிக்கு சென்றார். அங்கு அமெரிக்காவின் படைமுகாமில் உள்ள வீரர்களை சந்தித்துப் பேசினார். தொடர்ந்து சியோலில் தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பாக்கை சந்தித்துப் பேசவுள்ளார்.

அப்போது அளித்த பேட்டியில், வடகொரியாவிற்கு தனது கடமைகள் என்னவென்று தெரியும். அதை சரியான நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்ற வேண்டும். மாறாக மிரட்டல்கள் விடுப்பதன் மூலமோ, அயல் நாட்டைத் தூண்டி விடுவதன் மூலமோ எதையும் சாதிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஏப்ரல் மாதம் 12 முதல் 16 ஆம் திகதிக்குள் ஒரு நாள் வடக்கு பியான்கன் மாகாணத்தில் உள்ள டோங்சங்ரி என்ற இடத்தில் உள்ள ஏவுகணைத்தளத்தில் இருந்து செயற்கைக்கோளை ஏவுவதில் வடகொரியா தீர்மானமாக இருக்கின்றது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் செயற்கைக்கோள் ஏவுவதற்கான ரொக்கெட்டின் முக்கிய பாகம் ஒன்று டோங்சங்ரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக தென்கொரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதமர் மன்மோகன் சிங், தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங் பாக் இருவரும் சந்தித்து பேசிய பின் கூட்டறிக்கை வெளியிட்டனர். அதில் கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத குறைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் அமைதியை தொடர்ந்து நிலைநாட்ட வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு குழு தீர்மானங்களை மீறுவதன் மூலமோ இந்த மண்டலத்தில் பதற்றத்தை அதிகரிப்பதாலோ எதையும் செய்துவிட முடியாது எனத் தெரிவித்தனர். (அ-2)

## உலக தரிசனம்


# சிலியில் 7.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

மத்திய சிலியில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆக பதிவாகியுள்ளது. இதனால் அந்நாட்டின் கடலோர பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது மீண்டும் இதுபோன்றதொரு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பகவத்கீதையை போலிஷ் மொழியில் மொழிபெயர்க்கும் போலந்துப்பெண்

ரஷ்யாவில் சர்ச்சைக்கு உள்ளாகி வெற்றி பெற்ற பகவத்கீதையை போலந்து பெண் ஒருவர் போலிஷ் மொழியில் மொழி பெயர்கிறார். போலந்து நாட்டை சேர்ந்த அன்னாசிஸ்கா (வயது 60) என்பவரும் வாரணாசியில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்து சமஸ்கிருத மொழியில் முனைவர் பட்டம் பெற்றவர். அன்னாரஷின்ஸ்கா பகவத்கீதையை மொழியில் மொழி பெயர்க்கவுள்ளார். இது குறித்து இந்தியா, போலந்து கலாசாரத்துறை தலைவர் ஜனானுஸ்கிரிஸ் ஜோவ்ஸ்கி, அன்னாவின் சேவைகளை வெறும் வார்த்தைகளால் புகழ முடியாது என்று கூறியுள்ளார்.

இது குறித்து போலந்திற்கான இந்திய தூதர் மோனிகா கபிலா மோஹதா, சுயநலமில்லாத இவரது சேவையால் வளரும் தலைமுறைக்கு ஒரு சிறந்த புத்தகம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். வாழ்க்கை தத்துவங்களை உள்ளடக்கிய பகவத்கீதை 50 இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் அந்நாட்டு ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவை( இடது) ஐ.நா. முன்னாள் செயலர் மற்றும் அரபு நாட்டிற்கான தூதர் கோபி அனான் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# விண்ணிலிருந்து பூமியை நோக்கி விழுந்த மர்மப் பொருள்



சைபீரியாவில் விண்ணில் இருந்து 200 கிலோ எடை கொண்ட மர்ம பொருள் விழுந்ததால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

சைபீரியாவில் உள்ள ஓட்ராட்நெஸ்கி என்ற கிராமத்தின் அடர்ந்த காட்டுப் பகுதியில் விண்ணில் இருந்து திடீரென மர்ம பொருள் சமீபத்தில் விழுந்தது.

அதை பகுதியில் இருந்த கிராம வாசிகள்பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸ் அதிகாரிகள் யு வடிவத்தில் இருந்த அந்தப் பொருள் ஏதோ ஒரு சாதனத்தின் உடைந்த பொருள் என்பதை அறிந்தனர்.

வெள்ளியை போல் பளபளப்பாக உள்ள அந்த மர்ம பொருளை ஆய்வு செய்து வருகின்றனர். இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில்,

விண்ணில் இருந்து விழுந்த பொருள் 200 கிலோ எடை உள்ளது. உலோகத்தால் ஆனது. செயற்கைக்கோள், ஏவுகணை அல்லது விண்கல்லாக இருக்க வாய்ப்பில்லை என்பது முதல் கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

மர்ம பொருள் குறித்த தொடர் ஆய்வு நடைபெறு கின்றது என்றார். (அ-2)

## நிர்வாகத் தெரிவு

(ஓமந்தை)

வவுனியா பிரதேச செயலர் பிரிவு ஓய்வூதியருக்கும் முதியோருக்குமானநலனுபாய சங்கத்தின் 11 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இதில் தலைவராக ஜே.பி. கிருஸ்தோபர், உபதலைவராக க.வேலாயுதம், செயலாளராக செல்லையா துரைராசா, உப செயலாளராக ஐ. க. திருவலிங்கம், பொருளாதார சி.இராசநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி கோடிஸ்வரன், திருமதி இராசமணி, கனகநாயகம், ஜெயநாதன், பாரதி ஆனந்தன், ஆனந்தலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-3-256)

# வேலைவாய்ப்பை மட்டுமே காரணம்காட்டி பட்டதாரிகளை அரசியல்மயப்படுத்துகின்றனர்

## செல்வராசா எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்பு வழுங்கப்போவதாகக் கூறி மத்திய மற்றும் மாகாணத்தில் ஆட்சி அதிகாரங்களை கொண்ட அரசியல்வாதிகள் அவர்களை அரசியல் மயப்படுத்த முற்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா குற்றம் சாட்டியுள்ளார்.**

உலக தமிழர் பண்பாட்டுக் கழக உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஊக்குவிப்பு உதவித் தொகை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்தக் குற்றச் சாட்டை அவர் சுமத்தினார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு வேலையற்ற பட்டதாரிகள் தங்களுக்கு வேலை வழங்கக் கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டபோது விரைவில் வேலை வழங்கப்படுமென இம் மாவட்டத்திலுள்ள மத்திய மற்றும் மாகாணத்தில் அரசியல் அதிகாரங்களை கொண்டுள்ள அரசியல்வாதிகள் உறுதி மொழிகள் வழங்கினார்கள்.


இதுவரை அவ் உறுதிமொழி நிறைவேற்றப்படாத நிலையில் அவர்களை அரச ஆதரவு போராட்டங்களில் ஈடுபடுத்துவதற்காக வேலைவாய்ப்பு வழங்கப்போவதாக வாக்குறுதிகளை வழங்கி அவர்களது விருப்பத்திற்கு மாறாக அரசியல் மயப்படுத்த முற்படுகிறார்கள்.

அண்மையில் ஐ.நா வில் முன்வைக்கப்பட்ட இலங்கை விவகாரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்ட பட்டதாரிகள் தங்களை அடையாளம் காட்ட விரும்பாத நிலையில் கைகளில் ஏந்தவேண்டிய பதாகைகளினால் தங்கள் முகத்தை மறைத்துச் சென்றதை ஊடகங்களில் காணமுடிந்தது.

எமது கட்சியைப் பொறுத்தவரை இந்த நியமனத்தில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

தற்போது வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள வைப்பதற்காக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரசுக்கு ஆதரவான செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அரசியல் இலாபங்களுக்காக வேலையற்ற பட்டதாரிகளைப் பயன்படுத்த நினைப்பது எந்த வகையில் நியாயமாகும் என்றார். (2-7)

## ஓசோனில் விழுந்த ஓட்டையில் அந்தாட்டிக்க நீர் வற்றுகிறது



(வோஷிங்டன்)

அந்தாட்டிக்காவின் ஆழ்கடல் நீர் மர்மமான முறையில் வற்றி வருகிறது. உலகில் உள்ள ஆழ்கடல்களில் இருந்து வெப்பத்தின் மூலம் வெளியேறும் தண்ணீர் பூமியின் மேற்பரப்பை சென்றடைந்து மேகமாக மாறி மழையாக பொழிகிறது. இதன் மூலம் பூமியின் பருவநிலை மாற்றம் சமநிலை படுத்தப்படுகிறது.

ஆனால், பனிக்கட்டிகளால் ஆன அந்தாட்டிக்கா கடலின் தென்பகுதியில் உள்ள ஆழ்கடல் நீர் வற்றி வருகின்றது. கடந்த 50 ஆண்டுகளில் வினாடிக்கு 8 மில்லியன் மெட்ரிக் தொன் தண்ணீர் வற்றி மாயமானதாக கடல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது அமெரிக்காவின் மிசிசிப்பி ஆற்றின் தண்ணீரை விட 50 மடங்குகளாகும். இந்த கடல் நீர் வற்றுவதற்கான காரணம் மர்மமாக் உள்ளது. இது குறித்து ஆய்வாளர்கள் தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

உலகிலேயே மிகவும் குளிர்ந்த நீரைக் கொண்டுள்ள கடல் அந்தாட்டிக்கா கடல் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கடலின் நீர் வற்றிப் போவதற்கு அதிகரிக்கும் புவி வெப்பமும் ஓசோனில் விழுந்த ஓட்டையும்தான் காரணம் என புவி ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

## மன்னாரில் மூவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடல் மார்க்கத்தினூடாக இலங்கைக்குள் பிரவேசித்த மூவர் பேசாலை மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்ணொருவரும் ஆணொருவரும் சிறுபிள்ளையொன்றும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-7)

## இரத்தினக்கல் படிமத்திற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

கலவான களுபாலத்தை அண்மித்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இரத்தினக்கல் படிமத்திற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

விரைவில் குறித்த படிமத்தினை ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்தார்.

கலவான களுபாலத்தின் புனரமைப்பு பணிகளின் போது இந்தப் படிமம் கிடைக்கப் பெற்றதாகவும் இரத்தினபுரி பிரதேச அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் மூலம் இரத்தினக்கல் படிமம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இந்த படிமத்தை விலைமனுக்கோரல் அல்லது பகிரங்க ஏலத்தில் விடுதல் என்பன குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். அத்துடன் இதற்கு முன்னர் கதிர்காமம்-தம்மன்னாவ மற்றும் இரத்தினபுரி-வெரலுப ஆகிய பகுதிகளில் இருந்து இவ்வாறான படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

## பேராசிரியர்களின் நடவடிக்கைகளின் தரத்தினை கண்டறிய குழு நியமிக்க முடிவு

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் நடவடிக்கைகளின் தரத்தினை கண்டறிவதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் பேராசிரியர் நிர்மால் ரஞ்ஜித் தேவசிறி குறிப்பிட்டார்.

இந்தக் குழுவின் ஊடாக பல்கலைக்கழக பேராசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் தொடர்பில் விசேட கவனம் கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விடயங்கள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் இந்தக் குழுவினர் ஆராயவுள்ளனர்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமது தரத்தினை அதிகரித்து கொள்வதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

இவை தொடர்பிலான விடயங்கள் அடங்கிய குறித்த குழுவினரின் அறிக்கையை விரைவில் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.(அ-2)

**Newzeland இல் உயர் கல்வியும் பட்டப்படிப்புக்குப்பின் நிரந்தர வதிவிட Visa ஒழுங்குகள்**

**எமது ஸ்தாபனத்தின் கல்விச்சேவையை யாழ்ப்பாணம் வரை விஸ்தரித்துள்ளோம். இதன்மூலம் Newzeland இல் உயர் கல்வி கற்றபின் அந்நாட்டில் தொழில்வாய்ப்புடன் நிரந்தர வதிவிட அனுமதியையும் பெற்றுக்கொடுக்கின்றோம்.**

**தகுதிகள், கல்வித்தகைமைகள்**



- G.C.E. O/L, A/L
- Diploma கற்கை நெறியை முடித்தவர்களுக்கான மேலதிக கற்கை நெறிகள்.
- Diploma Under Graduate கற்கை நெறியின் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருப்பவர்கள்.
- Diploma அல்லது பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று அதனை இறுதிவரை தொடர முடியாதவர்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள தகைமை உடையவர்களுக்கு இரண்டு மாத காலத்துக்குள் Newzeland இல் மேற்படிப்பை தொடர எமது நிறுவனம் சகல ஒழுங்குகளையும் செய்து கொடுக்கிறது.

எமது நிறுவனம் உங்களுக்குரிய Sponcer ஒழுங்கினையும் செய்து Visa வினை பெற்றுக் கொடுக்கின்றது.

**தொடர்புகளுக்கு:-**

Tel:-0778980652
Fax:-0112321074
Email:-sin21ne@gmail.com

RAINBOW TRAVELS
113,CHATHAM St
COLOMBO-01



(7798)

அடங்காப் பிடாரியான பெண்ணிருந்தால் பத்து வீடுகளுக்கு நாய்கள் தேவையில்லை.

– பங்களாதேஷ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கடிக்கும் நாயும் குரைக்கும் நாயும்

உலகிலேயே மிகவும் இழிந்த பிறப்பாக நாய் கருதப்படுகிறது. நன்றியும் மோப்ப சக்தியும் காவல் கடமையும் கொண்ட நாயை கடைப் பிறப்பென்று கூறப்படுவதற்கு ஏதேனும் காரண்ணம் உண்டா?

என்றால் ஆம்! இதற்கு மூன்று காரணம் உண்டென்று கூறலாம். ஒன்று நாயானது எலும்பைக் கடிக்கும்போது நாயின் ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும்.

தனது இரத்தத்தை எலும்பிலிருந்து வருகின்ற இரத்தம் எனக் கருதும் நாய் அந்த எலும்பை விடாமல் கடித்துக்கொண்டே இருக்கும். இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் நாயின் போகநிலை. உலகில் எந்த ஜீவராசிக்கும் இல்லாத துன்பத்தையும் வேதனையையும் போக சுகத்தின் பின் நாய்கள் அனுபவிக்கின்றன.

அடுத்தது, இன ஒற்றுமை இல்லாமை. இந்த மூன்று காரணங்களாலும் நாயினம் கடைப்பட்டதாயிற்று. இவை நாய்பற்றிய தகவலுக்கானவை. இங்கு நாயில் இருவகைமை உண்டு.

ஒன்று கடிநாய். மற்றையது குரைக்கும் நாய். குரைக்கும் நாய் கடிக்காது என்று தமிழ்ப் பழமொழி உண்டு.

எனவே குரைக்கும் நாய் கடிக்காதது போல கடிக்கும் நாய் குரைக்காது. அப்படியானால் குரைக்கின்ற நாய் கடிக்காததற்கும் கடிக்கின்ற நாய் குரைக்காததற்கும் காரணம் என்ன? இரண்டுக்கும் பயமும் பயமின்மையும்தான் காரணம்.

பயந்த நாய்களே அடித்துவைத்துக் குரைக்கும். அநேகமாக வீட்டைச் சுற்றி ஓடிக் குரைக்கின்ற நாய்கள் இந்த வகைக்குள் அடங்கும்.

கடிக்கின்ற நாய்கள் குரைப்பதில்லை. அவை சத்தம் சலனம் இல்லாமல் இருந்துவிட்டு அதிரடியாக தாக்கிவிடும். இதைத்தான் கடிநாய் என்று கூறுவார்கள்.

நாய்களுக்கு இருக்கின்ற இயல்பு மனிதர்களுக்கும் இருக்கவே செய்கிறது. அப்படியா? என்று என்னில் கோபம்கொண்டு விடாதீர்கள்.

நாற்பது கடந்தால் அந்தக் குணம் மனிதர்களுக்கும் வந்துவிடுமாம். மனிதர்களிலும் பயந்தவர்கள், வீரம்மிக்கவர்கள் என்று இருக்கிறார்கள் அல்லவா? அதுபோல நாடுகளிலும் இவ் இயல்பு உண்டு.

அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள் அமெரிக்கா ஒருபோதும் கத்திக் குளறுவது கிடையாது. மிகவும் நிதானமாக தகவல்கள் தரவுகளைத் திரட்டி அதற்கேற்றவாறு பதிலடி கொடுக்கும். ஒசாமா பின்லேடனை கொன்ற பின்புதான் பாகிஸ்தானுக்கே அந்தச் செய்தி தெரியுமாம்.

அமெரிக்காவை பகைத்துக்கொள்ளும் பயந்த நாடுகள் மேடைபோட்டு தங்கள் மக்கள் முன்னிலையில் வீறாப்பு பேசுவர்.

இப்படி வீறாப்பு பேசி அமெரிக்காவிடம் வேண்டிக் கட்டிய நாடுகள் பற்றிய வரலாற்றை அறியாதவர்கள் குரைக்கட்டும். அது பயம் போக்குதற்கான சுய ஆற்றுப்படுத்தலாகவும் இருக்கலாம் அல்லவா?

# சர்வதேச அழுத்தங்களைக் குறைக்க அரசு மியன்மாரை பின்பற்றவேண்டும்

ஜெனீவாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையால் பாத கமான விளைவுகள் ஏற்படக்கூடும் என பிரான்சுக்கான இலங்கைத்தூதுவர் கலாநிதி ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரேரணைக்கு எதிராக 15 நாடுகள் வாக்களித்துள்ளதன் மூலம் அது உறுதிப்படுத்தப்படுவதாகவும் இந்தப் பிரேரணையால் எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படாதெனவும் இலங்கைக்கு சார்பானது எனவும் பலரும் தெரிவிப்பதாக பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டார்.

அவ்வாறாயினும் இந்தோனேசியா பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், ஈக்குவடோர் போன்ற நாடுகள் இதற்கு எதிராக ஏன் வாக்களித்தன என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை போன்றதொரு நாட்டிற்கும் மனித உரிமைகள் பேரவைக்கும் சர்வதேசத்திற்கும் இதனால் பிரச்சினைகள் ஏற்படக்கூடாதென்ற காரணத்தினாலேயே குறித்த நாடுகள் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாக பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் மியன்மாரைப் பின்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் மியன்மார்மீது சர்வதேச நாடுகளால் பாரியளவிலான அழுத்தங்கள்பிரயோகிக்கப்பட்டபோதிலும் தற்போது அவ்வாறானதொருநிலை மைகாணப்படவில்லைஎனஅவர்தெரிவித்தார்.

உள்நாட்டு ரீதியில் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளே இதற்கு முக்கிய காரணமாக அமைந்ததாக பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்தார்.

இதனால் அழுத்தங்கள் பிரயோகித்த சர்வதேசம் மியன்மாருக்கு ஆதரவாக செயற்பட ஆரம்பித்ததாகவும் இதனையே இலங்கை பின்பற்றவேண்டும் எனவும் பிரான்சுக்கான இலங்கைத்தூதுவர் மேலும் குறிப்பிட்டார். (அ-7)

# குடும்பத் தகராறால் கிருமிநாசினி உட்கொண்ட தந்தையும் மகனும்

(ஒட்டுசுட்டான்)

கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக தந்தையும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் 2 ஆம் கண்டம், வலதுகரை, முத்தையன் கட்டில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இளம் குடும்பஸ்தர்களானகணவனுக்கும்அவரதுமனைவிக்கும் இடையே அவ்வப்போது சிறு சிறு சண்டைகள் ஏற்படுவது வழக்கம். இதே போலவே சம்பவதினத்தன்று இவர்கள் இருவருக்கிடையிலும்சண்டைஏற்பட்டுள்ளது.

இதனால் மனைவி நான்கு வயதேயான மகனைத் தன் கணவரிடம் விட்டு தன் தாய் வீடு சென்று விட்டார். இந் நிலையில் மகனுக்கு கிருமிநாசினியைப் பருக்கி விட்டு தானும் குடித்து தற்கொலை செய்ய எண்ணி கிருமி நாசினியைப் பருக்கியிருக்கிறார்.

இதனைக்கண்ட அயலவர்கள் இருவரையும் உடனடியாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தற்போது இருவரின் நிலையும் கவலைக்கிட மாக இருப்பதனால் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-7-258)

# தாலிக்கொடி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11.45 மணியளவில் கல்வியங்காடு சட்டநாதர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

தனது பிள்ளையை பாடசாலையில் இருந்து அழைத்துச் சென்ற பெண் ஒருவரின் 5 பவுண் பெறுமதியிலான தாலிக் கொடியேஅபகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (எ-11)

# விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வு தினத்தையொட்டி நடைபெறும் கண்காட்சி நிகழ்வு இம்முறை வவுனியா காமினி மகா வித்தியாலத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது என யாழ். பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு நிலைய பொறுப்பதிகாரி வ. முருகதாஸ் தெரி வித்துள்ளார். (அ-6)

# பஸ் மோதி குடும்பஸ்தர் காயம்

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்று இடித்துக் காயப்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையிலுள்ள பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையாரான சுந்தரம் அருமைராசா (வயது 40) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் மல்லாவியிலிருந்து மல்லாகத்திற்கு வந்து கொண்டிருக்கும் போதே குறித்தபகுதியில் இருதனியார்கொழும்பு சேவைபஸ்கள் விலகிச்செல்ல முற்படுகையிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது

எனினும் குறித்த குடும்பஸ்தரை இடித்துக் காயப்படுத்திய பேருந்து நிற்காமலே சென்றுள்ளது.

விபத்தில்காயமடைந்தவர்யாழ்போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)

# நித்திலம் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகத்தினால் காலாண்டுக்கான நித்திலம் இதழ் வெளியிடப்பட்டுள்ளதாக இதழாசிரியர் ப.இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-6)

# செயலமர்வு

(மல்லாவி)

உளவளத்துணையாளர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா முதல் நிலை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, மன்னார், துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களில் கடமையாற்றும் உளவள துணையாளர்களுக்கு இச்செயலமர்வு நடைபெறவுள்ளதாகவும் இச் செயலமர்விற்கு வருகைதரும் போது மாதாந்த முன்னேற்ற அறிக்கை படிவங்களுடன் கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செயலமர்வு வைத்தியர்கள் சிவதாஸ், சுதாகர் ஆகியோருடைய மேற்பார்வையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## விரலால் கூட தீண்டாதீர்கள்



ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடியிருக்கிறேன். காய்கறி உணவை மட்டுமே சாப்பிட்டு வருகிறேன் என்று நீ சொல்வதானால் ஆன்மீகவாதியாகிவிடமாட்டாய். இதெல்லாம் உன் பெருமையை பறைசாற்றவே உதவும்.


ஆயுள் முழுவதும் நல்ல நூல்களைப் படிப்பதாலும் பேரறிஞர் ஆவதாலும் ஒருவன் ஆன்மீக உணர்வைப் பெறமுடியாது. சொற்பொழிவு நிகழ்த்தி கூட்டம் சேர்ப்பதும் ஆன்மீகப்பேற்றை அடைய உதவாது. அன்பின் மூலமாகத்தான் ஆன்மீக உணர்வைப்பெறமுடியும். அன்பிற்கே அத்தகைய வலிமை இருக்கிறது.

மனதையும் உடலையும் பலவீனப்படுத்தும் எந்தப்பொருளையும் உன் விரலால்கூட தீண்டக்கூடாது. அதற்குரிய பக்குவத்தை நீ பெற்றால்தான் ஆன்மீகத்தின் நுனியிலாவது கால்வைக்கமுடியும்.

ஆன்மீக உணர்வைப் பெறாதவரை நம்நாடு நிச்சயமாக மறுமலர்ச்சி அடையாது. நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல ஆன்மீக வழிகளைப் பின்பற்றி நடக்க உறுதியெடுக்கவேண்டும்.

# தெற்கு சீனா கடற்பகுதியில் எண்ணெய்அகழ்கிறது இந்தியா

## எச்சரிக்கிறது சீனா



(பீஜிங்)

தெற்கு சீனா கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் இந்தியாவின் நடவடிக்கைக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அயல் நாடுகளில் ஒன்றான சீனா இந்தியாவுடைய வெளி விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டு வருகின்றது. அருணாசல பிரதேச மாநிலம் தங்களுக்கு உரியது என்று சீனா சொந்தம் கொண்டாடி வருகின்றது. அந்தப் பகுதியில் சீன இராணுவத்தினர் அத்துமீறி வருகின்றனர். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் சீன அரசு ஈடுபட்டு வருகின்றது.

### சீனா எச்சரிக்கை

இந்த நிலையில் சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி கடந்த ஒக்டோபர் மாதம் தெற்கு சீனக் கடலில் வியட்நாம் நாட்டிற்கு சொந்தமான பகுதியில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக இந்தியா–வியட்நாம் இடையே ஒப்பந்தம் கையெழுத்து ஆனது. தற்போது இந்தியா அந்தப் பகுதியில் எண்ணெய் அகழ்வு பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

### தலையிட வேண்டாம்.

இந்தப் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வு-நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டு வருவது மிகவும் சிக்கலான விடயம். இந்தப் பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சீனா ஈடுபட்டு வருகின்றது. எனவே, சர்ச்சைகள் நீங்கி தீர்வு ஏற்படும் வரை இந்தப் பகுதியில் எண்ணெய் அகழ்வு பணிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டாம்.

இந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளிடையேயும் பொதுவான வளர்ச்சியையே நாங்கள் விரும்புகிறோம். எனவே, இங்குள்ள சர்ச்சைகளில் இந்திய அரசு தலையிடாது என்றும் இந்த பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என சீன வெளியுறவுத்துறையின் ஆசிய துறைக்கான துணை இயக்குநர் சன் வெய்டாங் தெரிவித்தார்.


அதே நேரத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு, காஷ்மீர் பகுதியில் கட்டமைப்பு நடவடிக்கைகளில் சீன நிறுவனங்கள் ஈடுபட்டு வருவது குறித்து அவர் கூறுகையில்,

இந்த 2 விடயங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவை. காஷ்மீர் விவகாரத்தை பொறுத்தவரையில் சீனாவின் கொள்கைளில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. அதனை இந்தியா, பாகிஸ்தான் 2 நாடுகளும் மட்டுமே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு, காஷ்மீர் பகுதி பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டு மட்டுமே சீன நிறுவனங்கள் கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை எந்த நாட்டிற்கும் எதிரான கிடையாது. அதேசமயம் தெற்கு சீன கடற்பகுதியில் இந்தியாவின் நடவடிக்கையானது மிகவும் சிக்கலான ஒன்று. இதில் பல நாடுகள் சம்பந்தப்பட்டு உள்ளன என்று தெரிவித்தார்.

(அ–2)

# கட்டிக்கொண்டிருந்த பாலம் இடிந்ததில் ஆறு பேர் பலி; பதினெட்டுப்பேர் காயம்



(டேராடூன்)

உத்தரகண்ட் மாநிலத்தில் கட்டிக் கொண்டிருந்த பாலம் இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர். ஸ்ரீ நகர் பகுதியில்உள்ளஅலகநந்தாஆற்றினை கடக்க கட்டிக் கொண்டிருந்த பாலம் நேற்று முன்தினம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளா னது. பாலம் இடிந்து விழுகையில் சிலர் வேலை செய்து கொண்டிருந்தது தெரிய வந்துள்ளது.

பாலம் இடிந்து விழுந்ததற்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(அ–2)

# பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கான விசா நடைமுறையை எளிதாக்க வேண்டும்

## சமூக ஆர்வலர் கோரிக்கை

(லாகூர்)

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வருவதற்கான விசா நடைமுறைகளை எளிதாக்க வேண்டுமென பாகிஸ்தானில் உள்ள சமூக ஆர்வலர் அமைப்பு கோரிக்கை விடுத்துள் ளது.

இதை வலியுறுத்தும் வகையில் சுமார் ஒரு இலட்சம் பேரிடம் கையெழுத்து வாங்கப்பட்டு அதனை பாகிஸ்தான் பிரதமர் யூசப் ரசா கிலானியிடம் வழங்கப் போவதாக அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.லாகூரில் உள்ள அமைதி மற்றும் மதச்சார்பற்ற கல்வி நிறுவனத்தின் மூலம் விசா நடைமுறைகளை எளிதாக்கும் நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

இந்தியா பாகிஸ்தான் நாடுகளின் அமைதிக்காக போராடிய குல்திப் நாயர் மற்றும் முபாஷர் ஹசன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

இந்தியாவுக்கான விசா நடைமுறைகளை எளிதாக்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவை சேர்ந்த திரைப்பட இயக்குநர்கள் மகேஷ் பட், ஜதின் தேசாய் ஆகியோரும் பாகிஸ்தானை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஹுசைன் நகி, மதிஹா கெகார் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் இந்தியாவை சேர்ந்த சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், வணிகர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இரு நாட்டு மக்களிடையே கடைப்பிடிக்க வேண்டிய அமைதி குறித்தும் இந்நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நாயர் மற்றும் ஹுசைனுக்கு சிந்து அமென் விருது வழங்கப்பட்டது.

நாடுகளுக்கிடையே அமைதி வேண்டி போராடியவர்களுக்காக முதன்முறையாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

(அ–2)

# 'எங்களுக்கு எதிராக வாக்களித்துவிட்டு எங்கள் கடலுக்கு மீன்பிடிக்க வருகிறீர்கள்'

## தமிழக மீனவர்களை மிரட்டியது இலங்கை கடற்படை

(இராமேஸ்வரம்)

இலங்கை அரசுக்கு எதிராக வாக்களித்ததால் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய அரசு வாக்களித்ததைத் தொடர்ந்து மீன்பிடிக்க கடலுக்குச் செல்லும் மீனவர்கள்,தங்களுக்கு மீன்பிடித் தொழிலில் பிரச்சினை ஏற்படலாம் என்று கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து ஏராளமான படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.அன்று மாலை கச்சதீவு கடற்பகுதிக்குள் சென்ற படகுகளை வழிமறித்த இலங்கை கடற்படையினர் மீனவர்களிடம் எங்களுக்கு எதிராக வாக்களித்து விட்டு எங்கள் நாட்டிற்குள் ஏன் மீன்பி ிக்க வருகிறீர்கள்? இனிமேல் இலங்கை கடல் பகுதிக்குள் மீன்பிடிக்க வராதீர்கள்! என்று எச்சரித்து விரட்டியடித்ததாக கரைக்குத் திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ–2)

## பாரதச் செய்தி




டில்லியில் ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த சமூக சேவகர் அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக சென்னையிவ் நடைபெற்ற உண் ணாவிரத போராட்டத்தில் தேசிய கொடியுடனும் காந்தியை போல் வேடமிட்டும் ஊழல் எதிர்ப்பாளர்கள் பங்கேற்றதை படத்தில் காணலாம்.

# இந்தியாவிற்கான சுற்றுலாப் பயணிகள் வருகை 2021 இல் 175 கோடியாகும்

(மும்பை)

இந்திய சுற்றுலாத்துறை வளர்ச்சி தொடர்ந்து இரட்டை இலக்கத்தில் அதிகரித்து செல்வதால் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டில் இந்தியா வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை 175 கோடியாக உயரும் என ஆய்வு தெரிவிக்கிறது.

சர்வதேச ஆலோசனை மற்றும் சேவை அமைப்பான எச்விஎஸ் மற்றும் உலக சுற்றுலா பயண குழுவிலும்(டபிள்யூ.டி.டி.சி.) இந்தியாவின் சுற்றுலா குறித்து ஆய்வு நடத்தியது. அதன் விபரம்,

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவின் சுற்றுலா வளர்ச்சி வேகமாக அதிகரித்து வருகிறது.இந்தியாவில் எண்ணற்ற இயற்கை வளங்கள், புராதன நினைவுச் சின்னங்கள், கோயில்கள், கல்வெட்டுகள் போன்று பல் வேறு சிறப்பம்சங்கள் நிறைந்து காணப்படுவதால் சுற்றுலா பயணிகளின் வருகை ஆண்டு தோறும் அதிகரிக்கின்றது.

சுற்றுலா பயணிகளின் வருகைக்கு ஏற்ப ஹோட்டல்கள், ரெஸ்ரோரண்டுகளின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.(அ–2)

# காலி டெஸ்ட்: மஹேல அபாரம்;ஏனையோர் திணறல்



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகியது.

போட்டியின் ஆரம்பத்தில் சரிவிலிருந்த இலங்கை அணியை, அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன அபாரமாக விளையாடி 289 ஓட்டங்கள் வரை எண்ணிக்கையை உயர்த்தி மீட்டார் என்றே சொல்ல வேண்டும்.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய திரிமன்னே 3 ஓட்டங்களும், திலகரத்ன டில்சான் 11 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

ஜேம்ஸ் அண்டர்சன் அபாரமாக பந்துவீசி திரிமன்னே, சங்கக்கார (0) ஆகியோரை அடுத்தடுத்த பந்துகளில் வீழ்த்தி அதிர்ச்சியளித்தார்.

பின்னர் களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும், திலான் சமரவீரவும் எண்ணிக்கையை 67 ஓட்டங்களுக்கு உயர்த்தியபோது 20 ஓட்டங்கள் எடுத்த சமரவீர ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக களமிறங்கிய சண்டிமல் (2 பவுண்டரிகள், 2 சிக்சர்களுடன்) 27 ஓட்டங்கள் எடுக்க அணியின் எண்ணிக்கையை இவரும் ஜெயவர்த்தனவும் இணைந்து 128 ஓட்டங்களுக்கு உயர்த்தினர்.

அப்போது சண்டிமல், சமீத் பட்டேலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தனவும் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் சதம் கடந்த ஜெயவர்த்தனவும், ஹேரத்தும் அணியின் எண்ணிக்கையை 253 ஓட்டங்களுக்கு கொண்டு சென்றனர். ஆனால் அதில் ஹேரத் 5 ஓட்டங்கள் மட்டுமே.

ஜெயவர்த்தன சதம் கடந்த பிறகு 68 ஓட்டங்களை வெகு விரைவாக எடுத்தார்.

மொத்தமாக இங்கிலாந்து 4 பிடிகளைத் தவறிவிட்டது.

கடைசியாக ஆட்டம் முடிபடையும் தறுவாயில் அண்டர்சன் பந்தில் ஜெயவர்த்தன கொடுத்த பிடி பனேசரின் கைகளில் எளிதாக வந்து உட்கார்ந்தபோதும் தட்டுத்தடுமாறி விட்டுவிட்டார்.


மீண்டும் அவரே ஒரு எளிதான பிடியை ஸ்ரூவர்ட் பிரோட்டின் பந்தில் விட்டுவிட்டார். இல்லையெனில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்திருக்கும்.

ஜெயவர்த்தன 20 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 290 பந்துகளில் 168 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவருடன் வெலகெதர 10 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

முதல்நாள் ஆட்டநேர முடிபில் இலங்கை அணி 90 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இங்கிலாந்து தரப்பில் அண்டர்சன் 3 விக்கெட்டுக்களையும், சமீத் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும், பிரோட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



மஹேல ஜெயவர்த்தன முப்பதாவது சதம்

இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தனது கிரிக்கெட் வாழ்க்கையில் 30 ஆவது சதத்தை எடுத்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தின் போதே மஹேல ஜெயவர்த்தன இந்த சாதனையைப் படைத்தார்.

தனது 129-து டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் மஹேல ஜெயவர்த்தனஅதில் 10,000 க்கும் அதிகமான ஓட்டங்களை எடுத்துள்ளார்.

1997-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், இந்திய அணிக்கு எதிராக கொழும்பிலுள்ள ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை அவர் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்புலிகளின் ...

குறித்த விசாரணையை பயங்கரவாத புலனாய்வு பிரிவு மீள ஆரம்பித்துள்ளது.

இவ்விமானம் காயமடைந்த சிப்பாய்கள் உட்பட பாதுகாப்பு படையினரை ஏற்றிச் செல்வதற்காக விமானப் படையினரால் பெறப்பட்டிருந்தது.

பலாலியிலிருந்து அநுராதபுரத்திற்கு புறப்பட்டு 10 நிமிடங்களில் இவ்விமானம் வில்பத்து காட்டில் வீழ்ந்தது.

இவ்விமானம் வீழ்வதற்கு முன் அதன் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக விமான ஊழியர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதில் விமான ஊழியர்கள் நால்வர் மற்றும் பாதுகாப்பு படையினர் 36 பேர் பலியாகினர்.

இவ்விமானத்தை வில்பத்து தேசிய பூங்காவிலுள்ள மறைவிடமொன்றில் இருந்து தோளில் சுமந்து செல்லும் ஏவுகணை ஒன்றை பயன்படுத்தி தாக்கியதாக மேற்படி சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இவர்கள் கிளிநொச்சியில் வைத்து இரு வாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விரு சந்தேக நபர்களும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் விரைவில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.(எ-11)

## ஜெனிவா தீர்மானத்தால்...

வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனிவா கூட்டத்தொடரில் பங்குகொண்ட அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க, டக்ளஸ் தேவானந்தா, ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜெனிவாத் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை எனத்தெரிவித்த அமைச்சர் பீரிஸ் இத் தீர்மானம் ஒரு உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேச விவகாரமாக்கியிருக்கின்றது எனவும் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது,

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் எமது நிலைபாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. எந்தவொரு வெளிநாட்டு அழுத்தத்திற்கும் நாம் அடிபணியப் போவதில்லை.

அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராக எமக்கு ஆதரவளித்த நாடுகள் மற்றும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத நாடுகள் என்பன எமது நிலைப்பாட்டை பாராட்டியுள்ளன.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தமது பணியை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கும் என அமைச்சர் கூறினார்.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கை தூதரங்கள் சிலவற்றை மூடிவிட்டு போலந்து, நெதர்லாந்து, ஆஸ்திரியா, நோர்வே, சுவீடன் நாடுகளுடனான விவகாரங்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரேயொரு தூதரகத்தை மாத்திரம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

எனினும் பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதரகங்கள் தொடர்ந்தும் இருக்கும் எனவும் மூடப்படும் தூதரகங்களுக்கு பதிலாக ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா, ஆசிய நாடுகளில் தூதரகங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் அச் செய்திகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகையில், எம்மிடம் மட்டுப் படுத்தப்பட்டுள்ள அளவிலான வளங்களே உள்ளன. இவ் வளங்கள் வியூக முக்கியத்துவம் உள்ள இடங்களுக்கு பகிரப்படவேண்டும் உதாரணமாக ஆபிரிக்காவில் எமக்கு நான்கு தூதரங்களே உள்ளன. எனவே அங்கு கவனம் செலுத்தப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம். இது ஜெனிவா பிரேரணைக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

இதேவேளை ஜெனிவாப் பிரேரணை குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்த கருத்தின் பின்னர் ஜெனிவாவில் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதற்கு இந்தியத் தூதுக் குழுவினர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்தும் செய்தியாளர்கள் வினவினர். அப்போது இந்த முயற்சிகளில் அல்லாமல் இறுதி வாக்கெடுப்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

அத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் கூறியதன் பின்னர் அவர்கள் என்ன நட வடிக்கை மேற்கொண்டார்கள் என்பது பிரச்சினையில்லை. இறுதிவாக்கெடுப்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும். அந்த உரையில் நேரம், தன்மை, வலிமை என்பன ஜெனிவாவில் புலப்படக் கூடிய மாற்றத்தை ஏற்படுத்தியது என அவர் கூறினார்.

இந்தியாவின் தீர்மானம் அதிர்ச்சியாக அமைந்ததாகவும் இந் நடவடிக்கையினால் இலங்கை அரசாங்கம் ஏமாற்றம் அடைந்ததாகவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார். (எ-11)

## ஜெனிவாத் தோல்வி...

விதிமுறைகள் மற்றும் நடைமுறைமுறைகளின் பிரகாரம் சம்பந்தப்பட்ட நாட்டின் இணக்கப்பாட்டுடன் மட்டுமே தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும் எனச் சுட்டிக் காட்டியிருக்கும் இலங்கையின் வெளிவிவகாரத்துறை வட்டாரங்கள்,

இலங்கையைக் காப்பாற்ற இவ்வாறான மாற்றங்களை இந்தியா மேற்கொண்டதாக கூறப்படுவதை ஏற்க முடியாது எனவும் திட்டவட்டமாக கூறினார்.

நகல் வரைவை இந்தியா மாற்றியமைத்தது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் மனித உரிமைகள் பேரவையின் நடைமுறை விதிகளில் உள்ளடக்கப்பட்டவற்றையே அவர்கள் பிரேரணையில் இணைத்துக் கொண்டார்கள் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடனும் கலந்தாலோசனையுடனும், அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் என்ற நகல் வரைவே திருத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடும் அதிகாரிகள், இவ்வாறான திருத்தத்தினால் இலங்கைக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை எனவும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஏனெனில் இது ஐ.நா.விதிமுறைகளிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில், பிரேரணையை இலங்கைக்கு சார்பாக சமநிலைப்படுத்துவதற்காகவே இந்தியா முயற்சிகளை மேற்கொண்டது எனக் குறிப்பிட்டிருக்கிறார். பிரேரணைக்கு ஆதரவளித்தமையால் இந்தியா மீது சீற்றங்கொண்டுள்ள இலங்கையைச் சமாதானப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

இருந்தபோதிலும் இந்திய தரப்பின் இந்த சமாதானத்தை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை தரப்பு தயாராகவில்லை என்பதையே கொழும்பிலிருந்து வெளியாகும் அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. இவ்விடயத்தில் இலங்கை தரப்பு பெரும் சீற்றமடைந்த் நிலையில் இருப்பதை கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில, சிங்கள பத்திரிகைகளின் செய்திகளும் புலப்படுத்துகின்றன.

இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதென இந்தியா அறிவித்த பின்னரே இலங்கைக்கு ஆதரவான் நாடுகள் பலவும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்தன என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனிவாவில் இலங்கை சந்தித்த தோல்விக்கு இந்தியாவே பிரதான காரணம் எனவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இந்த நிலையில் இந்திய எதிர்ப்பு கொழும்பில் மீண்டும் தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## 384 முன்னாள்...

மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்களிடம் கையளிக்கப்படவுள்ள இந்தக் குழுவினரில், மாணவ மாணவியரும் அடங்குவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சமூக மயப்படுத்தப்படவுள்ளவர்களுக்கு ஏற்கெனவே தொழிற்கல்விகள் பயிற்றுவிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.(எ-11)


## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகா தேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உண்டு.

கணித ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர் } பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

கணனி ஆசிரியர் - பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப்சயிற் டிசையின் பண்ணக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமுள்ள 21 முதல் 65 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி : 05.04.2012

திரு. தி. இராசநாயகம்
தலைவர்
மகா தேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொ.பே. இல. : 0770604950, 0214923118

## அமைச்சர்...

தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபையின் பணிப்பாளரை நியமிப்பது தொடர்பில் எழுந்த முரண்பாடே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தொண்டமான் அரசாங்கத்தை விட்டு விலகும் வகையில் முதல் கட்டமாகத் தனது அமைச்சு பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்வதற்காக சமர்ப்பித்த கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகமான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் கலந்துரையாடியுள்ளார். (எ-11)

## எங்களின் அனுமதி இன்றி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

போரின் பின்னரான காலகட்டத்தில் பல விதமான முன்னேற்றத்தை நாம் காட்டினோம். அதுபோன்று எதிர்காலத்திலும் முன்னேற்றங்களைக் காட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடனான திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். நல்லிணக்க முயற்சிகளை நாம் எவ்வாறு முன்னெடுத்து வருகின்றோம் என்பதை மனித உரிமைகள் பேரவையில் நிகழ்த்திய உரையில் நான் கூறியிருந்தேன்.

குறிப்பாக கடற்படை மற்றும் இராணுவம் மேற்கொண்டு வரும் விசாரணைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட முழுமையான எமது வேலைத்திட்டங்கள் தொடர்பாக நான் குறிப்பிட்டேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் நான் முழுமையாக என்னுடைய பொறுப்பைச் செய்தேன். வெளிவிவகார அமைச்சரும் இவ்விடயத்தில் கடுமையாக உழைத்தார்.

மனித உரிமைகள் பேரவையில் எமக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும்கூட, எமது உடன்பாடோ அல்லது இணக்கப்பாடோ இல்லாமல் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் எமது உள்நாட்டு விடயங்களில் தலையிட முடியாது. அத்துடன் எமது இணக்கப்பாடின்றி, மனித உரிமைகள் ஆணையாளரினால் இலங்கைக்கு ஆலோசனை வழங்கவும் முடியாது. இது திருத்தப்பட்ட பிரேரணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். (எ-11)

## இராணுவ நீதி...

அரசாங்கத்தினால் இராணுவ நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

கிளிநொச்சியை மையமாகக் கொண்டியங்கும் இந்த இராணுவ விசாரணைகள் சுமுகமாக இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்திருக்கும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரூவான் வணிகசூரிய, இந்த விசாரணைகளுக்கு காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இது ஒரு நீண்ட செயன்முறை எனக் குறிப்பிட்ட அவர், பலரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டிருப்பதாகவும் அந்த விபரங்கள் தொகுக்கப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் இதற்கான காலவரையறை ஒன்றை வகுத்துக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தைப் போலவே கடற்படையும் விசாரணை ஒன்றை நடத்தி வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam
Sponsor/Settlement Visa
DMI COMPUTER EDUCATION
# British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்
# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No. 113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-226 2470
சாவகச்சேரி No. 174, கண்டி வீதி, Tel.: 021-227 0243

முக்கிய அறிவித்தல்
A/L 2013, 2014 மாணவர்களுக்கான எனது பொருளியல் வகுப்புக்கள் New Science Hall யாழ்நகர், AAC அரியாலை, CCA சுன்னாகம், Shamrock ஈச்சமோட்டை, Accounting College கல்வியங்காடு, College of Accounting சாவகச்சேரி மற்றும் வடமராட்சியில் Group Classes ஆகிய இடங்கள் தவிர வேறு எங்கும் நடைபெறுவதில்லை என்பதனை பெற்றோர்கள், மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும். (8025)
பொருளியல்
K. பிரதீபன் (BBA)

நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
O/L DAY CLASS
ஆரம்பம்: 02.04.2012
திங்கள் 8 am
(வழமையான ஆசிரியர் குழு) (8023)
"கடந்த வருடம் முழு மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்"

வான் விற்பனைக்கு
HE xxxx தொடரிலக்கம் கொண்ட வெள்ளை நிற ஹயஸ் வான் (Auto Gear, Adjustable seat) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0779581534 (C-6176)

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-) (8015)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

Jaffna Sivagamy.Com
இணையத்தளம் ஆரம்ப நிலையிலுள்ளது
❖ நாட்டின் 9 மாகாண தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பார்வையிடலாம்.
❖ மங்கல, பொது நிகழ்வுகள், மரண அறிவித்தல், நினைவஞ்சலிகள் இலவசமாக இணைக்கப்படும்.
❖ இணைய, மின்னஞ்சல் அறிவுடன் கலைத்துவ ஆற்றலுள்ளோர் பிரதேச ஊடகவியலாளராகச் சேர்க்கப்படுவார்கள்.
❖ தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் இணைக்கப்படுவார்கள்.
❖ சுயவிபரம், தகைமைகள், கைத்தொலைபேசி இலக்கத்துடன் sivagamy26vt@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும் (C-6158)

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
வேள்வித் திருமகன்
(திருப்பாடுகளின் காட்சி)
காலம் : மார்ச் 29, 30, 31, ஏப்ரில் 01 - 2012
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) - நான்கு நாள்களுக்கு
நேரம் : மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு
பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.
இம்முறை 'வேள்வித் திருமகன்' நாடக நூலினையும் பெற்றுக் கொள்ளலாம்.
இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்
தொலைபேசி : 021 222 2393 (C-6151)

BEACON கல்வி நிலையம்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014
பிரிவு - 2
வர்த்தகப் பிரிவு
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : புகீரதன்
வணிகக்கல்வி : முரளி (8020)
ஆரம்பம் : 31.03.2012 (சனி - 8.00 மணி)

CCTV CAMERA
ONE MONTH FREE SMS ALERT !
உங்கள் வியாபார நிறுவனத்தில் அல்லது வீடுகளில் எவரும் இல்லாத நேரங்களில் அல்லது இரவு நேரங்களில் திருடர்களின் நடமாட்டம் தென்பட்டால் உங்களுடைய கைத்தொலைபேசிக்கு உடனடியாக SMS அனுப்பப்படும்.
- இணையத்தளம், கைத்தொலைபேசி மூலம் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவைகள்.
மேலதிக் விபரங்களுக்கு 075 9997798




உங்கள் வியாபார நிறுவனங்க்ளை, வீடுகளை மற்றும், சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன் யாழில் உங்களுடன் நாம்...
Hotline 021 5 676767
AJ SYSTEMS | (PVT) LTD
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
இல. 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel : 0212219234 email: info@aj-sys.lk web: www.aj-sys.lk

இப்பத்திரிகை வலம்புரி அச்சகம் நிறுவனத்தாரால் இல. 3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.